பிராயச்சித்தம்

லா.ச.ராமாமிருதம்

வானதி பதிப்பகம்

பிராயச்சித்தம்

லா. ச. ராமாமிருதம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

வானதி முதற் பதிப்பு : மார்ச் 1997

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 30-00

Title	Prayasitham
Subject	Novel (Tamil)
Author	L. S. Ramamirutham
Edition	Vanathi First Edition March, 1997
Paper	11.6 Kg. Mysore Cream Wove
Pages	184+4=188
Price	Rs. 30-00
Published by	Vanathi Pathippagam 13 Deenadayalu Street T. Nagar Chennai-600 017

நேரு அச்சகம், 43, அம்மையப்பன் தெரு, சென்னை—600 014

கல் சிரிக்கிறது

''பிராயச்சித்தம்'' எனும் இந்த நாவல் அதன் முழுமையிலும் தன்னிறைவிலும்தான் உங்கள் முன் வைக்கப்படுகிறது.

ஆயினும் ''கல் சிரிக்கிறது'' பாத்திரங்களே இந்த நாவலிலும் நடமாடுகிறார்கள். கதையைச் செலுத்திக்கொண்டு போகிறார்கள்.

இதைப் படிப்பவர்கள், முன் புத்தகத்தோடு சேர்த்துப் படித்தால், ஒரு தர்க்கரீதியாக (logical) சுவாரஸ்யமும் அகன்ற பார்வையும் (vision) கிடைக்கக்கூடும்.

தலைப்பு எப்படியிருந்தால் என்ன? இதிலும் கல் சிரிக்கிறது. எப்பவும் கல்தான் சிரித்துக் கொண்டிருக்கும். அதுதான் உண்மை. உண்மையே அதுதான்.

லா. ச. ராமாமிருதம்

பிளாட் 242, கிருஷ்ணன் தெரு
ஞானமூர்த்தி நகர், அம்பத்தூர்
சென்னை—600 053

ஆசிரியரின் பிற நூல்கள்

அவள்

சிந்தா நதி

என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு

நேசம்

மீனோட்டம்

இதழ்கள்

தயா

உத்தராயணம்

ஜனனீ

பச்சைக்கனவு

அபிதா

அலைகள்

பாற்கடல்

அஞ்சலி

கல் சிரிக்கிறது

பிராயச்சித்தம்

1

ஆபீஸிலிருந்து கோமதி வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள்.

இன்று காலை, வழக்கம்போல் அவசரத்தில் வாரி முடிகையில், பின்னி தொங்கவிட்டுக்கொண்டு போன நாளெல்லாம் மறந்துகூட போச்சு. வலது காதோரம், வாரலில் நாலு நரை மயிர்கள் மின் எனப்பட்டு உடனேயே கூந்தல் அடையில் மறைந்துகொண்டன. மீண்டும் சோதிக்க நேரமில்லை. ஆனால் வாஸ்தவத்தில் அதுபற்றி கோமதிக்கு அக்கறையுமில்லை. இப்போ நடையின் அவகாசத்தில் பல குருட்டு யோசனைகளுக்கிடையே அந்த நினைவும் வந்து, கூடவே அது தொட்டு எழுப்பிய வேறு எண்ணங்களும் தொடர்ந்தன. ஆமாம் இந்த மூணு வருடங்களில் சோதனைகள் ஒண்ணா, ரெண்டா?

இயல்பாகவே, கோமதிக்கு தன் தோற்றத்தில் கவனம் குறைவுதான். அதுபற்றி ஆபிஸில் பெண் சகாக்கள் ஜாடையாக நமுட்டினாலும், 'சூள்' கொட்டிவிடுவாள்.

''ஆமா எனக்கு மறு சுயம்வரம் நடக்கப்போறதாக்கும்!'' அப்புறம் அவர்களின் மேல் பேச்சுக்கு வழியில்லை.

நாளுக்கு நாள் வாழ்க்கை என்ன யந்திரம், சே! என்னத்தையோ பொங்கி அள்ளிப் போட்டுண்டு, அதையே, கையிலும் கட்டிண்டு வேலையில் இறங்கினால்...

லெட்ஜர், பாஸ் புக், கிளியரிங், கத்தை கத்தையாக காசோலைகள், பக்கம் பக்கமாய்க் கூட்டல், டைப்பிங், டெஸ்பேட்ச், பாலன்ஸிங், வங்கிவேலை மாற்றி மாற்றி வேறென்ன! சக்கை பிழியறது, யூனியன், வேலை நிறுத்தம், உரிமைகள், முதலாளித்துவம், பாட்டாளி என்று பல்லவி பாடிக்கொண்டு, நிதிகளை விழுங்கிக் கொண்டு வேலைசெய்யாமல் கடிகாரமுள்ளைப் பார்த்துக் கொண்டு, காலத்தை ஒட்டும் கழுப்புணிகள் இருந்தாலும், கூடவே பிள்ளை குட்டிக் கவலை, மானம், லட்சியம், உப்புணர்வு, மனசாட்சி என்ற டமாரம் அடிக்காவிட்டா லும், தலையில் அடித்துக் கொண்டேனும் வேலை செய் பவர், அந்தப் பட்டாளம் வரவர சிறுத்துக்கொண்டே போனாலும் இப்போதைக்கு இருக்கத்தானே இருக்கு. கழுப்புணிகள் வேலை சுமையும் அவர்கள் தலையில்தானே சேர்ந்து விழுகிறது. இந்த அவலத்தை நினைத்துப் பார்த் தால் ஒரு ஒரு சமயம் என்ன அருவறுப்பாய் இருக்கு தெரியுமா! வேலையை விட்டுவிடலாம் என்று தோணறது. ஆனால் இந்த சம்பளம் வேறு எங்கே கிடைக்கும்? நாம் வேறு எந்த வேலைக்கு லாயக்கு? நமக்குப் பொதுமக்களின் அனுதாபமும் கிடையாது. நமக்கு சுயமரியாதையும் கிடை யாது. இந்த நிலையில் எதில்தான் செமத்துஇருக்கும்.

ஆனால் ப்ரசாந்த் இருக்கிறானே!

ப்ரசாந்த் நினைப்பு வந்துவிட்டதும் நடை தானே விரைந்தது. கொஞ்ச நாளாய் ப்ரசாந்த், ஒரு நாய்க்குட்டி சிநேகம் பிடிச்சிண்டிருக்கான். அதன் கழுத்தில் ஏற்கெனவே கட்டியிருந்த ஒரு ரிப்பனைப் பிடிச்சு வீட்டுக்கு இழுத்துண்டு வந்துட்டான். தானே அதைக் குளிப்பாட்டறதும், சோறு ஊட்டறதும், மடியில் வெச்சுக் கொஞ்சறதும், காதைப் பிடிச்சுத் தூக்கி அதன் கத்தலோடு தானும் கத்தறதும்—வேணதரம் சொல்லியாச்சு திட்டி யாச்சு அடிச்சும் ஆச்சு—ஊஹூம். அவள் ஜம்பம் சாயல்லே.

என்னிக்குக் கொத்தா சதையைப் பிடுங்கப் போறதோ —ஸ்ரீராமன் துணை. ராபிஸ் கீபிஸ் எங்கேயோ, படித்த ஞாபகம், கடித்தவுடனேயே தலைதூக்கணும்னு இல்லை யாமே! ரத்தத்திலேயே ஊறி; விஷயம் மீறிபபோன பின் ஆள் குலைக்க ஆரம்பிக்கலாமாமே! நெனச்சுப் பார்க்க முடியல்லே. இன்னிக்கு ப்ரசாந்த் தூங்கற சமயம் பார்த்து ரோஸியை எங்கானும் கொண்டு போய் விட்டுடணும்! குழந்தை கொஞ்ச நாளைக்கு ஏங்கிப் போவான். ரோஸி யும் பாவம்தான். இப்படிப் பார்த்துப் பார்த்துத்தான், மனசைத் திடம் பண்ணிக்க முடியாமல் வளையில் வகையா மாட்டிண்டாச்சு.

இடிந்த கோட்டைகளில் அலைந்து கொண்டிருந்த மனம் வேறு சத்தங்கள் கேட்டு மீண்டபோது, தான் வழி மாறி வந்துவிட்டதை உணர்ந்தாள். எங்கே இருக்கோம்?

எதிரே தெருவோரம் கும்பல் accident? இல்லை, சண்டையா? இல்லை இல்லை. கும்பல் நடுவிலிருந்து புல்லாங்குழல் சத்தம். ஓ ப்ளாட்ஃபாரம் வித்வான். லேசான கேலி உதட்டோரம் சுழித்தது. ஆனால் அதன் இனிமை பறறியிழுத்தது. யார் இவ்வளவு நன்னா... ருசி யாக என்றுகூட சொல்லும்படி—

‘ ஐயா கொஞ்சம் இடம் விடறீங்களா?’’

அவளுடைய ஆர்வம் கண்டு இடம் விட்டவர், ‘‘இங்கே கூட Ladies firstஆ? எனச் சிடுசிடுத்தவர் நடுவே எப்படியோ முண்டியடித்து கூட்டத்தின் முன் அலையில் சேர்ந்துவிட்டாள். வாசித்துக்கொண்டிருந்த ஆளையும் பார்த்துவிட்டாள்.

அவரை எப்படி மறக்க முடியும்? My God!

ஆள் எதிரே விரித்திருந்த துண்டில் சில்லரைகள் பெய் திருந்தன. இன்னும் லேசாக விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்தன.

அவள் செயல் அவள் வசம் மீறிவிட்டது. அருகே சென்று,

''ஸார்!''

மனிதனுக்குக் கேட்கவில்லை. தன் வாசிப்பில் அப்படி இழந்திருந்தான்.

இன்னும் அருகே இன்னும் தாழ்ந்த குரலில் ''தர்ம ராஜன் ஸார்!''

கூட்டத்திலிருந்து அதட்டல்கள் கிளம்பின. ஆனால் அவள் பொருட்படுத்தவில்லை. அவள் வசத்தில் அவள் இல்லை. திடீரெனக் கலவரம் அதிகரித்து அவளைத் தன் நிலைக்குக் கொணர்ந்தது.

''ஐயா, இவர் என் அப்பா. நெடுநாளா நான் தேடிண்டிருக்கிற அப்பாரு.''

அந்த ஆள் எழுந்திருக்க முயன்றான். ரொம்ப நேரம் சப்பளம் கொட்டி உட்கார்ந்திருந்ததால், கால்கள் திமிர்த்துவிட்டன. போயிருந்த தடம் கலைந்து சுற்று முற்றும் நோக்கினான்.

''ஐயா கெஞ்சிக் கேக்கறேன் தயவுசெய்து கலைஞ்சுப் போங்க ஐயா, எங்கள் நிலை புரிஞ்சுக்கங்க, வேடிக்கை பார்க்காதீங்க!''

அவளுடைய கூப்பியகரங்கள், வழிந்தோடும் கண்ணீர், உடைந்த குரல் கண்டு கூட்டம் கலகலத்து நடுவில் பெரிதாக விண்டு மேலும் மேலும் கழன்று கிசுகிசு மொசு மொசு கலவரத்துடன் கலைந்து அடியோடு கரைந்தும் போயிற்று. எஞ்சி அவர்கள் இருவர் மட்டுமே நின்றனர்.

அவள் கை கொடுத்துத் தூக்குமுன் சமாளித்து தாமே எழுந்து நின்றுவிட்டார்.

''எது நேரக்கூடாது என்று எத்தனை சிரமத்துடன் விலக்கிக்கொண்டிருந்தேனோ அதுதான் நடந்துவிட்டது. கடவுள் சித்தம் அப்படி இருக்கிறது போலும்!''

புன்னகை புரிய முயன்றார்.

"உங்களுக்கும் எனக்கும் இன்னமும் கடவுள் இருக்கானா ஸார்!" கோமதி விக்கி விக்கி அழுதாள்.

"உஷ்! எங்கு இருக்கோம் தெரியுமோன்னோ? கடவுள் இருக்கானோ இல்லையோ, அவன் இல்லை என்று சொல்வதைக்கூட பாஷை அவர் இருக்கிறமாதிரிதானே பேசறது!"

மறுபடியும் அந்தக் குஞ்சிரிப்பு கவர்ச்சியாக இருந்தது. ஆனால் மழைகாலத்துப் பிறைபோல் தெம்பில்லாமல்.

"என்னால்தானே ஸார், இப்படியெல்லாம் உங்களுக்கு!" அவள் மூக்கை உறிஞ்சினாள்.

"உஷ் கோமதி. இது தெரு, நினைவு படுத்திக் கொள்..."

"ஆனால் இப்படி நேர்ந்ததால்தானே மறுபடியும் இப்போ கிடைச்சுட்டேள்!"

அதற்குப் பதில் இல்லை. பதில் பேச இஷ்டமில்லையோ என்னமோ? துண்டை எடுக்கக் குனிந்தார். ஆனால் அவள் முந்திக்கொண்டு, டவலுள் சில்லரையை குலுக்கிச் சேர்த்து எடுத்துத் தன் பையில் (bag) போட்டுக் கொண்டு, துண்டை அவர் தோளில் போட்டாள்.

"சரி, வாங்கோ போகலாம்."

"எங்கே?"

"வீட்டுக்குத்தான்."

நடந்தனர். அவர்களிடையே அவர் கணக்கில் ஏதோ தூரத்தைக் காப்பாற்றிக் கொண்டு வந்ததுபோல் பட்டது. எப்படியும் இருவரிடையிலும் ஒரு லஜ்ஜை தன் கள்ளத்தனத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டிக்கொண்டிருந்தது.

"உன் வீட்டுக்குப் போகும் வழி இது இல்லைபோல இருக்கே! நீ கோடம்பாக்கம் மேம்பாலத்தடியில் இப் போது இல்லையா?"

"இல்லை. மேம்பாலத்தடியில் வேண்டிய வெள்ளம் பாய்ஞ்சாச்சு."

திகைத்தார். "அது கொஞ்சம் posh இடம் இல்லை? அங்கே கூடவா வெள்ளம்?"

சிரித்தாள். "வெள்ளம் இல்லே ஸார். அது ஒரு இங்கிலீஷ் பிரயோகம். உங்களுக்கு நான் சொல்லித் தரணுமா ஸார்?"

"ஓ!"

"ஸார் இங்கே எங்கானும் காப்பி சாப்பிடுவோமா?"

சொல்லி வைத்தாற்போல, உடனேயே, எதிர்ப்பட்ட ஹோட்டலில் நுழைந்து, ஜன்னலோரம் ஒதுக்கமாக இருந்த தனி மேஜைக்கு எதிரே இருவரும் அமர்ந்தார்கள். ஸெர்வர் வந்ததும் அவள் அவசரமாக, "நீங்கள் காப்பி யோடு நின்னுடுவேள். ஆனால் எனக்குப் பசிக்கிறது. ரெண்டு பூரி ஸெட், Please." அவன் போனபின் இருவரும் சில நிமிடங்கள் பேசவில்லை. மௌனமான அவள் பார்வையின் அணைப்பு அவருக்கு இம்சையாயிருந்தது. அவர் கைகள் இசைவில் அமர இடம் தேடின.

"ரொம்ப நன்னா வாசிக்கறேள் சார். உங்களுக்கு வாசிக்கத் தெரியும்னு எனக்குத் தெரியாது."

"ஓ, இது கடையில் வாங்கிய குழாய். இதற்கு முன் னால் ஒன்று வைத்திருந்தேன். ஒரு சப்பாத்திப் புதரண் டைக் கிடந்ததைக் கண்டெடுத்தது. அந்த மூங்கிலே வேறு, நாதமே வேறே. மேலே மேலே தானே இழுத் துண்டு போகும்."

"அப்போ அது எங்கே?"

கையை விரித்து உதட்டைப் பிதுக்கினார்.

''காணாமல் போயிடுத்தா? எப்போ?''

''நடந்ததெல்லாம் நடப்பதற்கு முன்னால்.''

மறுபடியும் அந்தப் புன்னகை அவளை வாயடைக்கும் புன்னகை.

ஸெர்வர் வந்து டிபனோடு தட்டுகளை வைத்து விட்டுப் போனான். திடீரென்று கண்டுவிட்ட பசிக்கு ஆச்சர்யப்படக்கூட நேரமில்லை. அத்தனை பசி. பூரியைக் கிழித்துத் தின்ன ஆரம்பித்தாள்.

ஆனால் அவரிடம் அந்த அவசரமில்லை. என்றைக் குமே மனிதரின் நாசூக்கு அவரைத் துறந்ததில்லை. இரண்டு விரல் நுனிகளால் சின்னதாக விண்ட விள்ளலால், கிழங்கை ஒற்றியெடுத்தார்.

''கோமதி சௌக்யமாகயிருக்கையா?''

''எந்த அர்த்தத்தில் கேட்கிறீர்கள்?'' ஒரு முழுங்கு தண்ணீரைக் குடித்துவிட்டு, மீண்டும் உண்டியைத் தாக்கினாள்.

''சாதாரணமாக என்ன அர்த்தமோ, அப்படித்தான் கேட்கிறேன்.''

''நாம் சிலம்பம் விளையாட வேண்டாம் ஸார்.''

அவள் விழிகள் நிறைந்தன.

''என்ன கோமதி, நீயா எதையோ நினைத்துக் கொண்டு, குழாயைத் திருப்பி விட்டுக்கொண்டே... சே, சே!''

''அதுக்கில்லே ஸார், உங்களைப் பார்த்து இன்னும் நார்மல் ஆகல்லே. ஆகவும் மாட்டேனோ என்னவோ? சரி அது இருக்கட்டும். உங்கள் கேள்விக்குப் பதில். வேலையில் ஒரு சின்னப் பதவி உயர்வு, அதற்கு allowance, இந்த மூணு வருஷங்களில் grade movement, எல்லாம் சேர்ந்து ஏறக்குறைய இரண்டாயிரம் Clear பண்றேன் ஸார்.''

"Good, good. கேட்க சந்தோஷமாயிருக்கு. உன் ஆத்துக்காரர் எப்படியிருக்கார்?"

"என்னைக் கேட்டால்? பையன் நன்னாயிருக்கான். ஸார் இந்தக் காப்பி ரொம்ப நன்னாயிருக்கு இல்லை?"

"இதென்ன மளிகைக்கடை செட்டியார் பாஷை? பப்பு இருக்கா என்று கேட்டால் உப்பு இருக்குன்னு பதில் சொல்ற மாதிரி! இப்போ யார் சிலம்பம் விளையாடறா?"

அவள் சிரிப்பில் ஆவி பறந்தது. "நம்ம பேச்சு தொடற விஷயம் அப்படி இருக்கே, என்ன ஸார் டிபனை சும்மா குதறிவிட்டிருக்கேள். காப்பியும் சாப்பிடல்லே. அன்னிக்கு A/c ரூமில் காப்பி சாப்பிட்டோமே ஸார், நினைவிருக்கா? ஸார், எனக்கு உங்களைப்பத்தி எதுவும் மறக்காது. சரி போவோமா?"

யோசனையில் கோப்பையில் ஸ்பூனைப் போட்டுக் கிளறிக்கொண்டிருந்தவர் அவளை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை புரிந்தார்.

ஸாஸரில் இருந்த பில்லோடு, அதற்குரிய பணத்தை அவள் வைத்துவிட்டு இருவரும் எழுந்து ஓட்டல் வாசலுக்கு வந்ததும்,

"ரிக்ஷா!" கைதட்டிக் கூப்பிட்டாள்.

"ஏன் கோமதி? நடந்தே போயிடலாமே!"

"இல்லே ஸார்" கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். "நடந்தால் நேரமாகும். ரிக்ஷாவில் பத்தே நிமிஷம். தவிர குழந்தை நர்ஸரியிலிருந்து வந்திருப்பான்."

"அப்போ நான் வரட்டுமா?"

அவர் பக்கம் சட்டெனத் திரும்பின அவள் முகம் உத்திரம் கக்கிற்று.

"என்ன ஸார் சொல்றேள்? இந்தத் தடவை நீங்கள் என்னிடமிருந்து அவ்வளவு சுலபமாத் தப்பிக்க விட்டுடுவேனா?

சைக்கிள் ரிக்ஷாவில் ஒருவர் மேல் ஒருவர் இடிக்காமல் இருவர் உட்காரவே முடியாத நிலையில் அவர் தனிப்பட முயலும் அவஸ்தையைப் பார்க்கச் சிரிப்பாய் வந்தது. ஆனால் அவள் சிரிக்கவில்லை. இருவருமே பேசவில்லை. ஓரக் கண்ணால் கவனித்தாள். ஏற்கெனவே அவளுக்கு இருந்த ஒரு பிரமைப்படி அதை அவரிடம் அவளும் தெரிவித்திருந்தபடி, கானல் எப்போ கரைந்து போகுமோ? காக்கா ஊஷ்! இந்த சமயம் அந்த எண்ணமே அவளுக்கு ஒரு திகிலாயிருந்தது.

''இதோ இங்கேதான் நிறுத்திக்கோப்பா.''

அவர்கள் இறங்கினதும் பையன் உள்ளிருந்து ஓடி வந்தான். அவரைப் பார்த்து ஒரு கணம் திடுக்கிட்டு மறுபடியும் ஓடிவந்து அவளைக் கட்டிக்கொண்டான்.

''அம்மா அம்மா, ரோஸி ஓடிப்போயிடுத்து அம்மா! என்னைத் திமிறிண்டு போயிடுத்து.''

''கடிச்சுதா?'' பதறினாள்.

''இல்லியே!'' விழித்தான் அவன். உடல் பூரா தடவி, உறுதிப்படுத்திக் கொண்டபின், ''விட்டது சனி போ! உனக்குப் பிடிச்சதா ஒண்ணு வாங்கிண்டு வந் திருக்கேனே!'' பார்சலை அவன் முகத்துக்கெதிரே நீட்டி அவன் அதை எட்ட வந்தபோது, உயரத் தூக்கிக்கொண் டாள். ''அப்புறமா, அப்புறமா, மாமாவுக்கு நமஸ்தே சொல்லு.''

''பரவாயில்லை பையா, உன் பேர் என்ன?''

''ப்ரஸாந்த்.''

''ஓ ப்ரஸாந்த்'' அவருக்கு சாதாரணமாக அந்த வயதுப் பையனைச் செல்லம் கொண்டாடப் பிடிக்காது. ஆனால் இப்படித்தானே மாட்டிக் கொள்கிறோம்!

''வாங்கோ ஸார் உள்ளே. சீன பாஷையில் விருந் தாளியை வரவேற்கும்போது, தன் அரண்மனையையே குடில் என்பான். ஆனால் இது உண்மையிலேயே குடில்.''

"அப்போ, நீ இதை உன் அரண்மனை என்று சொல்லிக்கொள்ள வேண்டும்." கையைக் கொட்டிக் கொண்டு சிரித்தாள். "நல்ல ஐடியா. இதுவரை எனக்குத் தோணல்லியே. அடுத்த தடவை யாரேனும் வந்தால் ஞாபகம் வச்சுக்கணும். உட்காருங்கோ."

பாயை விரித்துப் போட்டு, ஒரு தலையணையையும் தட்டிப் போட்டாள். "சுவத்தோரமா சௌகரியமா சாஞ்சுக்கோங்கோ."

"மேம்பாலத்து வீட்டைவிட இது சின்னது. ஆனால் வாடகை பெரிசு. இதுக்கே இப்போ இடம் கிடைக்கல்லே. நீங்க முந்தி வந்தப்போ ஸோபா ஸெட் பார்த்திருப்பேள். அடிச்ச புயல்லே அம்மி குழவிக்குப் பதிலா அது பறந்துடுத்து. முழிக்காதேங்கோ ஸார், பாக்ஷை ஸார் பாக்ஷை!"

புன்னகை புரிந்தார்.

"இப்போ வாங்கிப் போட்டிருக்கலாம். ஆனால் எனக்கு Interest இல்லை. ஆனால இப்ப நீங்க வந்துட்டேள். வாழ்க்கையைத் திரும்ப ப்ளான் பண்ணனும்." அவள் குரலில் உற்சாகம் தெரிந்தது.

என்ன பேத்தறாள்?

"ஸார் ஒண்ணு உங்களிடம் சொல்ல விரும்பறேன். இப்போ நான் யாருக்கும் பொறுப்பில்லை. யாருக்கும் எதற்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஸார், ஒரு நிமிஷம் Change பண்ணிண்டு வந்துடறேன்."

எல்லாப் பெண்களுமே அடிப்படையில் லேசா ஹிஸ்டீரியா கேஸ்தான். சந்தோஷத்தில், அதிகப்படி சந்தோஷத்தில் இருக்கிறாள். பாவம் இருந்துவிட்டுப் போகட்டும்.

பையன் அவரைக் கவனிக்கவே இல்லை. பால்கோவாப் பார்சலை சுற்றியிருந்த மணிக் கயிறைப் பல்லால் கடித்து இழுத்து அறுக்க முயன்று கொண்டிருந்தான்.

உண்மையில் நிமிஷமாகவே வெளியே வந்துவிட்டாள். இடுப்பில் கொசுவத்தை சொருகிக்கொண்டே, "சார் என்ன சாப்பிடறேள்? டீ, பிஸ்கட்? ப்ரஸாந்துக்கு காம்ப்ளான் கலக்கப்போறேன். காம்ப்ளான் சாப்பிடறேளா?

"I am a Complon Boy" என்றான் பையன் இருந்த இடத்திலிருந்து.

"என்ன கோமதி, என்னை ராக்ஷஸன், பூதம்னு நெனச்சிண்டிருக்கையா? நேரே ஹோட்டலிலிருந்து தானே வரோம்!"

"ஆஹா, நீங்கள் ஹோட்டலில் என்ன சாப்பிட்டேள், எப்படி சாப்பிட்டேள் எனக்குத் தெரியுமே! தவிர சமையல் பண்ண எப்படியும் லேட்டாகும். என்ன பண்ணலாம், சொல்லுங்கோ. புடலங்காய் இருக்கு. ஒரு பாதி சௌ சௌ, கத்திரிக்காய், கோஸ், உருளை—உங்கள் மாதிரி என்னால் சமைக்க முடியாது."

"ஆனால் இன்னிக்கு நீங்கள் என்னை—ஐயோ வாய் குழர்றது..." உருட்டுச்சிரிப்பு. "என் சமையலைத்தான் நீங்கள் சாப்பிட்டாகணும். ஆ ஸார், அன்னிக்கு நீங்கள் பண்ணிப்போட்ட வத்தல் குழம்பு, அந்தப்ரியம்—என் ஆயுசுக்கும் மறக்க முடியாது. வத்தல் குழம்பா அது, அம்ருதமா உங்களுக்கே மறுபடி அப்படி அமையுமான்னு எனக்கு சந்தேகம்தான். தலைவிதிமாதிரி இப்போ நெனச்சாக்கூட நாக்கு ஊர்றது."

"எல்லாத்துக்கும் நினைக்கிற மனசுதான் காரணம்."

அந்த லேசான அலுப்பை, ஜாடையான விசனத்தை அவள் கண்டு கொள்ளாததுபோல் "உங்களுக்கென்ன சுலபமா சொல்லிட்டேள். உண்மையைச் சொல்லிட றேனே, இன்னிக்கு உங்களுக்கு வற்றல் குழம்பு பண்ணிப் போட எனக்குத் தைரியம் கிடையாது. முதலில் அந்தக் கலர்—அதுக்கே நான் எங்கே போவேன்?"

''சமையலில் கலர் வந்துவிட்டால் கூடவே ருசியும் வந்துவிட்ட மாதிரிதான். எல்லாவற்றிலும் பாதிக்குமேல் தோற்றம்தான் மற்றதை நிர்ணயிக்கிறது. எல்லாம் பார்க்கிறதைப் பொறுத்ததுதானே!''

''ஏமாந்து போவதும் அப்படித்தான். உங்கள் விஷயத்தில் அப்படியில்லை என்றால் அதையே பொது ரூலாகப் போட்டுட முடியறதா? சரி எப்படியும் இந்தப் பரீட்சையில் இன்னிக்கு நான் இறங்கப் போவதில்லை. பின்னால் நேரமாமலாபோறது? சரி புடலங்காய் பொரிச்சக் குழம்பு, எலுமிச்சம்பழ ரஸம்...கூடையில் ஒரு எலுமிச்சம் பழம் பார்த்தேன்... என்ன சொல்றேள் அப்பளம் பொரிச்சுடறேன்.''

''என்ன கோமதி? இதுதான் ஸிம்பிளா? சாப்பிட எனக்கு வயிறு வேண்டாமா?'' முணுமுணுத்தார்.

''ஊசித் தொண்டை, பாம்பு வயிறுன்னு வசனம் சொல்லுவா. ஆனால் உங்கள் விஷயத்தில் ஊசித் தொண்டை, ஊசி வயிறு.''

''நான் என்ன செய்ய?'' புன்னகை.

''உங்களை யார் என்ன செய்யச் சொல்றா? கோழிக் குஞ்சுக்கு Ink filler கொண்டு ஊட்டற மாதிரி உங்களுக்கும் வலுக்கட்டாயமா செலுத்த வேண்டியதுதான்.'' அவள் படு குஷியில் இருந்தாள். அடுத்தாற்போல இலை ப்ராப்ளம். ''வாழை இலை தையல் இலையெல்லாம் இங்கே பக்கத்தில் எங்கும் கிடைக்காது. ஆனால் அவை உங்களுக்குத் தேவையில்லை. உங்களுக்குப் பர்மனன்டாத் தட்டு ஏற்பாடா இங்கேயே இருக்கு.'' காட்ரெஜ் அலமாரியைத் திறந்து, பெருமையுடன் எடுத்து வந்தாள்.

' புத்தம் புதிது. இன்னும் ஒரு தடவை டிபனுக்குக்கூட ஆளல்லே—ஆமாம். சத்யமா—விட்டேன்னு நீங்கள் சொல்லமாட்டேள். அதனால் நானே சொல்லிண்டுட

றேன். ஆபீஸில் கடன் கட்டாய சேமிப்பு சொஸைட்டி ஆண்டு விழாவுக்காகக் கொடுத்தா. பாம்பே மில்ஸ் மோஸ்தர் குழி வெச்சு அழகாயில்லே? இந்தாங்கோ அடியேன் கோமதியின் காணிக்கை. பதினாயிரம் கட்டி வராகன்'' கையில் திணித்து நமஸ்கரித்தாள்.

''இதோ பார் கோமதி. கொஞ்ச நாழியா கவனிச்சிண்டிருக்கேன். உன் பேச்சு ஏதோ தாகல் மோகல் இல்லாமே, தனி கேஜில் (gauge) போயிண்டிருக்கு...''

''ஆமாம் ஸார், நான் கொஞ்சம் லொட்டை வாயா, மறை லூஸா இருக்கேனில்லே? ஸார், ரொம்ப நாள் கழிச்சு நான் சந்தோஷத்தில் இருக்கேன். என் சந்தோஷத்தைக் கெடுக்காதேங்கோ...''

'ப்ளீஸ் கோமதி...'

''ஸார்...உங்களுக்கு அதைவிடப் ப்ளீஸ். ப்ளீஸ் ப்ளீஸ். இப்போ ஒண்ணும் வேண்டாம் ஸார்...''

''அப்புறம் என்னதான் செய்வது, இது எங்கேதான் முடியப்போறது.'' குஞ்சிரிப்புடன், கைப்பையுடன் அவரிடம் வந்தாள். பையைக் கவிழ்த்ததும் சில்லறைகள் நாலாப் பக்கங்களிலும் சிதறி ஓடின.

''ஸார் டவலில் விழுந்த உங்கள் ப்ளாட்ஃபாரம் கச்சேரி ஸம்பாவனை...''

''Oh yes'' கையை நீட்டினார். அவர் முகம் வெட்கத்தில் செவறிற்று.

''No. உங்களுக்குக் கொடுக்கப் போவதில்லை. எண்ணக்கூடப் போவதில்லை. அத்தனையும் பிள்ளையார் உண்டிக்கு. இத்தோடு உங்களுடைய இந்த chapter முடியட்டும்.''

அவர் தலையாட்டலுக்குக்கூட அவள் காத்து இல்லை. கோத்ரெஜிலிருந்து உண்டியைக் கொணர்ந்து எதிரே உட்கார்ந்து ஒவ்வொரு காசாக அதனுள் போட ஆரம்பித்தாள்.

சற்றுக் கோபமாய்த்தானிருந்தது. என் நிலைமை இவள் என்ன கண்டாள்? கொஞ்சமோ நிறையவோ மாதா மாதம் இவள் சம்பளம் வாங்கற மாதிரியா, என்னுடைய அன்றாடங்காய்ச்சிப் பிழைப்பு?

''என்ன கோமதி, சாமியிருக்காரான்னு என்னை கேட்டுவிட்டுப் பிள்ளையாருக்குக் காசு சேர்த்துண்டிருக்கே?''

''ஓ, அதுவா? கொஞ்ச நாளாவே இது மாதிரி விஷயங்களைப் பத்தி யோசனை பண்ணிண்டிருக்கேன். இல்லை, யோசனை, என்னை அறியாமலே, என்னைக் கேட்காமலே தானே தோணிண்டிருக்கு.''

''Oh come on interesting!''

''ஸார், நம்முடைய செயல்கள், நம்பிக்கைகள், எல்லாம் உண்மையிலேயே நம்முடையதுதானா? குடும்பம், உறவுக்காராள், பெரியவர்கள், நம் நலனைக் கோருகிறவா என்கிற முறையில் பிறமனுஷான், மொத்தத்தில சமுதாயம், தலைமுறையாத் தாய்ப்பாலுடன் ஊட்டி ரத்தத்தில்...blood sugar மாதிரி ஊறிப்போன பழக்கங்கள் மயக்கங்கள் போதைகள்தானே! கோமதின்னு, கோமதி கோமதிக்காகவேன்னு அவளுடைய சொந்த இஷ்டங்கள், நிச்சயங்கள்...இவைகளைச் செயலாக்குவது ஒரு பக்கமிருக்கட்டும்...எண்ணமாக முதலில் எங்கே வெளியிட முடிகிறது? வாயைத் திறந்தாலே சிலுவை...நமக்குச் சிலுவையேது?... வாசல் கதவில் ஆணியால் அறைஞ்சுடறாளே? அதனால் இந்த ஜன்மேதி ஜன்மப் பழக்கவழக்கப் பிசுக்கிலிருந்து நமக்கு விமோசனமே கிடையாது.

அதனால்தான் நான் குங்குமம் இட்டுக் கொள்றேன்.'' கழுத்துக்கு மஞ்சள் கயிறைத் தாலியோடு வெளியே இழுத்து அவர் முகத்தெதிரே ஆட்டிச் சிரித்தாள். ''என் குழந்தைக்கு உடம்பு சரியில்லேன்னா, ராமர் படத்துக்கு ஊதுபத்தியேற்றி வைக்கறேன்; 'ராமா நீயிருக்க எனக்குப்

பயமான்னு பிராசமாக் கேட்டு விழுந்து விழுந்து நமஸ்கரிக்கறேன்; பொய் சொல்றேன். உள்ளே பயத்தில் மனம் வெடவெடன்னு உதறிண்டிருக்கு. படத்திலிருந்து ராமன் கருணையாப் பாக்கறதா நெனச்சுண்டு, 'ஸரி, ப்ரஸாந்த்துக்கு இனிப்பயமில்லே'ன்னு தெளிஞ்சுக்கறேன். தினப்படி சாயங்காலம் குத்து விளக்கேத்தறேன். கல்பூரம் கொளுத்தறேன். என்னைப் பார்த்துப் படம் சிரிக்கிறதோ, பரிதாபப் படறதோ உண்மையில் நடப்பதென்ன? என் வேகத்தில் நான்தான் அப்படி ஊதுவத்தியில் கணகணக்கறேன். சாம்பிராணியில் புகையறேன், கற்பூரத்தில் எரியறேன். ஆனால் வெறும் எண்ணத்தை வெச்சுண்டு என்ன பண்ணறது? அதற்கொரு வடிகால் வேண்டாமா?''

''பலே பலே!'' கைதட்டினார். 'Quite a long speech! இந்த அறிவுஜீவி கோமதி லெட்ஜருள் இத்தனை நாள் எப்படி ஒளிந்துகொண்டிருந்தாள்? இதுவரை எனக்குத் தெரியாத கோமதி!'

''நாமாகவா ஆசைப்பட்டு அறிவுஜீவிகளாறோம்? அனுபவம் ஸார். அனுபவம்'' சிரித்தாள். சிரிப்பின் கசப்பில் உதடுகள் முறுக்கிக்கொண்டன. ''நான் அறிவுக்கு ஆசைப்படல்லே. ஆனால் இப்பவே என்னுள் சில சாரங்களை அது தட்டியாச்சு. எனக்குப் பயமாயிருக்கு ஸார்!''

அவர் கையைப் பற்றித் தன் கைகளுள் வைத்துக் கொண்டாள். அவள் கைகளில் ஜுரம் அடித்தது.

''ஸார், உங்களைப் பற்றி நான் எத்தனை எண்ணி யிருப்பேன் தெரியுமா? எண்ணி எண்ணி மாரே புண்ணா யிடும். இன்னிக்கு நீங்கள் திரும்பி வந்துட்டேள். தவம் பலித்ததம்மா! எனக்குக் கிடைச்சுட்டேள். அதனாலேயே, இதுவரை பட்ட அந்தப் புண்ணே, அதன் 'விண் விண்'ணே, எண்ணிப் பார்க்கறபோது, அந்தத் தெறிப்பே அதில் ஏதோ சுகம் இருந்திருக்கும்னு இப்போ தோணறது. இதை

உங்களிடம் சொல்லி என்ன ஆகணும்; அப்படிகூடத் தோணறது. அந்த சுகம் அத்தனை அந்தரங்கமா, அரவிந்தமா—ஸார் உளர்றேனா? எனக்குப் பைத்யம் பிடிச்சுடுத்தா?''

த்ரில்.

அவர் கையைத் தன் பிடியிலிருந்து விட்டாள். அந்தத் தருணம் முன்பின் இலாமல் எப்படி வந்ததோ அப்படியே கடந்து போய்விட்டது; ஆனால் மின்னல் விழுந்தாற் போல் நெஞ்சில் கோடு கோடாக ஏதோ பள்ளங்களை ஏற்படுத்திவிட்டு

''ஸார், சாப்பிடுவோமா?''

''சமையல் ஆகிவிட்டதா என்ன? என்னோடுதானே பேசிண்டிருக்கே?''

'ஆமாம் gas அடுப்பு, ஸுமீத் வெச்சிண்டு புடலங்காய்ப் பொரிச்சக் குழம்பு ஒரு பெரிய சமையலாக்கும்!''

''சேர்ந்தே உட்காருவோமே!''

''வேண்டாம் நான் பரிமார்றேன்.''

''ஏன் அனாவசிய வேலை? இருக்கிற மூணுபேரில்... உழக்கில் கிழக்குமேற்கா?''

''இல்லை நான் பரிமார்றேன். எனக்கு ஆசையாயிருக்கு ஸார்...''

அவளுக்குத் தொண்டை அடைத்தது.

அவருக்கு உளம் நெகிழ்ந்தது. அவள் கன்னத்தைத் தொடணும் போலிருந்தது. அடக்கிக் கொண்டார்.

* * *

சாப்பாடு முடிந்து, பற்றுப் பாத்திரங்களை ஒழித்துப் போட்டு அடுப்பங்கரையை அலம்பி கைக் காரியங்கள் முடிந்து இருவரும் நடையில் உட்கார்ந்திருந்தனர். அவர்

சாய்வு நாற்காலியில் (பக்கத்துக் குடித்தனத்திலிருந்து இரவல்) அவள் காலடியில் போல, அருகே, தரையில், பையன் எப்பவோ தூங்கிவிட்டான்.

வாடைக்காற்றின் ஜிலு ஜிலு, தலை, தலைமயிர்க்கால் களினூடே, நெற்றி, கண் இமைகளை, கழுத்தை ஒற்றி எடுத்தது. மனமே அடைந்த அந்த ஒத்தட நிறைவில், மோனம் அவர்கள்மேல் திரையிறங்கிற்று. அதன் மணிச்சரங்கள், அவர்கள் மனித இதவின் எதிரொலியாக, நெஞ்சுக்கு மட்டுமே கேட்கும் கிளுகிளுப்பில் ஒன்றோ டொன்று உராய்ந்தன.

இந்தத் தளிர் அமைதி நெடுநேரம் தாங்காதென அது உறுகையிலேயே, மேல் அதன் தவழ்தலிலேயே தெரிந்தது. ஆயினும் கிடைத்தவரை...

"ஸார்!"

இமைகள் திறக்க மனமில்லாமலே, புருவங்கள் லேசாக உயர்ந்தன.

"நீங்கள் இளைச்சிருக்கேள்னுகூடச் சொல்ல மாட்டேன். என்னிக்குமே ஒத்தை நாடிதானே! ஆனால் நிறம் சத்தே மட்டாக் காட்றது. ஒரு தோல் வயண்ட மாதிரி தளிர் வெண்சிவப்பாயிருப்பேளே!"

"அப்படியா? அதெல்லாம் பற்றி எப்பவுமே நான் எண்ணிப் பார்த்ததில்லை. ஆமாம், இனிமேல் நான் கறுத்தால்தான் என்ன?"

"அப்படியா, இயல்புன்னு ஒண்ணு இருக் கோன்னோ!"

"இருக்கலாம். எப்படியும் மூணரை வருஷம் சிறை வாசம் ஆச்சே! எப்படியும் அந்த அடையாளம் காட் டாமல் இருக்குமா?"

மோனமானாள்.

அவர், தொடர்ந்து: "சிக்ஷை அஞ்சு வருஷம், நன்னடத்தை, அந்த விழா, இந்த தினம் லொட்டுலொசுக் கென்று அவ்வப்போது ரத்துக்களில் ஒண்ணரை வருடங்கள் போனாலும் மிச்சம் மூணரைக்குப் பஞ்சம் இல்லை."

அவள் உதடுகள் தவித்தன. புருவங்கள் உள்வலியில் நெறிந்தன. அவள் படும் வேதனையில் அதன் தன்மையின் நளினத்தின் அழகில் மிளிர்ந்தாள். தன் அழகின் உள் அழகின் தனி அழகு; கண்ணுக்கும் சட்டெனப் படாத நுண் அழகு.

அழகிய இரவு. அழகிய இரவின், அதனினும் அழகிய அமைதி. பூக்கள் இதழ்கள் அவிழ்ந்தோ அல்ல குவிந்தோ அதனதன் பக்ஷன் வெளிப்படும் அல்ல உட்புகும் ரஹஸ்யத்தின் அழகுவேளை. யக்ஷமோன கான, கான மோன நேரம்.

ஸகமஸகஸ

ஸகஸ மகஸ.

"சிறை வாழ்க்கை அப்படியொன்றும் மோசமாயில்லை. முதல் வருடம் கல் உடைத்தேன். இரண்டு தடவை மும்முரமாகப் படுத்தேன். அப்புறம் என் வயது, உடல் நிலை, என் நடத்தை, தம்தம் சிபாரிசுகளைச் செய்தன. படிப்படியாக என்பாடுகளின் கடுமை குறைந்து, ஜெயில் சமையல் கட்டில் ஒத்தாசை செய்வது, தோட்டத்துக்கு ஹோஸ் கொண்டு தண்ணீர் பாய்ச்சுவது இப்படி மாறி—அப்புறம் நீ நம்பினால் நம்பு, நம்பாவிட்டால் போ, கடைசிப் பத்து மாதம் ஜெயில் நூலகத்து நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். உட்கார்ந்தபடி, ஆபீஸ் நேரம் மாதிரிதான்"—சிரித்தார்.

"அதில் என்ன அவ்வளவு சந்தோஷத்துக்கு?" பொருமினாள்.

''ஏன் இல்லை? எவன் எவனோ கொடுத்துவிட்டுப் போகும் நன்கொடைகளில், குப்பை கூளங்கள் நடுவில் நல்ல புத்தகங்களும் இருக்கின்றனவே! ராமகிருஷ்ணர், விவேகானந்தர், பைபிள் மில்டன், ஹோமர் கூட, அருள் மொழிகள்—அவைகளின் துணையில்தான் மனம் ஓரளவு தெளிவு கண்டது. அந்தத் தெளிவு மெய்யோ பொய்யோ, தற்காலிகமோ—தேவையாகத்தானேஇருக்கிறது! அதனால் தான் இங்கே இப்போ, நாற்காலியில் சுகமாகச் சாய்ந்த படி இந்த வேளையை நன்றி உணர்வுடன் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.

''இன்னம் கேட்டால், முன்னைக் காட்டிலும் நான் ஆரோக்யமாகவே இருக்கிறேன். கட்டாயமான உழைப்பு வேளை, கட்டாயமான உணவு வேளை. உணவில் அளவு—இப்படிக் கட்டாயங்களிலேயே. ஒரு கட்டுப்பாடு, உடலுக்கும், மனதுக்கும் ஏற்படுகிறது. எதிலும் நல்லதையே எடுத்துக் கொள்ள வேண்டும். கைதிக்கு வேறு வழியும் என்ன இருக்கிறது சொல்லம்மா.''

பெருமூச்செறிந்தாள்.

''நான் குறைப்பட்டுக் கொள்ளவே கூடாது. பட்டால் பாபத்தில் போவேன். பாபம் என்று ஒன்று இருக்கிறது கோமதி. நன்றி கெட்டதுதான் பாவம். எல்லோரும் பிரியமாகத்தான் இருந்தார்கள். 'ஐயா வழிக்குப் போவா தீங்கடா!' அதுவே அங்கே பெரிய விஷயம். வார்டருக்கு என்னைப் பிடித்துவிட்டது. நீ சொல்கிற நிறம்கூட கை கொடுத்திருக்குமோ என்னவோ? விசேட தினங்களில் வீட்டுக்கு அழைத்துப் போய், உண்டி, திண்டி சாப்பாடு, ஐயாபாடு மோக்ஷாதான். அதெல்லாம் பற்றி நீ எவ்வளவு புரிந்து கொள்வாயோ, உன்னால் புரிந்துகொள்ள முடியுமோ...''

''நான் ஒண்ணுமே சொல்லலியே ஸார்!'' பதறினாள்.

"நீ சொன்னாய் என்று சொல்லவில்லை, குழந்தாய். ஆனால் சின்னச் சின்ன உதவிகளில்தான் பெரிய பெரிய சந்தோஷங்கள்—ஆதரவுக்கு ஏங்கிக் கிடக்கும் வறட்சி நிலையில் அதெல்லாம் பாலைவனச் சோலைகள்."

அவள் விக்கி விக்கி அழுதாள் அவர் தேற்ற முன் வர வில்லை. மணலில் விழுந்தது கண்ணீர் ஆனாலும் விழுந்த இடம் அந்தச் சமயத்துக்கு ஈரம்தான். கண்ணீரின் ஈரம் ஆசியில் தெளிக்கும் கமண்டல தீர்த்தம். அழுதவளும் யாருக்காக அழுதாளோ... இருவருமே கண்ணீரால் ஆசிர் வதிக்கப் பட்டவர்கள்.

அவருக்குத் தோன்றிற்று. ஆனால் சொல்லவில்லை.

'சங்கீதத்தில் எனக்கிருக்கும் ஈடுபாடு கண்டு அவர் வாங்கிக் கொடுத்த புல்லாங்குழல்தான் இது...' குழலை யோசனையில் நெருடினார். "அவர் விடுதியில் எங்கள் விளையாட்டு நேரங்களில், சக கைதிகளுக்கு வாசிப்பேன். சில இரவுகளில் நான் வாசித்துக் கேட்க என்னை அடைப் பிலிருந்து வெளியே விட்டிருக்கிறார். விதிப்படி மாலை ஐந்தரை மணிக்கு எங்களைப் பூட்டி விடுவார்கள். அப்புறம் நாங்கள் விதிப்படி நம்பத்தக்கவர்களில்லை. ஆனால் என் விஷயத்தில் அவர் ரிஸ்க் எடுத்துக் கொண் டார். அவர் நல்லாயிருக்கணும்.

"அந்த வெளி நேரங்களில் வாசிக்கும்போது எனக்கு ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு வேகம் வரும். காணாது கண்ட நேரம் அதில் மனம் குளிக்கும். தெம்பாவேன்,"

நக்ஷத்ரங்கள் விம்முகின்றன. கேட்கிறது.

நிலவின் தேன் அடிநாக்கில்—ஊறுகிறது.

மையிருளைத் தொட்டுவிடலாம் அத்தனை...மெத்து

அந்தராத்மாவின் குப்பி திறந்துகொண்டால் இத்தனை வாஸங்களும் தோற்றங்களும் ஒருங்கே—வெளிப்படும் போலும்!

அழகாயிருக்கிறது அச்சம் தருகிறது

இந்த நேரத்துக்கு 'ஜாமினி' என்று பேர் தருவோமா?

''நான் வெளியே வந்து பத்து நாட்களாகின்றன. நான் உள்ளேயிருந்த வேளை, நியாயமான பிராயச்சித்தம் தான் எனத் தெரிகிறேன்.''

''யாருக்கு யார் ஸார் பிராயச்சித்தம்?'' வெதும்பினாள்.

''ஏன் இந்த கோபம் கோமதி? என்ன குழப்பறே?''

''ஆமாம் ஸார், திரும்பக் கேட்கிறேன், யாருக்கு யார் பிராயச்சித்தம்? எனக்காக நீங்கள் சிறையிருந்துட்டு...!''

''உனக்காகவா? நீ என்ன குற்றம் செய்தாய்? திருடினவன் நான்.''

''யாருக்காகத் திருடினீர்கள்? இல்லை ஸார், கெட்ட வார்த்தை சொல்றேன்...'' ஒரு கையினால் இரு தாடைகளிலும் போட்டுக் கொண்டாள். ''யாருக்காக நகையை எடுத்தீர்கள். என்னிடம் என் நகையைக் கொடுக்கத் தானே?''

''இருக்கலாம். ஆனால் அதன்மேல் கொடுத்த கடன் பாக்கியிருக்கும்வரை, ஸேட்டுதானே அதற்குச் சொந்தக்காரன்! ஆரம்பத்தில் நானும் உன்னைப்போல்தான் நினைத்தேன். ஆனால் நான்தான் திருடன் என்னும் உண்மை இந்த மூணரை வருடங்களின் ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால்தான் சந்தேகமறத் தெரிந்தது.'

''ஜெயில் லைப்ரரியில் ஊறினப்புறமாக்கும்!''

சிரித்தார். ''புத்தகங்கள் வழிதான் காட்ட முடியும். ஆனால் உணர்வது உணர வேண்டியவன் நான்தானே!''

''தர்க்கத்தில் உங்களை ஜெயிக்க முடியாது. உங்களுக்கு எல்லாமே சுலபம். நான்...நான்...'' தவித்தாள்.

''கோமதி தன்னிரக்கத்தைத் தவிர். நீ படித்தவள். புத்திசாலி. விவேகத்தை உன்னால் உபயோகப்படுத்த முடியும் ''

''தன்னிரக்கமில்லை ஸார். என் குற்றநெஞ்சு உங்கள் மூலம் நேர்ந்த குற்றத்துக்கு, ஆனால் அதற்கு நீங்கள் பட்ட கஷ்டங்களுக்கு, அடைந்த தண்டனைக்கு நான்தான் காரணம்.''

''அசடே, நீ என்னைத் திருடச் சொன்னாயா? ஒரு விஷயம். நம் செயல்களுக்கு, எண்ணங்கள் எல்லாவற்றிற்கும் உண்மையில் எங்கே காரணம் கண்டுபிடிக்க முடிகிறது? தவடையில் அடிச்சால் பல் போச்சு என்று கிடையாது. எங்கேயோ அடிச்சால், யாருக்கோ என்னவோ போச்சு என்பதுதான் வாழ்க்கையின் நியதி. புரியாத புதிராக இருப்பதேதான் வாழ்க்கையின் நியதி, அதனாலேயே அதன் நியாயம். பூர்வஜன்ம வினை, பிராரத்த கர்மா என்று புத்தகங்கள் ஏதேதோ சமாதானங்கள் சொல்ல முயல்கின்றன. ஆனால் இதை அனுபவ பூர்வமாகவோ, அப்படியே முழு நம்பிக்கையுடன் எண்ணம் ஏற்றுக் கொள்ளும்வரை எதற்குமே அர்த்தம் என்று இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வாழ்க்கை இருக்கும் வரை அதை வாழ்ந்தே ஆக வேண்டும். இந்த உண்மை ஒன்றுதான், அதன் கட்டாயத்துடன் புலப்படுகிறது. சக்கரம் அறுக்கக் கபாலம் ஏந்துகிறது என்று கீதை சொல்கிறது. நமக்குத் தெரிந்தவரை யானை சுமக்க நரி முக்குகிறது.'' புன்னகை புரிந்தார்

''ஸார் நீங்கள் அங்கே படிச்சதெல்லாம் எனக்கு வேணாம். நான் ஒரு பெண். அத்தனையும் என் மண்டைக்கு அப்பாற்பட்டது.''

''உனக்குச் சொல்லவில்லை; எனக்கே சொல்லிக் கொள்கிறேன் என்று வைத்துக் கொள்ளேன். ஆனால் கவலைப்படாதே. அத்தனையும் குப்பை மேட்டு வைராக்கியம் தான்.''

சற்றுநேரம் இருவரும் அவரவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர்.

பிறகு அவள், பலவீனமான குரலில், ''நீங்கள் எனக்காக ஏற்றுக்கொண்ட தண்டனைக்கு எப்படிப் பிராயச்சித்தம் செலுத்தப் போறேனோ தெரியவில்லை.''

''இந்தப் பேச்சு அலுப்புத் தட்டுகிறது கோமதி, விடு.'' மறுபடியும் மௌனம்.

''பட்டணத்தில் இப்படி ஒரு இடம் கிடைப்பது ஆச்சர்யம். எங்கே இதைப் பிடித்தாய் கோமதி. ஒரு வண்டி சத்தம்கூடக் கேட்கவில்லையே!''

''இது ஒரு சந்து. இன்னும் போனால் நேரே ஒரு பள்ளிக்கூடக் காம்பவுண்டில் முட்டிப்போம். பரவாயில்லை. அமைதிதான். அசுத்தமும் கிடையாது. ப்ரஸாந்து விளையாடிக் கொண்டிருக்கலாம். அவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.''

''அந்த ஸேட், மனக்சந்த் ஸர்க்கார், பக்கா பெரிய மனுஷன். அவனிடம் ஒரு பதினஞ்சு நாள் சமையல்காரன் வேஷத்தில் பழகினேனே, இடத்தை நோட்டம் அறிய— அப்போ தெரிந்துகொண்டேன்; நான்தான் காலி. அவன் என்னை முழுக்க நம்பினான். நான்தான் அவன் உப்பைத் தின்றுவிட்டு அவனிடமிருந்தே திருடினேன். உண்மையைச் சொல்லி, தயவாகக் கேட்டிருந்தால், அவனே தவணை ஏற்பாடில் ஏதேனும் வழி சொல்லியிருப்பானோ என்று கூட இப்போது தோன்றுகிறது. இப்போது தோன்றி என்ன பிரயோசனம்? ஆனால், அவன் சாவியையே போட்டு, ஸேஃபிலிருந்து நகையைத் திருட, முன்பின் பழக்கமேயில்லாமல் எனக்கு இவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது? ரொம்பத் திகைப்பாயிருக்கிறது, கோமதி. புத்தி இப்படிப் போனதுக்குத் தெய்வம் காரணமா, நானா?

சமயத்தில் புத்தி பேதலித்துப் போகிறதே. இதை என் குற்றம் என்று ஒப்புக் கொள்ளாமல் விதிமேல் ஏன் பழி போடுகிறோம்?''

''ப்ளீஸ், ப்ளீஸ் ரொம்ப நொந்துக்காதேங்கோ ஸ்ார்... எனக்குத் தாங்காது.''

''நொந்துகொள்ளவில்லை. யோசனை செய்கிறேன்.''

''நீங்கள் சொன்னேளே, ஸேட்டோடு சமாதான வழியில் நீங்கள் நகையை மீட்டுக் கொடுத்திருந்தாலும் ஒரு லாபமும் இருந்திருக்காது.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''ஏனா? மற்ற நகைகள் போன வழி அதுவும் போயிருக்கும்.''

''ஓ! ஓ!!'' சுறீலெனப் புரிந்தது.

மறுபடியும் சங்கடமான மௌனம். இரண்டு கைவிரல் நுனிகளும் மோவாய் அடியில் கூரை போட்டுக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தார். அவர் மட்டுமன்று, அவரவர், அவரவர் யோசனையில். ஒரு பக்ஷி இந்நேரத்தில் வழிதப்பி இரவில் எங்கோ அலைந்தது. உருவம் தெரியவில்லை. அதன் கூவலின் ஏக்கம் மட்டும்...

''கோமதீ!''

''.........?''

''என் திருட்டுக்குத் தண்டனை அடைந்த போதிலும் நான் நகையைத் திருப்பிக் கொடுக்கவில்லை. என்னைப் போலீஸ் என்னென்னவோ இம்சை பண்ணினார்கள். ஆனால் போலீஸாரால் நகையைக் கண்டுபிடிக்க முடியவில்லை.''

''ஏன் ஸார்? சொல்லித் தொலைத்திருந்தால் விஷயம் இந்த அளவுக்கு முற்றிப் போயிருக்காதே!''

''அதெப்படிச் சொல்ல முடியும்? உன்னைச் சம்பந்தப் படுத்தி, உனக்கு இன்னும் சிக்கல்கள் நேரக்கூடும். உன் வேலைக்கே ப்ரச்னைகள்... சரி, அது போகட்டும். நகை என் வசம்தான் இருக்கிறது. இதை நான் உன்னிடம் சொன்ன பின்னர்கூட, உன் நகையைப்பற்றி விவரங்கள் அறிய உனக்கு ஆவல் இல்லையா?''

இரு கைகளையும் கூப்பிக்கொண்டாள். ''எனக்குத் தெரியவே வேண்டாம் ஸார். அந்த நகையே எனக்கு வேண்டாம். அதனால் பட்ட கஷ்டம் போதும்.''

யோசனையாக அவர், ''அதுவும் சரிதான். என்வசம் இருக்கிறதே தவிர அது சுலபமான இடத்தில் இல்லை. அதுபற்றி நீ தற்போதைக்குத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமுமில்லை. ஆனால் அதன் அத்தியாயம் இன்னும் முடியவில்லை என்று ஏதோ மனதுக்குப் படுகிறது.''

''அப்படிச் சொல்லாதேங்கோ ஸார். எனக்குப் பயமா யிருக்கு'' அவள் குரல் அழுகையில் நடுங்கிற்று.

பெருமூச்செறிந்தார். ''எது வந்தாலும் யாரை விட்டது; ஆனால் சுமை ஒருவன் பாடாவே இருந்து விட்டால் நல்லதுதான் ''

'அந்தச் சுமையை மீண்டும் நீங்களே தாங்கிக் கொள்ளப் போறேளா? அதனால் என்ன ருசுப்படுத்தப் போறேள்?''

''எனக்குத் தெரியவில்லை.''

''யானை சுமக்கறது, நரி முக்கறதுன்னா?''

சிரித்தார்.

''இல்லை, சக்கரம் அறுக்கறது, கபாலம் ஏந்துகிறது. பரவாயில்லை கோமதி. நல்லா மடக்கறாயே?''

''ஸார், அது ஒரு பெரிய இடத்து நகை''—அவள் குரலில் பயம் தெரிந்தது. 'அப்பா ஒரு மார்வாடி கடையில் கொஞ்சநாள் கணக்கு வேலை பார்த்தபோது, கடனில் மூழ்கிவிட்ட இந்த நகையை ஒரு சலுகை விலையில் முதலாளியிடமிருந்து வாங்கினார். எந்தக் காரணத்துக் காக, நகைக்குச் சொந்தக்காரர் மார்வாடியிடம் வெச்சுக் கடன் வாங்கினாளோ, அதை மீட்க முடியாதபடி அந்தக் குடும்பம் எப்படி சரிஞ்சிபோச்சோ, நகையை அணிஞ்சுண் டிருந்த சீமாட்டியின் மனம் எப்படித் தவிச்சதோ, அந்தக் குடும்ப சாபமும் வயித்தெரிச்சலும் நகையோடு தொடர்ந்துதானே வந்திருக்கும்! என் கலியாணத்தின் போது நகையைக் கழுத்தில் மாட்டி அப்பா அனுப்பிச்சுட் டார். ஒரு ஒரு சமயம் நினைச்சுக்கூடப் பார்க்க முடியல்லே. தக்கப்படி நிதர்சனமும் அப்படித்தானே காட்டிடுத்தே!''

''மூட நம்பிக்கை, நம்பிக்கை, அவநம்பிக்கை—எது எதுவென்று இந்த நாளில் தனித் தனியாகப் பிரிக்கவும் முடியவில்லை. ஆனால் எல்லாம் சேர்ந்துதான் வாழ்க்கை. சரி, ரொம்ப நேரமாகிவிட்டது. வரட்டுமா? '

ஏதோ யோசனையிலிருந்தவள் கலைந்து திணறிப் போனாள்.

''என்ன ஸார் திடீர்னு வெறுப்பேத்தறீங்க?''

''நேரமாச்சு, நான் போகவேண்டும் என்று சொல்வது தப்பா?''

''சரி, என் பாஷையை மாத்திக்கறேன். எங்கே போப் போறீங்க? ரூம் ஏதானும் எடுத்திருக்கீங்களா?''

''என் பிழைப்பைத்தான் பார்த்தையே, ரூம் எடுக்கிற வன் மாதிரி உனக்குத் தோணறதா?''

''அப்போ எங்கே படுக்கப் போறீங்க? சென்னைப் பட்டணத்தில் எந்த இடத்தில் வாசல் திண்ணையோடு வீடு இருக்கு, எனக்குக் காட்டுங்களேன். இடம் போறல்

லேன்னு திண்ணையை இடிச்சுட்டு, அங்கே ஒரு போர்ஷன் கட்டி வாடகைக்கு விடறான். அதேமாதிரி சத்திரம் எங்கே இருக்கு?''

வாளாயினார்.

'எனக்குத் தெரிஞ்சு சுங்குவார் சத்திரம் இருக்கு. அதுவும் இங்கு இல்லை. காஞ்சீபுரம் போகும் வழியில். அதுவும் சத்திரம் இல்லே. பாப்பான் சாவடின்னு ஒண்ணு. அதுவும் அப்படித்தான். என்ன ஸார், பதில் பேசாமல் இருக்கேள்? அப்போ C/o ப்ளாட்ஃபாரம்தானே?...ஸார் ஸார் மன்னிச்சுக்கோங்கோ...டிச்சிலே விழுந்துட்டேன்.'' அவர் கையைப் பிடித்துக்கொண்டு மாரே வெடித்துவிடும் போல் விக்கி விக்கி அழுதாள்.

புன்னகை புரிந்தார்.

''வருத்தப்படாதே. ஸீதைகூட ராமனை, லஷ்மணனை இதற்குமேல் பேசினாள். பிரியம் அதிகமாகப் போனாலும் வம்புதான்.'' அவள் தலையை அன்புடன் தடவினார். சட்டெனக் கையை இழுத்துக்கொண்டார்.

''அதற்கில்லை கோமதி. இருக்கிற இடமே நெருப்புப் பெட்டி. உன் கணவர்...''

''என் கணவன் என்னோடு இல்லை. நாங்கள் பிரிஞ்சு இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறது. இப்போ என்ன சொல்லப்போறேள்?''

காற்றுக்கு மூச்சு நின்றுபோச்சு.

இலை அசையவில்லை.

திடீரென்று 'கக்கடா, கக்கடா' என்று ஒரு பட்சி சிரித்தது.

* * *

அது உறக்கத்தின் மயக்கமா, மூர்ச்சையா, யோசனை அதன் வாய்க்கால் வழி மிதந்து செல்கையில் சட்டென

தில் மூழ்கிப் போனதா...ஆனால் நிச்சயம் தூக்கம் ல. வெடுக்கென உதறிக்கொண்டு நினைவு மீண்டதும் முதலில் பார்வைக்குப் பட்டது ராமர் படத்தடியில் குத்துவிளக்கு இன்னும் முத்தாய் எரிந்து கொண்டிருந்தது. ஆச்சர்யம்; எழுந்து அறையுள் நுழைந்து சத்தம் செய்யாமல் என்று நினைத்துக்கொண்டு அருகே அமர்ந்து... இல்லை இன்னும் அமரவில்லை...

''என்ன கோமதி?''

''நெனச்சேன்...'' சிரித்தாள். ''எழுந்திருக்க வேண்டாம் சும்மா வந்து பார்த்தேன். ஏதோ பயம், நீங்கள் மாயா வினோத ஜாலம் காட்டி மறைஞ்சு போயிட்டேளோன்னு! ஏதோ அசட்டுக்கனா!''

''அப்போ நான் இருக்கேனா?''

''என்ன ஸார் பயமுறுத்தறேள்?'' திகைப்பில் சிணுங்கினாள்.

''இன்னும் நீ கிண்டர் கார்ட்டனிலிருந்து விடுபடவில்லை என்று தெரிகிறது.''

''அது என்னவோ தெரியாது. ஆனால் என்னவோ சலிப்பா, பயமாயிருக்கு ஸார்...''

''தூக்கம் வரல்லியா?''

''நிஜமான தூக்கம்னு கிடைக்குமா ஸார்? அடிச்சுப் போட்ட தூக்கம். சோறு வேணாம் தண்ணீர் வேணாம் எழுந்திருக்க வேண்டாம் முழிப்பே வேண்டாம்...நான் சொல்றது சாவு இல்லை, தூக்கம்—அப்படி ஒரு அலுப்பு ஸார்.''

''மணி என்ன இருக்கும்?''

''என்ன இருந்தால் என்ன? மூணு, மூணரை...''

''நாளைக்கு வேலைக்குப் போக வேண்டாமா?''

சூள் கொட்டினாள்.

''போனால் போச்சு. ஆமா போயி, வேலை தான் சம்பளம் வாங்கறோமாக்கும்!''

''இந்தத் தலைமுறையின் ட்ரபிளே இதுதான். செய்யும் வேலையில் அக்கறை பொறுப்பு, உப்பு உணர்வு, வேலைக்காக வேலை என்று வேலையில் ஆர்வம்... ஊஹூம்...இப்பவே இத்தனை அலுப்பானால், ஹூம், ஆனால் இதைச் சொல்ல நான் யார்? இப்போதைக்கு நான் தண்டசோற்றுத் தடிராமன். ஊருக்குத்தான் உபதேசம்...'' புன்னகை புரிந்தார். (மனுஷன் பல்வரிசை ஒரு சந்து கோணல் இல்லாமல் இந்த வயசில்! எனக்காவது ரெண்டாவது ஸ்பூன் சர்க்கரைக்கே பல் கூசுறது) ''ஸாரி, கோமதி!''

''நான்தான் ஸார் உங்களை மன்னிப்பு கேக்கணும். ஒருவேளை அந்த நினைப்பில்தான் வந்தேனோ என்னவோ? உங்களை வாயில் வந்தபடி பேசிவிட்டேன்.''

கையை விரித்து, உதட்டைப் பிதுக்கி முறுவலித்தார்.

''சார், இதே மூச்சில் தப்போடு தப்பா, இப்போ கேட்டால்தான் உண்டு. அப்புறம் எனக்குத் துணிச்சல் வராது. மாமியும் மதுவும் எங்கே? மது என் வயதுக்காரி, கணவனோடு குடித்தனம் பண்ணிக்கொண்டிருப்பாள் அது சரி. ஆனால் மாமி? ராத்தங்கக்கூட இடமில்லாத உங்கள் நிலைமையில், இன்னிக்கு மாமியை உங்களோடு காணல்லியே! பிறந்தாத்தில் விட்டிருக்கேளா? இ...ல்...லே''— யோசனையில் திடீரெனத் திகில் கண்டவளாக, நான் பாட்டுக்கு ஏதேனும் உளறிண்டிருக்கேனா? மாமிக்கு ஏதேனும் ஆயிடுத்தா? ஸார், மாமி உயிரோடு இருக்காளா?'' அவள் குரலில் பயமும் அழுகையும் நடுங்கின.

''யார் கண்டது? உதவாத பேச்சு'' பெருமூச்செறிந்தார். ''விடு கோமதி, நீங்கள் எப்போ பிரிஞ்சேள்?''

தடுப்பு விழுந்தாச்சு. லெவல் கிராஸிங் பூட்டு இனி எனக்கும் துணிச்சல் இருக்காது.

''எங்கள் கதை...எங்கள் மாதிரி கதை எப்படி அதன் 'லாஜிக்'படி போகுமோ அப்படியே போய், ஒருநாள் 'டுமீல்.' ''

சிரித்தான். அவர் காத்துக்கொண்டிருந்தார். அவர் மோனம் அவளிடமிருந்து சொல்லைக் கட்டாயப்படுத்தியது.

''எப்பவுமே ஸார், கண்ணை மூடிண்டு, நம்மையே ஏமாத்திக்கறோம். அல்லது ஏமாத்திக்கறதா நெனச்சுக்கறோம்.''

''ஓ இது பழுத்த வேதாந்தமா? பச்சை வேதாந்தமா?''

''இது பட்டயதார்த்தம், வேதாந்தம் ஒரு புரளி.''

''அட, இந்த கிண்டர் கார்ட்டனுக்குள், ஒரு நல்ல, உன்னதமான புருஷ சம்பாஷணைக்கு லாயக் ஆகிக் கொண்டிருக்கிறாயே! என்ன ஆச்சு?''

''நாம் போனதடவை சந்திச்சப்போ, அதாவது மூணரை வருடங்களுக்கு முன்னால், அதற்கும் முன்னால் ஒன்பது வருட இடை வேளைக்குப்பிறகு அந்த ஒரே ஒரு பிற்பகல்—கோடம்பாக்கத்து ஹைரோடு மேம்பாலத்துக் கடி வீட்டில்...சும்மா புள்ளிகளை ஒழுங்காப் போட்டு காலத்தையும் இடத்தையும், வேளையையும் ஸ்திரப் படுத்திக்கறேன். வேறொண்ணுமில்லை. அப்பவே என் கதையை உங்களிடம் முழுக்கச் சொல்லவில்லை, மறைச்சுட்டேன்.''

''எல்லாருக்கும் உள்ளதுதானே! இப்போதுகூட கோமதி, உனக்குச் சங்கோஜமாக இருந்தால்...''

''இப்படித் தட்டிக் கழிச்சுட்டு நீங்கள் கழட்டிக்கப் பார்க்கறேளா? ஆனால் உங்களைக் குறை சொன்னால்

கடும்பாவம் சுற்றிக்கும். அன்னிக்கு என் கஷ்டத்தைக் கேட்ட அளவுக்கே, நீங்கள் எனக்கு உதவி செய்யப்போய் என்னைவிட ரொம்பவும் அனுபவிச்சுட்டேள்.''

''உஷ் அழாதே, கோமதி. நீ அழுதால் எனக்குக் கலகலத்துப் போகிறது.''

மூக்கை உறிஞ்சினாள். ''ஆனால் நான் யாரிடம் சொல்லிக்கொள்வேன்? இன்னிக்கு நீங்கள் கிடைச்சது எனக்கு என்ன பாக்கியம் தெரியுமா?''

''ப்ளீஸ், அப்புறம்?''

அவள் குரல் திடம் கொண்டது. 'என் சங்கோஜத்தைக் குறிப்பிட்டீர்கள். சங்கோஜம், மானம், கௌரவம்... இவை நிஜமான உணர்ச்சிகள் தானா? நாளடைவில், நாமா, அவாளவாள் அந்தஸ்துக்கும் கட்டுப்படிக்கும் தக்கப்படி ஏற்படுத்திக்கொண்ட ஸௌகுஸுக்களா? பிறக்கும்போதே ஆடையோடவா பிறந்தோம்? 'அருந்ததிபார்'— ஆகாசத்தைக்காட்டி— 'அம்மிமிதி'— கல்லைக் காட்டி, 'அக்னிசாக்ஷி'— நெருப்பைக்காட்டி, மந்திரம் சொல்லி ஆசை காட்டி, பயம் காட்டி...அத்தனையும் ஜாலக், ஜாலக், ஏமாத்து! உண்மையில் நாம் எங்கு இருக்கிறோம்? எனக்குப் பயமாயிருக்கு ஸார், என்னை விட்டுப் போயிடாதேங்கோ...ஆனால் அதோ அந்தக் குத்துவிளக்கு ஏன் ஸார் இன்னும் எரிஞ்சுண்டிருக்கு? எப்பவோ ஏற்றிவெச்சது.''

''அங்கேதான் உலகத்தின் சூக்ஷ்மமே அடங்கியிருக்கிறது. சுடர் எரிந்துகொண்டிருக்கும் வரை நமக்கு அழிவு கிடையாது.''

மௌனம் அவர்களை மெத்தெனச் சற்றுநேரம் அணைத்தது. ஜன்னல் வழி தெருவிளக்கின் வெளிச்சத்தில் அவள் கன்னத்தில் கண்ணீர் பளபளத்தது.

'உன் ஆத்துக்காரர் உத்தியோகத்தில் இருக்காரா?'

'சரியா, உச்சிமண்டையில் ஆணி அடிச்ச கேள்வி. இருக்கணும்னுதான் நினைக்கிறேன். சமீபத்தில் நான் கேட்கவில்லை. சுற்றுப்புறத்திலும் விசாரிக்கல்லே. இருந்தால் என்ன, இல்லாட்டா என்ன, குடும்பத்துக்குன்னு அவர் சம்பளம் பார்த்து யுகக்கணக்காச்சு. நாங்கள் பிரியறதுக்கு முன்னால் ஒரு தடவை ஆபிஸ் பணத்தைக் கையாண்டுட்டதா... சுற்றுப்பட்டவா—அவரைக்காட்டிலும் என்னுடைய அதிர்ஷ்டம்னுதான் சொல்லணும்... அவர் ஆபிஸ் மானேஜர் நல்லமாதிரி, விஷயத்தை மூக்கு முழி மீசை முளைக்கறதுக்கு முன்னால் அமுக்கிட்டா. அதை இட்டு ரொப்பறத்திலே, வீட்டிலே, ஏதேதோ சுரண்டிண்டு போயிடுத்து அப்புறம் அவரை 'காஷி' லிருந்து 'ஸீட்' மாத்திட்டா. இருந்தாலும் இப்படியெல்லாம் எத்தனை நாள் ஓடும்? எப்படியும் திருடன் பெண்டாட்டி—அப்புறம் சொல்ல வாய் கூசறது. சமுதாயம் நம்மை எப்படி பயத்தில் வெச்சிருக்கு பார்த்தேளா? சீட்டாட்டம்னா அப்படி ஒரு பைத்யமா ஆயிடுமா ஸார்?'

'நீயேதான் பார்த்துக்கொண்டிருக்கிறாயே' அவர் ஏளனத்தில் துக்கம் துளித்தது.

''வீட்டிலேயே சின்னச் சின்னச் சிங்காரத்திருட்டில் ஆரம்பிச்சு, ஏதேனும் பண்டம் வாங்கப் பெரிய நோட்டாக் கொடுத்தால், மிச்சம் திரும்பியும் வராது; அதற்குக் கணக்கும் கிடையாது. ஆர்ம்பத்தில் எனக்கும் கேட்க லஜ்ஜை. அப்படியே கேட்டாலும் என்னவோ சிரிச்சு மழுப்பிடுவார்.

''நர்ஸரிக்குக் கட்டப் பணம் கொடுத்தால் ஹேகயா. அப்புறம் மேட்ரன் என்னைக் கூப்பிட்டு அனுப்பி நான் மறுபடியும் கட்டும்படி ஆச்சு. இப்படி இரண்டு மூணு தடவை நேர்ந்து, அப்புறம் ஐயாவிடம் பணம் கொடுப்பதை நிறுத்திக்கொண்டேன்.

''பால் கார்டு பணம் 'டிட்டோ'.

''எலெக்ட்ரிக் கரெண்டை ரெண்டுதடவை 'கட்' பண்ணிட்டுப் போயிட்டான். அதனால் வீட்டுக்காரனோடு புகைச்சல்.

''வாடகை ரெண்டு மாஸம் நின்றுபோச்சு. நோட்டிஸ் கொடுத்துட்டான். இதே காரணமா இந்த வீட்டுக்கு வரதுக்கு முன்னால் ரெண்டு வீடு மாறியாச்சு. மேம்பாலத்து வீடுக்கு முன்னாலும் மாறியிருக்கிறோம். உங்களிடம் நான் சொல்லல்லே. என்ன தெரியுமா வேடிக்கை? மாற மாற, இடம் குறுகி, வாடகை பெரிசு... தமாஷாயில்லே?

''எப்போ முழிச்சுண்டேன்? தூங்கினால்தானே முழிச்சுக்க? ஆனால் முழிச்சுண்டே என்னால் என்ன செய்ய முடிஞ்சது? முழிச்சுண்டேயிருக்கேன். தூக்கமே போச்சு. தூக்கத்தைத் தேடறேன், மீளாத தூக்கத்தைத் தேடறேன். அந்த மீளாத தூக்கத்துக்கு என்னோடு ப்ரஸாந்தையும் அழைச்சுண்டு போயிடலாமா என்றுகூட நினைச்சிருக்கேன், போங்களேன்!''

குத்துவிளக்கில் சுடர் 'புக் புக்'கென்று தத்திற்று.

''போனதடவை நீங்கள் என்னைச் சந்தித்தபோது, என்னை நீங்கள் கண்ட நிலையைக் காட்டிலும் நிலைமை மோசமாகப் போயிடுத்து. சுகமா சந்தோஷமா வாழணும்னு ரெண்டுபேருமா சம்பாதிக்கிறோம். ஆனால் சந்தோஷம், கைவழிய ரெண்டுபேர் சம்பளத்தில் இல்லை. தேவைகளைப் பெருக்கிக் கொண்டதுதான் மிச்சம் அப்புறம் அந்தத் தேவைகளுக்கு ஈடு கொடுக்க என்ன சம்பாதிததும் பற்றவில்லை. நிலைமை விருத்தியுமாக வில்லை. கலியாணமானதும் என் கடமை, அடுப்பு, கணவன், குழந்தைகள் என்று உணர்ந்து அந்த மட்டில்

தின்றிருந்தேனானால், மனுஷன் தன் பொறுப்பை உணர்ந்திருப்பானோ என்னவோ? நாங்களும் உருப்பட்டிருப்போமோ என்னவோ? இந்த நிலைக்கே நான்தான் காரணமோ என்னவோன்னுகூட சில சமயம் தோணறது ஸார்.''

பதில் இல்லை.

''ஸார், ஆனால் ஒரு சிறகு ஒடிஞ்சுபோய் ஒத்தைச் சிறகில் எத்தனை நாள் பறந்துகொண்டிருக்க முடியும்?''

குத்துவிளக்கில் சுடர் அவிந்து பொசுங்கல் நெடி பரவிற்று.

''பதில் அங்கிருந்தே வந்துடுத்து, பார்த்தேளா? என்ன ஸார், எனக்காகக் கண்ணீர் விடறேளா? அப்போ எனக்கு நம்பிக்கையிருக்கா? வாழ்க்கை வரளாமல் இருப்பதற்குக் கண்ணீர் அத்தாட்சியாமே!

''அப்புறம் ஒரு சின்ன சமாச்சாரத்தில்தான் விஷயம் முத்தாய்ப்பு வெச்சது. மத்தவாளுக்கு எப்படியிருக்கோ தெரியாது ஸார், குழந்தையின் உண்டியிலிருந்து திருடிட்டார் ஸார்...'' அவளுக்கு மூச்சு இறைத்தது. ''அது வரைக்கும் பொறுத்துண்ட மனசுக்கு இதைத் தாங்க முடியல்லே ஸார்!

''சாயந்திரம்... இல்லை, இரவு எட்டு மணிக்கு மனுஷன் எங்கிருந்தோ வீட்டுக்கு வந்ததும் அவருடைய Bond Box தயாரா அவருடைய துணிமணியோடு வெச்சிருந்ததை, அவர் உள்ளே நுழையுமுன்னாலேயே கையில் கொடுத்தேன். விழுந்து நமஸ்காரம் பண்ணினேன். 'உள்ளே இருநூத்தி அம்பது ரூபாய் பணமும் வெச்சிருக்கேன், போயிடுங்கோ. இல்லை, இந்த வேளையில் குழந்தையோடு நான் இடம் தேடணுமா சொல்லுங்கோ. ஆனால் நம்முடைய பொம்மை விளையாட்டு, இன்னியோடு, இந்த நிமிஷத்தோடு முடிஞ்சுது.'

''என்னை ஒருமுறை ஏற இறங்க முழிச்சுப் பார்த்தார். பதில் சொல்லவில்லை. பெட்டியோடு இறங்கிப் போய் விட்டார். என் கதையும் முடிஞ்சது. விடிஞ்சும் போச்சு.

'' ஆம், ஜன்னலுக்கு வெளியே வானம் நலுங்க ஆரம் பித்து விட்டது.

''ஒண்ணு, அந்த மனுஷனிடம் ஆச்சரியம்; கோபமே வராதவர் ஸார் அவர். நான் அவரை வம்புக்கே இழுத் திருப்பேன். ஆனால் இழுபட மாட்டார். ஒரு தடவை கூடத் தன்னை மறந்து கையை ஓங்கினது இல்லை. ஒரு வார்த்தை அதிர்ந்து பேசினதில்லை. அதில் அவரை ஒரு ஆச்சர்யமாகவே கருதறேன். இப்போக்கூட அவர் மேலே எனக்கு முழுக் கோபம் இருக்கான்னு என்னை அடிக்கடி கேட்டுக்கறேன். முழுக்கோபம் இருக்கணும், இருந்தால் தான் ப்ரஸாந்தின் எதிர்காலத்தைக் காப்பாற்ற முடியும்னு எனக்குத் தெரியறது.''

''You love him?''

'Love? சிரிப்பு மூட்டாதீங்கோ ஸார்.' பால்காரன் மணி எட்டக் கேட்கறது. 'போறேன். நீங்கள் சற்றே தூங்குங்கோ, இன்னும் நீங்கள் இமையே மூடல்லே.'

''இல்லை, பல் தேய்க்கிறேன்,''

''அதுவும் சரி. நல்ல Fresh காப்பி, இந்தப் பால்காரன் இப்போதைக்கு நல்ல பாலாக் கொடுக்கறான்.''

பால்மணி ''ஙண ஙண ஙண'' —பொறுமையின்றி ஒலித்தது.

2

ஆமாம், என்னேரம் இப்படி விட்டத்தைப் பார்த்த படி படுத்திருப்பது?

'எனக்கு ஒண்ணு, உங்களுக்கொண்ணு— பச்சைக் குழந்தைமாதிரி இருக்கிறாள். சாவியைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறாள்.

வகையாக மறுபடியும் மாட்டிக் கொண்டேனோ? எத்தனைக் கெத்தனைத் தனியாக ஒதுங்கப் பார்க்கி றேனோ அத்தனைக் கத்தனை உறவு துரத்துகிறது. நான் உறவுக்கு லாயக்கில்லை, எனக்கு அந்தப் பாக்கியமில்லை. பின் ஏன்? ஏன்??

ப்ரஸாந்த் சற்றுப் பெரியவனாகி இருந்தால் எனக்கும் அவனுக்கும் இன்னும் சற்றே ஒட்டலாம். ஆனால் இந்தப் பருவத்தில் சரிப்படவில்லை. உண்மையை எனக்கே ஒளிப் பானேன்? எனக்கே குழந்தைகளுடன் இழைவதில் விருப்ப மில்லை. பிஞ்சில் பழுத்த வெம்பல். அதற்கும் பெற்றோர் தான் காரணம். இரண்டுபேரும் சுயநலத்தில் உத்யோகத் தைத் தேடிப் போய்விட்டால், குழந்தை இருவர் ஆதரவும் அற்று, தங்களுக்கே உதவாமல் போய்விடுகின்றது ஆனால் நான் சரியாக இருப்பதாகத்தான் நினைத்துக்கொண்டிருந் தேன். மரகத்தை வேலையில் விடவில்லை. ஆனால் எனக்கு ஏன் இப்படி ஆயிற்று? இந்நாள் இதனால் இது

என்று காரணம்கூடக் காட்ட முடியவில்லை, No, No, No. இப்படிப் படுத்துக்கொண்டிருந்தால், யோசனையிலேயே உளுத்துப் போய்விடுவேன். எழுந்திரு, வெளியே செல். ஏதேனும் செய்.

கதவைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டார். பையன் நர்ஸரியிலிருந்து வருவதற்கு முன் திரும்பிவிட வேண்டும்.

தெருவில் காலை மிதித்ததும்தான் நினைப்பு வந்தது. கையில் ஒரு செல்லிகூட இல்லை. எங்கே கிளம்புவது? அந்த நினைப்பில் ஜேபியில் கை போனதும் காயிதம் மொடமொடத்தது. எடுத்துப் பார்த்தால் புத்தம் புதிது, இருபது ரூபாய் நோட்டு. மனம் ஒரு கணம் கோமதிமேல் மின்னல் அடித்துப் பின் வாங்கியது. எப்படியெல்லாம் மடக்குகிறாள்! பாசக்கயிறை சுற்று சுற்றாய்க் கழுத்தில் போடுகிறாள்! ஆனால் அவளுடைய முன் யோசனை நன்றிக்குரியதுதான். என் நிலைமையும் அப்படித்தானே இருக்கிறது. மேலே நடைக்குத் தைரியம் கண்டது.

நேற்று அவள் சொன்னமாதிரி, ப்ளாட்ஃபாரம் கச்சேரி சம்பாவனை ஐந்து ரூபாய் தேறியிருக்குமா? கால் ரூபாய் நாணயங்கள்கூடப் பார்த்ததாக ஞாபகம். ஐயோ என் பிழைப்பே! என் சந்தோஷமே! என் சிரிப்பே!

பரமஹம்ஸர் சடலத்தை உதறிய பின், அவருடைய சிஷ்யர்கள் பல திக்குகளிலும் போனவர்கள், அவரவர் கையில் இருப்போடா போனார்கள்? சன்யாசி எனும் பேர், சன்யாசி வாழ்க்கை, அதுபற்றிக் கேட்க, படிக்க அதில் ஏதோ க்ளாமர் இருக்கிறது. ஆனால் யதார்த்தம் அனுபவிக்க மிக்க அதைரியமாகத்தானிருந்திருக்கும். பரம ஹம்ஸருக்கு என்ன குறைச்சல்! அவரை மதுர், இமைக்குள் அப்படிப் பொத்தித்தானே காப்பாற்றினான்!

சீ, உனக்கு என்ன துணிச்சல், வெட்கமாயில்லை? அவர், அல்லது அவர்கள் கால்தூசு பொறுவையா? மீண்டும் குருட்டு யோசனை, குருட்டு யோசனையை விடு. செயல்படு, செயல்படு.

இப்போது எங்கே போய்க்கொண்டிருக்கிறேன்? கால் போன வழி, வழி போயிற்று. போகப் போக, பழக்கப் பட்ட இடங்கள் விரிவடைந்து கொண்டே போயின முற்றிலும் அழியாத சில அடையாளங்களால்தான் பழக் கப்பட்ட இடங்களாக பட்டன. சுற்றி சின்னதும் பெரிது மாகப் பல கட்டடங்கள் முளைத்துவிட்டன. முன்னேற ஏற போகும் இடம் திடமாயிற்று. ஆமாம், இன்னும் நடைதூரம்தான். பஸ் ஏற வேண்டாம் அட, நடப்போமே.

நாடாரின் பாத்திரக் கடைப் பக்கத்தில் மேலும் பாத்திரக்கடை முளைத்துவிட்டன. தெருவில் நின்றபடி, கடையுள் தெரிந்தவரை, நாடார் கல்லாவில் தென்பட வில்லை. உள்ளே இருக்கிறாரோ, இல்லை சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போயிருக்கிறாரோ? கடையுள் ஏறினார்.

கல்லாவில் ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தான். பிடுங்கிய கிழங்குபோன்ற அந்த முகஜாடை, யார் பையன் என்று கேட்கத் தேவையில்லை. பக்கத்தில் தாழ்வான முக்காலியில் ஆச்சி. பார்க்க முன்னைக் காட்டிலும் முடிந் தால் முன்னைக் காட்டிலும் ஒரு சுற்று பருமனா யிருந்தாள். வெள்ளை உடுத்து, நெற்றியில், குழைத்த பட்டைத் திருநீறு. 'திக்'கென்றது.

கல்லாவில் அவனை இழுத்துப் பிடித்துக் கட்டாயமாக உட்கார்த்தியிருந்தது அவன் முகத்திலேயே தெரிந்தது. கழுத்தில் தும்புதான் இல்லை. அதற்குப் பதிலாகத்தான்

ஆச்சி. அவிழ்த்துவிட்டால் புதுப்படம் முதல் காட்சிக்கு ஓடிவிடுவான். அப்படி ஓடிவிடாமல் இருக்கத்தான் அவன் அம்மை காவல் இருந்தாள்.

'ஐயா வாங்க...' எழுந்திருப்பதுபோல் பாவனை. அதற்குமேல் அந்த உடம்புக்கு இப்போது முடியாது. ''என்னா வேணும்?''

தயங்கி நின்றார். அடுத்தே அவள் கண்களில் அடையாளத்தின் ஒளி வந்துவிட்டது. 'ஐயா, வாங்க, வாங்க! கொஞ்சம் அசந்துட்டேன். பார்வை வேறே மந்தமாயிட்டுது. அமருங்க. அடே சாமிவேலு, நாக்காலி எடுத்து வா. ஐயா, நலமாயிருக்கீங்களா, நலிஞ்சு காட்டுது, உடல் சொகமில்லியா?'

''எனக்கு ஒண்ணுமில்லை. ஆனால் ஆச்சி, உங்களை இப்படிப் பார்க்க நினைக்கல்லே.''

''ஆ, ஆமாங்க, உங்களைப் பார்த்து வருசம் நாலிருக்குமா? அதுக்குள்ளே இப்படி நேர்ந்துபோச்சு.'' ஆனால் உதட்டைப் பிதுக்கவில்லை. கண் சுரக்கவில்லை. அதனால் துக்கமில்லை என்று சொல்ல முடியுமா? தைரியமாகத் தாங்கிக்கொண்டிருப்பதற்குப் பாராட்ட வேண்டும்.

''அன்னிக்கிப் போலீஸ் உங்களைக் கூட்டியாந்து மாடியிலே உங்கள் அறையை சோதனை போட்டாங்களா இன்னுங்கூட கண்ணெதிரே அந்தக் கோலம் நிக்கி. யார் மக்க அவஹ? அந்தத் தொலையாத ஜாமானைத் தூக்கி எறிஞ்சி இடத்தைத் தலைகீழா, கறிகாய்க் கூடையை மசானக் கொள்ளை விடற மாதிரியல்லக் கவிழ்த்துப் பார்த்தாஹ? என்னாத்தைத் தேடினாஹ? அவங்க தேடினது கிடைச்சுதா இல்லியா? உங்களையும் கூடவே இளுத்துட்டுப் போயிட்டாஹளா?

''அப்புறம் தனிப்பட்ட முறையிலே ஒரு ஆள வந்து ஏதோ நகையத்தி விசாரிச்சான். கல்லுக் கல்லா நான் பூட்டியிருக்கறதைப் பார்த்துட்டுப் பட்டிமவனுக்கு என்ன பட்டுதோ? திருட்டு நகை, கடத்தல் பொருள் வியாபாரம் பண்றோம்னு எண்ணினானோ என்னவோ? அப்பட்டம்மா அப்படிக் கேக்கல்லே, ஆனால் அவன் கேள்வி போற வழி தெரியாதா? ஆனால் அப்புறம் வரல்லே.

''ஆனால் எங்க வீட்டு ஐயாவுக்குப் போலிசான் வீட்டுள்ளே பூந்துட்டானேன்னு உள்ளாற இடிஞ்சுட்டாரு. என்னாத்துக்குப் புகுந்தான்? யார் தப்புக்குப் புகுந்தான்? அண்டை அசலும் தெருவுலே போறவனும் என்னாத்தைக் கண்டானுஹ?''

குன்றிப்போனார். ''ஆச்சி இப்படியெல்லாம் நேரும்னு...''

''மறந்துட்டேனே! டே சாமிவேலு, ஐயாவுக்கு ஒரு காப்பி வாங்கியா.''

''வேண்டாம் ஆச்சி.''

''அப்படிச் சொல்லக்கூடாது. எத்தின நாள் கழிச்சுப் பாக்கறோம்? தவிர துக்கத்துக்கு வந்தவங்களை வெறும் வவுறோடு அனுப்பக் கூடாதுன்னு சாஸ்த்ரம் வேறு இருக்குதுங்க. சரி எங்கே விட்டேன்? ஆமா, அப்பறமே கஸ்டத்து மேலே கஸ்டம். வீட்டுலே திருடன் பூந்துட்டான். நல்லவேளை ஒண்டியாளா வந்திருப்பான்போல நாலுபேரா வந்திருந்தாலோ அதுபத்திப் பேச நானே இருந்திருக்க மாட்டேன்... ஜன்னல் கம்பியை வளைச்சு உள்ளே பூந்துட்டான்— குடிங்க குடிங்க ஏன் மயங்கறீங்க, ஆறிப் போவுதே!''

முதல் முழுங்குக்கு மேல் முடியவில்லை. தொப்புள் வரை கசந்தது. காப்பி அல்ல.

''எங்கே விட்டேன்? ஆ, ஆமா, நல்லவேளை, நகையெல்லாம் பாங்கிலே பெட்டகத்துலே பத்தரமாயிடுச்சோ புளைச்சுது. அன்னிக் கடைவியாபாரம் வசூல் ரொக்கமா கிட்டக்கிட்ட அஞ்சாயிரம்போல, இரும்புப் பெட்டியிலே. பெட்டி படுக்கை அறையிலே இருந்திருச்சோ புளைச்சது. படுக்கை அறையிலே எப்பவுமே உள்ளே தாளிட்டுத்தான் படுப்பேன். பெட்டி அடியிலே நாயாட்டம் காவலாப் படுத்தே பளக்கம். இதுலெல்லாம் நான் சாதாரணமா தன்மையிலேயே உஜாருங்க. கூடத்துலே குளிர் சாதனப் பெட்டி அதைப் பூட்டல்லே. அதைப் பூட்டறதில்லியாமே! உள்ளேயே லைட்டு போட்டு மின்சாரம் சத்தம் போட்டு ஓடிக்கிட்டிருக்குது.

''காலையிலே எளுந்திருச்சுப் பாத்தா, அதுலே நாலு முட்டை, ரெட்டு சாத்துக்கொடி வெச்சிருந்தேன். அதுவும் பூண்டு ஊறுகாய்ப் புட்டியும் காணல்லே. எங்க அய்யாவுக்கு பூண்டு ஊறுகாய்ன்னா விசேஷ பிரியமுங்க. வந்தவனுக்கு மனது எப்படியிருக்கும்?''

ஆச்சி சிரிக்கவில்லை.

''ராப் பத்துப் பாத்திரமெல்லாம் சமையலறையிலேயே கிடந்திருச்சோ புளைச்சது. நான் தேகசிரமத்துக்குப் பால்மாறதில்லை. படுக்கப் போற முன்னாடி, எல்லா அறையும் பூட்டி, சாவிக் கொத்துத் தூங்கறப்போ கூட இடுப்புலேதான் தன்மையிலேயே உஜாருன்னு அந்த நாளிலேயே என்னைச் சொல்லுவா; 'அடி செண்பகத்தாச்சி, யமன்கூட உன் உயிருக்கு, உனக்குக் கணக்குச் சொல்லிட்டு வாங்கணும், எடுத்துட்டுப் போக முடியாதுடி'ன்னு!

''ஆனால் நான் சத்யவான் சாவித்திரியா? ஐயா உசிரைக் கண்ணெதிரே தட்டிக்கிட்டுப் போயிட்டானே. —ஏண்டா விசுவம், என்னாத்தே தேடிக்கிட்டு அந்த ஐயா

வைக் காக்க வெக்கறே? சில்லறையா? என்னைக் கேக்கறது தானே? வாயிலே மூசுண்டையா? ஐயா பொறுங்க, இதோ ஒரு நிமிஷம்'' இடுப்பிலிருந்து சொருகுப் பையை (சொருகும் பையா சின்னத் தலைகாணி உறையா?) எடுத்து சில்லரையைக் கொடுத்து ஆளை அனுப்பிவிட்டு விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தாள்.

''ஆமா எங்கே விட்டது? ஆமா, எல்லாத்தியும்விட அவருக்குப் பெரிய இடி அந்த மகாலச்சிமித் தகடு. பூசையிலே வெச்சிவந்தது, திடீர்னு காணாமல் போயிட்டுது. அதான், நாட்டிலே கனாவுலே உங்களைக் கண்டு, கனாவுலே, நீங்கள் காலால் மெறிச்சுக் காட்டிய இடத்துலே, புளக்கடையிலே தோண்டியெடுத்த தாமிரத் தகடு. மாகாலச்சுமிப் படம் வரைஞ்சது; ஆமானுங்க அது வந்த பிறகுதானே எங்க வீட்டுக்கு லச்சுமி கடாச்சம் வந்திருச்சி. தினமே அதுக்குப் பூப்போட்டு வணங்கிட்டுத்தான் இட்டிலியை விண்டு வாயிலே போட்டுப்பாரு; ஆமானுங்க திடீர்னு பூசையிலிருந்து பொசுக்குனு மறைஞ்சுட்டு துன்னா அதுக்கு என்ன அர்த்தம்? அதுக்கு எவன் திருடன் வருவான்? எலி இளுத்துட்டுப் போயிருக்குமா? இத்தினி நாளா இல்லாத எலி இப்போ எப்பிடி வரும்? தேடாத இடம் பாக்கியில்லே. தென்னை மரத்துலேகூடப் புல்லு பிடுங்கியாச்சு. ஆனால் கிடைக்கல்லேங்க.

''ஆனால் அவரு உங்களைத் தெய்வமாத்தான் கொண்டாடிட்டிருந்தாரு. கனவுலே கண்ட மனுசன் நேரிலேயே மாடி அறையிலே குடியிருக்கத் தேடி வந்ததும் அதிலேயே அவர் உள்ளாறப் பாதி மலர்ந்துட்டார்னு நான் சொல்றேன், விளங்குதுங்களா?

''அவர் மட்டும் சொல்வார். 'செண்பகம் அவர் அப்பிடிப்பட்ட மனுசன் இல்லே. அவருக்கு யாராலோ ஏதோ தீம்பு ஆயிருக்கு'ன்னு. அப்புறம் ஒரு தபா கோர்ட்டுக்குப்

போனாரரா? கூண்டுலே ஏறி 'எங்க வீட்டு மாடி அறை யிலே தர்மராசன்னுபேர்லே குடியிருந்தவர் இவர்தான்னு' அடையாளம் காட்டினாரரா? திரும்பி வந்ததும் அவர் சொன்னதுதான். இல்லாட்டி எனக்கு எப்பிடித் தெரியப் போவுது?

''ஈதெல்லாம் சேர்ந்து மன்னன் மனசுலே புத்து வெச்சிடுச்சு. மனுசன் மண்ணை விட்டு மறைஞ்சும் போயாச்சு. ஆனால் ஒண்ணு...''

ஆச்சி நிமிர்ந்து உட்கார்ந்தாள்—அவளால் முடிந்த வரை.

''முன்பின் பார்த்திராத மனுசன் ஒருவன் கனாவுலே வந்து காண்பிச்ச இடத்தில், நனாவுலே தோண்டிக் கண்டு எடுத்து அதைப் பூசையிலும் வெச்சாச்சு. வெச்சது பொசுக்குனு மறைஞ்சு போச்சுன்னா அதுக்கு என்ன அர்த்தம்? எங்கள் நாட்டுலே அதுக்கு வேறு பேர் சொல்லு வாஹ எங்கள் நாடு மலையாளச் சீமை பார்டர்தானே!''

அப்போத்தான் அவருக்குச் 'சுறீல்' என்றது. நிமிர்ந்து உட்கார்ந்தார். ஆச்சி பேசி வந்ததெல்லாம் பாஷையே வேறு என்று உள் இறங்கிற்று.

''தாமிரத் தகடு திடீர்னு எப்படி வந்ததோ, அப்பிடியே திடீர்னு காணாமல் போச்சு. மொதல்லே அதுக்கு இடம் கொடுத்திருக்கக் கூடாது. சரி, கொடுத் தாச்சி. தவறு நேர்ந்துபோச்சு. பூவாடை அம்மன் காப்பாத்திட்டா. அப்புறமும் அதையே நெனச்சு நெனச்சு அத்தாலேயே முடிவும் காணுவானேன்? இப்ப மாடப் பிள்ளையார் எங்கள் வீட்டிலும் இருக்குது. என் மாமனாருக்குப் பாட்டனாருக்குத் தொகப்பனார் நாளி லிருந்து. அது மறைஞ்சு போயிடுச்சா? இன்னும்கூட அதன்

தலையிலே தண்ணியைக் கொட்டிட்டு ஒரு கட்டி வெல்லத்தையானும் நிவேதனம் வெச்சுட்டுத்தான் எங்கள் சோறு தண்ணி.

''தகடு வந்ததிலிருந்து வாழ்வு வளம் பொங்கிச்சு. சரி, பொங்கட்டும். பொங்கவேண்டிய வேளை, பொங்கிச்சு. சரி, வந்த அதிஸ்டத்தைத் திடம் பண்ணிக்கிட்டோம். ஆனால் ஒண்ணு. இப்பிடித் தகடு, பொம்மை, மோதிரம்னு ஏதோ ஒரு உருவத்திலே வர்ர திடீர் அதிஸ்டம் எப்பவுமே நமக்குப் புரியாத ஒரு சூழ்ச்சின்னு நான் சொல்லுவேன். கொடுத்ததுக்கு வட்டியும் மொதலுமா வசூல் பண்ணாமே விடாது. நீங்களே பாருங்களேன், தகடு, தான் போற போக்கில், முதலாளியையே பலிவாங்கிடுச்சு. சதி பண்ணத்தானே வந்தது!

''ஐயா, நிங்களைக் குறிப்பிட்டு நான் தனியா சொல்லலே. நீங்கள் அப்புறம் நனவாகி வந்தாலும், இப்போ என் எதிரே குந்திட்டுப் பேசிட்டிருந்தாலும் எங்களைப் பொறுத்தவரை, இல்லே என் மட்டும் பேசிக்கறேன், என்னைப் பொறுத்தவரை நீங்க ஒரு கனாத்தானே! அதுவும் நல்ல கனா இல்லே, துர்க்கனா!''

ஆச்சி படமெடுத்து ஆடவில்லை. தீண்டவில்லை. படத்தைக் கீழே அடித்து அடித்து விஷத்தைக் கக்குகிறாள். விஷம் பட்ட இடம் பொசுங்குகிறது. என்னைக் காண வேண்டித் தவம் கிடந்தாளோ?

''என்ன எழுந்தீட்டீஹ? பேச்சுலே பராக்கா மறந்துட்டேன். என்ன சோலியா வந்தீஹ?''

''அது இப்ப அவசியமாப்படல்லே.''

''பரவாயில்லே, சொல்லுங்க.''

''அவர்தான் இல்லையே?''

''அவர் இல்லாட்டி என்ன? நான் இல்லியா? உங்க மக மாதிரி. என்ன தயக்கம்? சும்மாச் சொல்லுங்க. முடிஞ்சா செய்யப்போறோம். முடியல்லே... என்னன்னு தெரியாமலே எப்படிச் சொல்றது?''

''ஒண்ணுமில்லே, நாடார்கிட்டே, கடையிலே கணக்கு எழுதற மாதிரி வேலை போட்டுக் கொடுப்பாரான்னு கேக்கலாமா என்று வந்தேன்.''

''அட கடவுளே, நல்லா வேளை பார்த்து வந்தீங்க. வியாபாரம் பழைய மாதிரி இல்லேங்க. சொணக்கமுங்க. பக்கத்திலேயே எத்தினி கடை வந்திருச்சு பார்த்தீங்களா? சக்களத்திமாரு.''

சுணக்கமா? உள்ளே கூட்டம் நெரிந்தது. கஷ்டம் எல்லாம் பேர் எடுக்கும் வரையில்தான். அப்புறம் அலுமினியத்தையும் ஸில்வர் என்று காட்டிவிடலாம் தெரிந்தும் அப்படியே ஏற்க மக்கள் தயாராயிருக்கிறார்கள். பேருக்கு அத்தனை மவுசு.

''இருந்தாலும் பரவாயில்லே. தேடிவந்திருக்கீய. வெறுங்கையா அனுப்பினால், அவர் கனாவுலே வந்து கோவிப்பாரு. உங்கள் மாதிரியும் நம்பகமா ஒரு ஆள் தேவைதான். சம்பளம் என்ன கேப்பீயன்னு உங்களை நான் கேட்கப் போவதில்லே. எனக்குக் கட்டுப்படியானதை நானே சொல்லிடறேன். மாதம் இருநூறு...''

''என்ன ஆச்சி இந்த நாளில் ஒரு ஆள் இருநூறிலே சாப்பிட முடியுமா?, வாடகை கொடுக்க முடியுமா?''

'அதுவும் உண்மைதான்'. மூக்கை ஒரு விரலால் சொரிந்துகொண்டு யோசனை செய்தாள். ''சரி, ஒண்ணு செய்வோம். நம்ம வீட்டுலே கீழே புழக்கடைக் கோடியிலே ஒரு அறை இருக்குதுங்க. ஓலைக்கூரைதான். அதனால்

என்ன? அங்கே நீங்க இருந்துக்கிடலாம். மாடி அறை மாதிரி ஆவாது. அங்கே ஆள் இருக்கு. தவிர அந்த குடக் கூலி இப்போ உங்களுக்குக் கட்டாது. உள்ளதைச் சொல்லணுமல்ல! இன்னொணுகூட சொல்வேன்''— தயங்கினாள்.

காத்திருந்தார்.

'கடையாளுங்களுக்கெல்லாம் நம்ம வீட்டிலேதான் சாப்பாடு. அவங்களுக்குத் தனி சமையலே நடக்கு. காலையிலே நாஸ்தா. மதியம் குளம்பு, பொரியல். ராவுலே பலகாரம் எங்க நாட்டுப் பழக்கம். அந்தப் பந்தியிலே நீங்க சேர்ந்துக்கலாம். ஆனால் சேருன்னு நான் என் வாயாலே எப்பிடிச் சொல்றதுங்க? சேதிதான் தெரிவிக்கலாம். அந்த சமையல் ஐயாவுக்கு ஒத்துக்குமா. வேறு இருக்கு. காரம் கூடுதலாயிருக்கும். மோர், தயிர், நெய் இல்லாமல் உங்களால் இருக்க முடியுமா? வாரத்துலே ரெண்டு நாள் அசைவம் இருக்கும். ஆனால் அன்னிக்கு நம்ம வீட்டிலே சாப்பிட்டுக்கலாம் வெச்சுக்கங்க...'

'அப்புறம் வந்து பார்க்கிறேன்' என்று எழுந்தார். ஆச்சி எழுந்து நிற்கவில்லை.

''ஐயா. உங்கள் பொருள் எல்லாம் அன்னிக்குப் போலிஸ் வாரியிறைச்சுட்டுப் போனாஹளே. உங்க பெட்டியிலே அடைச்சு, கடையில் கொண்டுவந்து வெச்சிருக்கு. எடுத்துப் போறீங்களா? இங்கேயும் நாலு பேர் நடமாடற இடம். நாளுக்கு நாள் நாடே கெட்டுப் போச்சு. ஏ சாமிவேலு!''

சாமிவேல் உள்ளே போய் எடுத்து வந்தான். வாங்கிக் கொண்டார்.

''சரி அப்புறம் பார்ப்போம்''

* * *

கூடையை விட்டு இறங்கினதும் தொண்டை காய்ந்திருப்பது தெரிந்தது, தொண்டையின் உள்சுவர் ஒட்டிக் கொள்கிற மாதிரி. அவ்வளவு வறட்சி. வீடுபோய் சேரும் மட்டும் தாங்காது, நோட்டை உடைக்கும்படி ஆயிற்று. என்ன செய்வது? இருப்பதால்தானே பயன்படுத்தத் தோன்றுகிறது! இல்லாவிட்டால் என்ன செய்வாய்? என்கிற கேள்வியும், புத்தியினுடையதுதான், ஆனால் புத்தி கேட்கிறதோ?

வீடு சேர்ந்ததும் பெட்டியைச் சோதித்தார். பூட்டா மண்ணா? சும்மா ஒரு வளைத்த கம்பி.

அவருடைய துணிகள்—அவசியம் வரவேற்க வேண்டியவைதான். உருப்படியானதொரு பலன்.

அவருடைய குட்டிக் காப்பிஃபில்ட்டர் தம்ளர். கோமதிக்கு மனம் நோகாமல் பக்குவமாகச் சொல்லி, 'இனி என் தம்ளரிலேயே என் காப்பி, என் குடிதண்ணீர்.''

பாஸ்புக் F.D. ரசீது, காசோலைப் புத்தகம், அவையெல்லாம் காணோம். போலீஸ்தான், வேறு யார்?

ஏதோ ஒரு துணியில் தற்செயலில் சுருட்டிக்கொண்டு நீளமாக...என்னது? பிரித்தால்—ஆ! எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார். உடல் பூரா ரோமாஞ்சலி. கண்களில் ஒற்றிக் கொண்டார். போட்டது போட்டபடி. எல்லாம் மறந்து போச்சு. ஒருமுறை நன்கு துடைத்து குழலை உதட்டுக்கு வைத்து, அதனின்று, மூன்றரை வருடங்கள் கழித்து...

—அந்த முதல் சப்தத்தின் தென்றல் உள்ளத்தைக் குளிப்பாட்டி, 'பந்தல் நனைந்து பச்சை கொண்டு, மிச்சப் பங்கு உலகிற்கு என்று வெளிக்கிளம்பியதும்—

மனிதன் தன்னை இழந்தான்.

* * *

நண்பனே,

உனை நான் வேறு எவ்வாறு விளிப்பேன்?

'காதலனே' என்பேனா, 'தம்பீ' என்று உறவு வைத்து அழைப்பேனா?

''நேற்று உனை நான் நட்டேன். ஆதலால் நாளை நீ பழமாகி எனக்குப் பாக்கி'' இதுதானே உறவு?

ஆனால் எனையே உனக்குத் தந்துவிட்டேன். பின் இன்னும் என்னால் உனக்கு ஆவது என்?

இதுதான் நட்பு.

நண்பனே, இந்நாள் நம் பிரிவை நான் தனியில் உணரக்கூட இயலாது, நீ என்னில் ஊறிப் போய் விட்டாய்.

அறிவும் நினைப்பும் தாண்டி, தன்மைகளின் தனி அழிந்து மோனத்தில் குழைவே நட்பு. பிழிந்த இனிப்புத் தவிர பலாதிகள் எது எது கலந்த பக்குவத்தை இனி எண்ணுவதில் என்ன?

எத்தனை நாள் பிரிந்து போனோம், இத்தனை காலம் எப்படிப் பிரிந்தும் இருந்தோம், மீண்டும் சந்தித்த பின்னர் தானே தாண்டிவந்த கடல் மிரட்டுகிறது, அதன் பரப்பில்.

அடசட்...சமுத்ரமாம், கடலாம்! பிரிவு தீர்ந்தபின் சமுத்திரம் வாய்க்கால். அதிசயம் இருவருமே சிறை யிலிருந்தோம். நீ பெட்டியில் நான் கம்பிகளுக்குப் பின்னால்.

உனக்காக நான் இருந்தேன் என்று ஏமாற்றிக் கொள்ள முடியுமோ?

ஆனால் சந்தேகமற நீ எனக்காகச் சிறையிருந்தாய்.

உலகம் உன்னை ஜடப்பொருள் என்கும். நீயா ஜடம்? ஹூ!

நினைத்தால் சிரிப்பேனா? அழுவேனா?

உனக்கு என் அஞ்சலி.

ஆச்சி உனக்கு அஞ்சலி. அவர்களுடன் சேர்ந்து என் நண்பனை நீ தூக்கி எறிந்திருந்தால்...?

இல்லை இல்லை நாம் மீண்டும் இவ்வாறு சந்திக்க லபியில்தான்,

இப்படிப் பிரிந்திருந்தோம். நம் பிரிவுக்கு அஞ்சலி.

நாம் அனாதைகள். ஆனால் நீ எனக்கு அனாத பந்தோ!

நம் முதல் சந்திப்பு. அன்று ஒரு நாள்... இல்லை அது என்றோ ஒரு நாள்.

நீ சப்பாத்திப் புதரடியில் உருண்டு கிடந்தாய். உன்னை ஆக்கி, எந்தப் பிடாரன் எனக்காக உன்னை அவ்வாறு சப்பாத்திப் புதரடியில் விட்டுப்போனானோ, அல்ல நீ நழுவி விழுந்தாயோ அல்ல அவன் உன்னை மறந்தானோ அவனுக்கு அஞ்சலி.

என்னைப்பற்றிச் சொல்லிக்கொள்ள என்ன இருக்கிறது?

குழவிப்பருவத்திலேயே தாயறியேன், தந்தை அறியேன்.

என்னை வளர்த்து ஆளாக்கிய என் பெரியப்பா இட்ட உயிர்ப்பிச்சை நான். அவரில்லாவிடில் என் மேல் எப்பவோ புல்.

பெரியப்பா, என் தந்தையே, என் தாயே, என் குருவே உங்களுக்கு அஞ்சலி.

அஞ்சலியென்பது என்னென்று இப்போதுதான் புரிகிறது.

உயிருக்கு நன்றி வேளை. நன்றி வேளை ஆனந்த நிலை. அஞ்சலியே! நன்றியே! என் ஆனந்தமே! ஹே அனாத பந்தோ!

நாம் அநாதிகள். நம் பின்னும் அறியோம் முன்னும் அறியோம். அறியவும் வேண்டாம்.

நாம் அறிவற்றவர்கள்.

நீ யாரோ நான் யாரோ யார் யாரோ ஆரிரரோ.

நீயும் நானும் நீலாம்பரம்.

இதோ—பிரிந்து கூடிய முத்தத்தில் என் உதடுகள் உன் மேல் பொருந்தி,

நாக்கு நுனி எச்சில் உன் மேல் பட்டுச் சுவைத்து,

என் மூச்சு உன் உள்புகுந்து ஓடி, இத்தனை கால மோனம்.

கலைந்த முதல் வீறலில் நீ அலறினதும்...

நீயா ஜடம்? ஹூம்! சொன்ன வாயை அலம்பு.

கோபம் படமெடுக்கிறது.

படத்தில் ரங்குகள் ஓடி விளையாடுகின்றன.

நாத ரங் லீலா

ஸ ரி க ம ப த நி

ஸ ப் த ஸ் வ ர மு

நி த் யா லோ லெள

வித வித கானமு...

சிரிக்கிறேன் அழுகிறேன் ஏ என் ஆனந்தப்பித்தே!

கம கம

கமகங்கள் கமகமக்கின்றன. சிந்தனையோடு கலக்கின்றன. சிந்தாநாதம் தோன்றுகிறது. சிந்தா நாத நதி

பாம்பு வளைந்து ஓடுகிறது. கம கம கமக ஸகம மகஸ நெஞ்செல்லாம் மணக்குதம்மா! வித வித நாதமு வித வித பேதமு வித வித கானமு வித வித ஜாலமு.

ஆனந்தப் பிதற்றலே!

முன்னால் நாம் ஒருவரையொருவர் அறிந்ததில்லையா?

ஆனால் இன்று இப்போது என்ன புதுமை?

புதுமை இருக்கிறது. எப்போதும் இருப்பதுதான். ஆனால் ஒவ்வொரு அடையாளமும் கண்டுகொள்ளும் ஒவ்வொரு சமயமும் புதுமைதான். அடையாளங்கள் அலுக்காதவரை புதுமைதான். புதுமையின் பெருமையே அதுதான்.

உபதேச நேரம், சமயம் எப்போது எவ்வாறு சீடனுக்கும் தெரியாது...

குருவுக்கும் தெரியாது. இப்போதுதான் தெரிகிறேன்.

உபதேசமான பின்னும் ஆன உபதேசம் என்ன?

மந்த்ரமா? நாமமா? இப்படியிரு, அப்படியிராதே... இதெல்லாம் உபதேசமன்று.

சக்தியோடு மோதி ஏதோ விதத்தில் நான் செத்துப் போனதை,

அறிந்து புறப்பட்டேனே இதுதான் உபதேசம்.

காதோடு காது இல்லை.

வாய்மொழியும் அன்று

கண்ணோடு கண் இல்லை...

இத்தனையும் உண்டு இத்தனையுமில்லை

இதற்கு மேல் உண்டு.

பொறி நேர்ந்து அதன் மின்னலில் பொரிந்தேன்.

இதுதான் உபதேசம் என்று கண்டுகொண்டேன்.

என் குழலே, என் குருவே, என் அலையே, என் துணையே.

அஞ்சலி.

என் அசடே, நான் வெட்கத்துக்கு உரியவன். என்னை எனக்கு நிரூபணையின் வீண் முயற்சியில், விருதாவாக ஏன் இத்தனை வார்த்தைகள், விளக்கங்கள், உபதேசங்கள்?

ஏன்? உனக்குச் சொல்லின் துணை வேண்டியிருக்கிறது.

முத்தியென்று சொல்வதை, சொல்லிக் கொள்வதைக் கண்டு கொண்டாலும், அது ஒரு மனநிலைதான்.

உச்சி மனநிலையென்று வேணுமானால் கொள். மனநிலையெனில் அதுவும் அலை நிலைதான்.

இனங்கண்டாயா, சுவை கண்டாயா, மண்டை வெடிக்குமுன் இறங்கு.

அங்கே இருந்துகொண்டேயிருக்க முடியாது.

அனித்யம்தான் நித்யம் கரை காணத்தான் அலை.

அலையில்லாத கரை என்ன கரை? உயிரில்லாத கரையில் ஒதுங்காதே.

ஆச்சி, தன் கணவன் இறந்ததற்குக் காரணம் நான் என்கிறாள்.

அவள் கணவன் முன்பின் பார்த்ததுகூட இல்லை. நான் அவள் கணவன் கனவில் தோன்றினதே அடிப்படைக் காரணம் நான் எனும் அவள் வாதத்தில் நியாயம் இல்லாமல் இல்லையே!

காற்றோடு காற்றாய்க் கரைந்துபோய்விடுவேனோ என் கோமதி கவலைப்படுகிறாள்.

ஆச்சி சொல்வதும் கோமதியின் கவலையும் ஏதோ தடத்தில் ஒன்றுதானோ?

ஆனால் சக்கரம் அறுக்கிறது.

கபாலம் ஏந்துகிறது.

கடவுள் உருவத்தில் கல் சிரிக்கிறது.

ஆபிஸிலிருந்து கோமதி வீட்டுக்குத் திரும்பி வந்த போது, அவள் வந்ததுகூட அவர் அறியவில்லை. சுவரில் சாயாமல் முதுகு நிமிர்ந்து அசைவற்று மடியில் குழலுடன் உட்கார்ந்திருந்தார்.

''ஸார்! ஸாரு!'' சிரித்துக்கொண்டு கண் எதிரே விரலைச் சொடுக்கினாள். ஊஹூம் கோமதி பயந்து போனாள். கண்கள் உள்ளுக்கு இழுத்திருந்தன.

''ஸார், ஸார் தர்மராஜன் ஸார்...'' தோளைப் பிடித்துக் குலுக்கினாள். மான்டில் பிசுபிசுத்துப் போய் விடுமோ?

அப்போதுதான் விழிகள் நிலைக்குத் திரும்பின. நினைப்பும் திரும்பிற்று.

''என்ன கோமதி?''

''என்ன ஸார் ஆச்சு?''

''எனக்கு ஒண்ணும் தெரியாதே! முன்றானையால் அவர் முகத்தைத் துடைத்தாள். வேர்த்துக் கொட்டி யிருந்தது. அவர் உடனே தன்னை விடுவித்துக்கொள்ள முயலாததே ஆச்சரியம்.

அவள் உடனேயே கொணர்ந்த ஹார்லிக்ஸ் பானத்தைக் குடித்ததும் ஒருவருக்கொருவர் மோனமான ஒப்புதலில் விஷயம் மேலும் விஸ்தரிப்பு இல்லாமல் அங்கேயே முடிந்தது.

* * *

''ஸார், இதைப் போட்டுண்டு பாருங்களேன், அளவு சரியாயிருக்கான்னு! ஏதோ ஒரு கண் மதிப்பில் வாங்கி வந்துட்டேன்.''

போட்டுக்கொண்ட பிறகு ஜிப்பாவை விலாப்பக்கங்களில் இழுத்து விட்டாள்.

"கொஞ்சம் தொளபுளாத்தான். உங்களுக்கு எப்படியிருக்கு?"

முறுவலித்தார்.

"என்ன ஸார், ரசனை பண்ணல்லே? எனக்குத்தான் துணிச்சல் வந்துடுத்தா? நீங்கள்தான் படிஞ்சு போயிட்டேளா"

முறுவலித்தார்.

"ஏதேனும் பதில் சொல்லுங்களேன்!"

"சொல்ல என்ன இருக்கிறது? எனக்கு இப்போ தேவையாத்தானே இருக்கிறது!"

மறுப்பு எதற்கு? அலைகள் மேலே பாய்கின்றன. பாயத்தான் பாயும். நான் அடியில் இருக்கும் பத்ரம், இருந்தவரை லாபம் என் செயலில் எதுவுமே இருப்பதாகத் தெரியவில்லை. மித, மித, மிதந்து கொண்டேயோ, சாகத் துணிந்தவனுக்கு மட்டுமல்ல. மிதக்கத் தெரிந்தவனுக்கும் சமுத்ரம் முழங்கால் மட்டும்தான்.

தற்செயலாக கை, ஜேபியுள் போனதும் ஒரு நோட்டு மொட மொட.

நிஜமாகவே சிரிப்பு வந்துவிட்டது. பொறுப்பில்லாத தலைமுறை.

வங்கியில் வேலை செய்தால் ஒரு சௌகர்யம். புது நோட்டு.

* * *

இத்தனை நாட்களுக்குப் பின்—

விழிகள் துளும்பிவிட்டன. அவருடைய கண்ணீரின் ஸ்படிகத்தினூடே அவள் புன்னகை ஜாஜ்வல்யம் வீசுகிறது.

அம்மா!

உள்ளே கால் கட்டைவிரல் நுனியில் அலை கிளம்புவது தெரிந்தது. சுருண்டு கொண்டே மேல் ஏறி, மார்பின் அகலத்துக்கு அங்கே உள்விரிந்து, தொண்டையை அடைத்து மேலும் மேனோக்கிய அதன் இரக்கமற்ற பாதையில் நெற்றியில் புருவ மத்திக்குத் திடீரெனக் குறுகி, அந்தப் புனல் குழாயுள் புகுந்து தடைப்பட்ட முழுவேகத் துடன் நெற்றி விசாலத்துக்குக் குழுமி மூளையுள் மோதி விரிந்ததும்—

கண் இருண்டது தூணைப் பிடித்துக் கொண்டார்.

மழை வெள்ளத்தில் பிடிபடாத தறியாய் சுயநினைவு தடுமாறிற்று. ஒரே பலஹீனம். வயது கவிழ்க்கிறது.

அந்த உள் அந்தியில் ஏற்றிய திரிகளில் எழுதிய ஒரு சொல் புருவ நடுவினின்று புறப்பட்டு உள் கண்ணுக்கெதிர் கற்பூர ஹாரத்தியாய் வட்டமிட்டது.

அஸ்து! அஸ்து!! அஸ்து!!!

நன்று! நன்று!! நனறு!!!

யாவும் நன்றே என்று, என்றும் எப்போதும் நன்றி செலுத்திக் கொண்டேயிரு!

அஸ்தி! அஸ்தி!! அஸ்தி!!!

அஸ்தியிலிருந்துதான் அஸ்து.

நேற்று ஒரு மாதிரி. இன்று இன்னொரு மாதிரி. அதுவேதான் ஆனால் வேறுமாதிரி?'

நேற்றாவது, இன்றாவது!

''யாரு? பார்த்தமாதிரி யிருக்கே! தர்மராஜனா! இல்லே யாரையேனும் தப்பாநெனச்சுண்டு உளர்றேனா?''

''மணி! எப்படியிருக்கே?

''அப்போ நீதான்? அதைச் சொல்ல இந்நேரமா? எனக்குப் பார்வை ரொம்ப மந்திச்சுப்போச்சு. உடம்பில் சர்க்கரை அப்படிக் கூடிப்போச்சாம். இன்னும் பாக்கி ஆயுசைத் தள்ளி ஆகணும். வீட்டில் என்ன மூலைக் கொண்ணா தனித்தனி தலைவிரிச்சாடறதுகள். சமாளிக் கறதாயில்லை. அது கிடக்கட்டும். ஆமா அதென்ன பூஜை யிலே பங்கு கேட்டு, ஸாஸனம் காட்றேன்னு பயமுறுத்தி, ஒழுங்கா மூணு நாளைக்குக் கூட முத்துமழை பெய்யல்லே, வருடக் கணக்கிலே ஒரே அடியா தலை மறைஞ்சுட்டே? இதுதான் உன் உரிமை லக்ஷணமா? உன்னை நம்பி இரண்டு சனிக்கிழமை அம்பாளுக்கும் பூஜையே தப்பிப் போச்சு. நான் தர்மகர்த்தாகிட்ட பட்டபாடு! அப்பா உன் மாதிரி மனுஷாளிடம் நம்பிக் காரியத்தை ஒப்படைச் சால் வேறே யமனே வேண்டாம். நீயே எமதர்மராஜன் தானே!''

''மன்னிச்சுக்கோ மணி!''

''மன்னிக்கறது கிடக்கட்டும்—அதென்ன அப்படியே அம்பேல் ஆயிட்டே? என்ன ஆச்சு உனக்கு? உட்கார்ந்து பேசுவோமா? வரவர என்னால முடியல்லே. திடீர் திடீர்னு தலை சுத்தறது. நீ கூட சத்தே வாங்கினமாதிரி... என்ன ஆச்சு உனக்கு?''

''என்னவோ நேர்ந்துபோச்சு. சிறையிலிருந்து வந்தி ருக்கேன் ''

''அப்படின்னா?''

''ஜெயில்.''

''என்னது?'' மணிக்குத் தூக்கிவாரிப் போட்டது. எட்ட நகர்ந்து உட்கார்ந்தான்.

''என்ன, எனக்கு உடம்பு சரியில்லேன்னு சொன்ன துக்குப் பரீக்ஷை பண்ணிப் பாக்கறியா? என்ன உளர்றே?''

''இல்லை மணி, உள்ளதைத்தான் சொல்றேன். மூணு வருஷம், விடுதலையாகி பன்னிரண்டு நாளாறது.''

"நம்பவே மாட்டேன். உனக்கென்ன சபலப்படற வயஸா, நிலைமையா? திருஷ்டினையா, வரண்டினயா? இல்ல குத்தா, கொலையா?"

"ரெண்டும்தான்னு வெச்சுக்கோயேன்."

"அப்பா தலை சுத்தறது. வைத்தீ! அடே வைத்தீ!!

"என்னண்ணா?" கர்ப்பக்ருஹத்திலிருந்து ஒரு அங்குட்டுவம் வெளிப்பட்டது. பையனல்லன், குள்ளன். முற்றிப் போன முகம்.

"மாமாவண்டே காசு வாங்கிண்டு மாருதிக்குப்போய் ரெண்டு அயன் மாருதி ஸ்பெஷல் வாங்கிண்டு வா—வா, சீக்கிரம். தருமு, சில்லறையில்லை நோட்டுன்னு சாக்குச் சொல்லாதே. எவ்வளவு பெரிய நோட்டையும் மாருதிலே மூணே நிமிஷத்துலே உடைச்சுடுவான். மாருதியா, கொக்கான்னானா? அப்படி ஒரு வியாபாரம். சரி உன்னைப் பத்தி சத்தே விபரமாச் சொல்லு.

"விஷயம் தெரிஞ்சு என்ன செய்யப்போறே மணி? விஷயத்தைத்தான் சொல்லிட்டேனே! சொன்னவரைக்கும் ஏத்துக்கோ."

"நான் உன்னை நம்பல்லே."

"அதற்கு நான் என்னப்பா செய்ய முடியும், நீயே சொல்."

"ஓஹோ, உண்மை விளம்பி தர்மராஜனா? அசுவத்தாமா ஹத: (குஞ்சர:) அப்போ உன் தேர்ச்சக்கரம் பூமியில் பதியல்லே, அந்தரத்தில்தான் நிக்கறதாக்கும்! நீ தான் உண்மையைச் சொல்லிட்டியே!'

அவருக்குக் கோபம் வரவில்லை. அலுப்புத்தான் வந்தது.

"சரி, அப்படியே நீ உள்ளே இருந்துட்டு வந்ததாவே வெச்சுப்போம். உனக்காக அதை அப்பட்ட மா அப்படியே

என்னிடம் சொல்லித்தான் ஆகணுமா? என்னவோ சிங்கப்பூர் போயிருந்தேன், துபாய் போயிருந்தேன்னு சொன்னால் எனக்கு என்ன தெரியப்போறது? உன்னுடைய உண்மை எனக்குத் தெரிஞ்சுதான் ஆகணுமா? எனக்கு உன் அதிர்ச்சியைத் தந்துதான் ஆகணுமா?

''அவள் சன்னதியில் உட்கார்ந்துகொண்டு பொய் சொல்ல நாக்குக் கூசறது.''

''அத்தரி கொடக்கல்னானாம்' மணிக்கு வந்த சிரிப்பில் தொண்டையில் சிலம்பு அதிர்ந்தது. ''டேய், பலே ஆளுடா நீ! அவள் பீடத்துக்கே பட்டாசு வைப்பியே... இதோ காப்பி வந்துடுத்து. அப்பா என்ன கொதிக்கிறது! சீப்பிக் குடி பரவாயில்லே. கையை அலம்பிண்டுடலாம். சன்னிதானம் பார்க்காதே, காப்பி தர்மம் எச்சில். சரி, நீ மாட்டே. அப்புறம் உன் இஷ்டம். நான் வியாதிக்காரன். காப்பிஜோர் எப்படி? அதுவும் இந்த வேளைக்குப் பால் புதுசா வந்து இறங்கியிருக்கும். எனக்குத் தெரியும் ஒரு தடவை கவர்னர் காரே வாசலில் நின்னுண்டிருந்ததாகக் கேள்வி. சரி அதெல்லாம் போகட்டும். அப்போ, உன் சொல்படி, நீ ஒரு ஜெயில் பறவை, அப்படித்தானே?''

அவருக்குக் கீழுதடு லேசாகப் பிதுங்கிற்று. இளநகையா, அடிக் கசப்பா?

''சரி. பறவை இந்தப் பக்கம் ஏன் பறந்து வந்தது? இந்தப் புண்யவதி, அன்னபூரணித்தாய், படி அளக்கரவளிடம் உன் ரேஷின் விசாரிக்க வந்தையா?''

ஆச்சர்யத்தில் அவர் கண்கள் விரிந்தன. ஆமாம், அதெப்படி? எனக்கே தெரியாமல்? ஒருவேளை என்னைப் பார்க்கணும்போல அவளுக்கே இருந்ததா? அப்படி நினைப்பதே அகம்பாவம்தான். ஆனாலும் என் கால் எப்படி, என் குருட்டு யோசனையில் என்னை இங்கே இழுத்து வந்து சேர்த்தது? இங்கே வரும் திட்டத்தில்

நிச்சயமாக நான் இல்லை. எனக்குத் தோன்றக்கூட இல்லை. ஆனால் அதை இவனிடம் சொன்னால், இவனுக்கு என்ன புரியப் போகிறது?

''இல்லை என்னைப் பார்க்க வந்தையா? உன் ஸாஸன உரிமையைக் கொண்டாடிண்டு? ஆமாம் அது இப்போ சொல்லுமா, உன் புதுப் பின்னணியில்?''

புன்னகை புரிந்தார். ஆனால் அதில் சிரிப்பு இல்லை.

''உன் கள்ளச்சிரிப்புக்கு என்ன அர்த்தம்? இந்த தர்ம கர்த்தா இருக்கானே, அவனை உனக்குத் தெரியாது, அவன் ஒரு கொள்ளி. நம் முன்னணி, பின்னணி அவனுக்கு எட்டித்துன்னா, முதலில் நம்மை இப்படி உட்கார்ந்து பேசவே விடமாட்டான். இன்னும் கேட்டால் இப்போ உன்னால் எனக்கு ஆபத்து. அப்படி ஒரு சந்தேகப் பேர் வழி அவன். என்ன தர்மராஜா, எப்பவும் நீ எனக்கு ஒரு சிக்கலாவே யிருப்பே போல இருக்கே?''

''அம்பாளைத் தரிசிக்க வருபவர்களைத் தர்மகர்த்தா தடுக்க முடியுமா? நான் கோவிலிலிருந்து எதையும் அபகரிக்கவில்லையே!''

''அப்படி ஏதும் இங்கே நீ கனவிலேகூட நினைக்க முடியாது. இதோ நான் இங்கே உட்கார்ந்திண் டிருக்கேன், நீயே போய் அம்பாள் கழுத்தில் பார். தாலிக் கயிறில் ஒரு பொட்டைத் தவிர வேறு எதுவும் நீ காண முடியாது. அப்படி ஒண்ணும் இவள் இல்லாதப்பட்டவள் இல்லை. ஒரு வெள்ளிக்கிழமை, நாள் பண்டிகை தினத் துக்குத்தான் முழு அலங்காரம். ராவோடு ராவா தர்ம கர்த்தா வந்து கழட்டி வாங்கிண்டு போயிடுவான். மற்ற நாளைக்குச் சாணி பொறுக்கற குட்டிமாதிரி பரதைக் கோலம் தான். அம்பாளாயிருந்தால் மட்டும் ஆயிடுத்தா? மாரளவுக்குக் காச்சாலும் அவள் பாடு நாயனும்னு

அவள் தலையில் எழுதியிருக்கே? தர்மராஜா, விதி யாரையும் விடல்லெ... எங்கே கிளம்பிட்டே, இவளைத் திட்டறது உனக்குப் பொறுக்கல்லியா?''

''உன் இஷ்டம் எப்படியேனும் வைத்துக்கொள். எனக்கு நேரம் ஆகிறது.''

''சரிதான் உக்காரப்பா. இந்த நேரத்தில் போய் என்ன வெட்டி முறிக்கப்போறே? தருமு, எனக்கு உடம்பு சரியில்லேடா.''

''உடம்பைப் பார்த்துக்கொள் என்று சொல்வதைத் தவிர நான் என்ன செய்ய முடியும், நீயே சொல்!''

''அதென்ன அவ்வளவு சுலபமாத் தட்டிக் கழிச்சுட்டே?''

''உண்மையிலேயே நான் என்ன செய்ய முடியும்? பல வருடங்கள் கழித்து ஒரு முறை சந்தித்தோம். மறுபடியும் காலம் கழிந்து இப்போ. இதோ போய்க்கொண்டிருக்கிறேன். மீண்டும் எப்பவோ, இந்த நிலைமையில் என்ன சரீர ஒத்தாசைகூட என்னால் முடியும்?''

''உன் வாயிலிருந்தே அவள் வரவழைச்சுட்டாள். சரீர ஒத்தாசை வேணாது செய்யமுடியும்.''

''புரியல்லியே மணி!''

''தர்மராஜா, உடம்பு ரொம்ப அலுப்பாயிருக்குடா; அதுவும் உன்னைப் பார்த்ததும் அலுப்பு கூடிப்போச்சு.

''அது என் ராசி போலும்!''

''இன்னி பூஜையைக் கொஞ்சம் கவனியேன்—நான் சத்தே இளைப்பாறிக்கறேன்.''

அவருக்குச் சற்றுத் திடுக்கிட்ட மாதிரி ஆகிவிட்டது.

''என்ன மணி சொல்றே? ஸ்னானம் பண்ணாமல் அம்பாளைத் தொடறதா? மடி வஸ்திரம் இல்லை...''

''ஆமாம் அவள் அளக்கற படிக்கு ரெண்டாவது ஸ்னானம் வேறேயாக்கும். ஒண்ணு ஞாபகம் வெச்சக்கோ தருமு. இவள் மத்தவாளுக்குத்தான் தெய்வம், சாமி அம்பாள். நமக்கு இவள் வயிற்றுப் பிழைப்பு. சரி நான் சொல்றதைக் கேளு. சொக்கா பனியனைக் கழட்டி வை. 'இமம்மே வருண' சொல்லி ப்ரோக்ஷணம் பண்ணிக்கோ எதேஷ்டம் உனக்கு சரிப்படல்லேன்னா, வாசல்லேயே கிணறு. இழுத்துக் கொட்டிக்கோ. இடுப்புத் துணியை நனைச்சு நன்னாப் பிழிஞ்சு ஏழு தடவை உதறிட்டால், மடிவந்துடறதுன்னு சாஸ்திரமே சொல்றது. விபூதியைக் குழைச்சுப் பட்டையா நெற்றியில் போடு. உனக்கோ தேஜஸ் எப்படியோ வந்துடறது. போன தடவையே கவனிச்சேன், இன்னும் என்ன வேணும்? வரவா நேரம் ஆச்சு. இன்னிக்கு ஒரு அபிஷேகம் ஸஹஸ்ர நாமம் இருக்கு. பிள்ளை மஞ்சள் காமாலையிலிருந்து மீண்டானாம், அவன் நக்ஷத்ரம் இன்னிக்கு. நைவேத்யம், பெண்ணரசி இன்னும் கொஞ்ச நாழியிலே கொண்டு வந்துடுவா— சொல்லிண்டேயிருக்கேன் வந்துட்டாளே! ஏடி குட்டி, இந்த மாமாவைப் பார்த்த ஞாபகம் இருக்கா? எப்பவோ வந்தார். மறுபடியும் இப்பத்தான் வந்திருக்கார்.''

''மாமா இல்லே. பெரியப்பா.''

மணி உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுப் போனான்.

''அட, தர்மராஜா, பார்த்தியா? 'குற்றவாளியை'ப் பார்த்தவா, அடையாளம் சொல்ல, போலீஸ் 'பாரேட்' நடத்துமாமே! பேசாமே குட்டியை அங்கே சம்பளத்துக்கே வெச்சுட வேண்டியதுதான். என்ன ஞாபகசக்தி பார்த்தியா? கொஞ்சம் சிபாரிசு பண்ணேன்...

குட்டி கண்களில், கணக்குடன் பெரியப்பாவைப் பார்த்தாள்.

''போன தடவை நமஸ்காரம் பண்ணினப்போ அஞ்சு ரூவாக் கொடுத்தார்.''

''ஆமாண்டி குட்டி, எனக்கு மறந்து போச்சே, நமஸ்காரம் பண்ணு!''

தர்மராஜன் ஆசீர்வாதத்தில் கை கூப்பினார்.

''என்ன அவ்வளவுதானா? குழந்தை நமஸ்கரிக்கிறாள், சில்லரையைத் தளர்த்து...''

''பழைய நிலையில் நான் இல்லேப்பா.''

''சரி விடு. தானாக் கனியாததைத் தடியால அடிச்சுக் கனிய வெக்கறவன் நான் இல்லே. சரி, எதுக்கு நிக்கறே, ஸ்னானம் பண்ணப் போயேன்! ஜிப்பாவை இங்கே கொடு. தர்மராஜா, இதோ பார்த்துக்கோ, உன் ஜேபியிலிருந்து பத்துரூபா நோட்டு ஒண்ணு எடுத்து, குட்டிக்கு உன் ஆசீர்வாதமாக் கொடுக்கறேன். அப்பறம் அதைக் காணோம் இதைக் காணோம் என்காதே. இத்தனை பணத்தை வெச்சுண்டா, பஞ்சைப் பாட்டுப் பாடறே? அதென்னமோ எனக்கு மனசு கேக்கல்லேப்பா. கன்யாப் பெண் நமஸ்காரம் பண்றா, வெறுங்கையோடு அனுப்பக் கூடாது. பத்து ரூபாய் ஏன் கொடுத்தேன்னு உன் கண் கேக்கறதே. வாய் பேசாட்டாலும், அதுக்கும் ஜவாப் இருக்கு. உன் பழைய அஞ்சு ரூபாய்க்கு இந்த நாளில் என்ன கிடைக்கும்னு நெனச்சுண்டிருக்கே? உனக்கு எங்கே தெரியப்போறது? நீதான் உள்ளே இருந்துட்டியே! மாருதி விலாசுலே, அஞ்சு ரூபாய், ஒரு நெய் ரோஸ்டுக்கும் காப்பிக்கும் சரியாப்போச்சு. அப்புறம் ஒரு பீடாவுக்கு ஆசைப் பட்டால்கூட வழியில்லே. சரி, வேலையைப் பாரு!''

தர்மராஜனுக்கு அருவருப்புத் தட்டிற்று.

* * *

ஸ்பரிசம் என்றாலே இந்தக் கூச்சம், தன் மண வாழ்க்கையின் முறிவிலிருந்தா, அல்லது இயல்பான தன் தன்மையையே சேர்ந்ததா? இந்தக் கட்டத்தில் நிச்சய மாகச் சொல்ல முடியவில்லை.

நிர்மாலியத்தையும் ஆடையையும் களைந்து, விக்ர ஹத்தின் மீது கைப்பட்டவுடன் தர்மராஜனுக்கு மூர்ச்சைப் போட்ட மாதிரி ஆகிவிட்டது. கர்ப்பக்ருஹத்துக்கு வெளியே நிற்பவர், மற்ற சூழ்நிலையின் நினைப்பு, அனைத்தும் ஒரு பெரும் இருள் குழைவில் கரைந்து போயின.

கூரையிலிருந்து சங்கிலியில் ஒரு பெரிய அகல்விளக்கு லேசாக ஆடிற்று. சுடர் மட்டும் நட்ட இலையாக அசை வற்றுச் செவந்து, பழுத்து, விளும்பில் நீலம் லேசான நூல் கோடு கட்டி, திரும்பவும் செவந்து, மாறி மாறி இதே முறையில் இந்த வர்ண ஜாலம் நிகழ்ந்தபடி, கமலாம்பிகை சுடர்வண்ணத்தில் ஸ்வரூபமாக மாறினாள்.

பிரதிஷ்டையாகி இருநூறு வருடங்களாயிருக்கும் என்று பெரியப்பா சொல்லியிருக்கிறார். உத்தாரணத்தி லிருந்தே, இந்தக் குடும்பம்தான், தலைமுறை தலைமுறை யாகப் பூஜை செய்து வருகிறது.

பெரியப்பா இருந்தவரை, பூஜைக்கு வேறு யாரையும், தன் தம்பி, பிள்ளைகளைக்கூட, விக்ரஹத்திடம் விடுவ தில்லை. 'ஒரு கைப்பட இருந்தால் தான் மூர்த்தம் கூடும்' என்பார். ஆகவே, அபிஷேகத்துக்கு அண்டாவில் ஜலம் கட்டுவோம். தீபாராதனையின் போது, விதவிதமான தீபாராதனைகளை ஏற்றிப் பெரியப்பா கையில் கொடுப் போம். பிறகு உபசாரங்கள். விசிறி, கண்ணாடி, சாமரம், இத்யாதிகளைக் கொடுப்போம். அத்துடன் சரி. கடைசி யாக அந்தப் பெரிய பஞ்சமுக தீபாராதனை ஆனதும், அதைப் பெரியப்பாவிடமிருந்து வாங்கி வெளியே ஜனங் களுக்கு ஒற்றிக் கொள்ளக் காட்டி குங்குமத் தட்டில் அங்கங்கே விழும் சில்லரையை மட்டும் இடுப்பில் நிமிண்டிக் கொள்வோம்.

அந்தப் பணத்தை ஓரிருமுறை பெரியப்பாவிடம் கொடுக்க முயன்றபோது, தொடக்கூட மறுத்துவிட்டார். 'அதில் கலந்திருக்கும் எண்ணங்களை, தகாத செயல்களை நீயும் நானும் அறியோம். அவனவன் சுத்தமே, பெரும் பாடாயிருக்க, மற்ற அசுத்தங்களையும் தொட்டு, இந்தக் காசின் மூலம் இதைக் கொடுத்தவனையும் நான் தொடணுமா? எனக்கு அது தேவையில்லை.'

பெரியப்பாவின் வார்த்தைகள் ஆணித்தரமானவை. மறக்க முடியாதவை. சிந்திக்கச் சிந்திக்க, அவைகளில் புதுப்புது அர்த்தங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

பெரியப்பா அப்படித் தன் ஒரு மனத்திண்மையில் காத்த தூய்மைதான் இன்னும் அவள் முகத்தில், நெற்றியில், சிரிப்பில், மோவாய்க் குழிவில் துலங்குகிறது. இல்லாவிட்டால், இன்னமும், இந்த முறையில், பெரியப்பா போன பின்னரும்கூடத் தாக்குப் பிடிக்கும் அந்த ஆசார சீலத்தை மணியும் நானும் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியுமா?

மூர்த்தி என்னவோ சின்னதுதான். அடி அகலமாக ஆரம்பித்து படிகள், படிப்படியாகக் குறுகி, தாமரையில் அம்பாள் நிற்கிறாள். உற்சவர் கிடையாது. ஆகையால் புறப்பாடுகளுக்கு வழியில்லை. நினைத்த அரைக்கண, கால் வினாடிக்குக் கனத்த தவத்தின் தருணங்கள் அனைத்தும் ஒரு முகமாக ஆஹுதியான காரணந்தானோ என்னவோ, கமலாம்பிகை, அவளுடைய அழகு ரஹஸ்யம் ப்ரபையாக அவளைச் சூழ, அதன் நடுவே ஒளிர்கிறாள்.

கல்லின் தரமா, இழைப்பின் உயர்வா தெரியவில்லை. உள்ளங்கைக்கு அவள் ஸ்பரிசம் அத்தனை ம்ருது, கூச்சம், பயம்.

வாயிலிருந்து, இதுவரை அவைகளின் அர்த்தத்தில் கவனமிலாத மந்திரங்கள், தாமே உச்சரிப்பில் புறப்படு கின்றன. நெஞ்சடியில், பழக்கமில்லாமல், புதைந்து போன மந்திரங்கள்; அவள் தனக்குத் தொடுக்கும் புஷ்பங்களாக வரவழைத்துக் கொள்கிறாள். எண்ணெயைக் கையில் எடுத்து அவள் அங்கங்களில் அப்புகையில் மனம் அஞ்சு கிறது, கூடவே பரவசமுறுகிறது.

அம்மா, இது எனக்குப் பழக்கப்படாத அனுபவம், தப்பில்லாமல் செய்யவேண்டுமென்று சிரமப்படுகிறேன். என் சிரமம் பார்த்தேனும் என்னை மன்னித்துக்கொள். இத்தனை நெருக்கத்தில் உன் முகம் எனக்குக் கண் கூசு கிறது. பெரியப்பா, எனக்குத் துணையிருங்கள். உங்கள் கைகளை எனக்குக் கொடுங்கள்.

அவள் புன்னகை புரிகிறாள்.

எண்ணெய்க் காப்பில் மேனி பளபளக்கிறாள். உச்சரிக்கும் மந்திரங்கள் எனக்குக் கவசம்.

புலிக்குட்டியின் அழகையும், ஆபத்கரத்தையும், குரூரத் தையும் ஒருங்கில் படைத்த தேவியே உனக்கு அஞ்சலி. பின்னாலேயே, முன் உருவின் நிழலாய், நிழல் காட்டும், உன் தாய்மைக்கும், கண்களில் ஒழுகும் பொறுமைக்கும் கருணைக்கும் அஞ்சலி. உன்னில் எல்லாமே சத்தியம். இங்கு பொய்யின் மூச்சுக்கூடப் புக முடியாது. ஆகையால், கமலாம்பிகே, நீயே புலி. நீயே பூமி. நீயே மாதா.

ஒவ்வொரு அபிஷேகத்துக்கும் தண்ணீரை வீசி இரைத்து, முன் சுவடுகள் கலை(ரை)ந்த பின்னர் அடுத்த அபிஷேகம்—சந்தனம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், பால், தயிர்—ஒவ்வொரு ஸ்னானத்திலும், உருவம் ஒரு புது பரிணாமத்தில் பிதுங்குவது போல், கிட்ட வருவது போல ஒரு ப்ரமை ஏற்படுகிறது.

கர்ப்பக்ருஹத்துக்கு வெளியே, இரண்டு வரிசையாக நின்று, தரிசனம் பண்ணிக் கொண்டிருப்பவர்களையும் அந்த ஸான்னித்யம் கவ்விக் கொள்கிறது. வழிப் போக்கில் வந்தவர்கள்கூட ஜோலியிருந்தும், போக மனமில்லாமல் நிற்கிறார்கள்.

கற்பூரச் சுடர் ஓங்காரச் சுழியை எழுதி, அதனுள் அவளை அடைப்பது போலத் தட்டு அவர் கையில் வட்டமிடுகையில் அம்பாளின் மூக்குத்தி... அப்பப்பா! மயிர்கூச் செறிகிறது.

நான் கமலாம்பிகை.

உங்கள் காலத்தால் அளவிட முடியாத நித்திரையிலிருந்து விழித்தெழுகிறேன்.

—தர்மராஜன் தன்னையிழந்தார்.

நெற்றியில் குங்குமம் கண் திறக்கிறது.

என்ன ஜாஜ்வல்லியமான புன்னகை!

—தர்மராஜன் நெற்றி முத்திடுகிறது. நெஞ்சில் ரத்த நாளங்கள் புடைத்துக் கொள்கின்றன.

தர்மராஜன் முகம் குங்குமப் பிழம்பு.

நினைவின் அலமாரித் தட்டுக்களில், ஒன்றிலிருந்து மேலே புற்று பூத்துவிட்டிருந்த ஒரு ஸ்லோகம், தன்யோகம் கலைந்து எழுந்து, சிறகு விரித்துக்கொண்டு நெஞ்சை மிதித்துக்கொண்டு குரலின் கணீரில் எழும்புகிறது;

"அம்பா ரௌத்ரிணி பத்ரகாளி பகளா ஜ்வாலாமுகீ வைஷ்ணவீ
ப்ரஹ்மாணீ த்ரிபுராந்தகி ஸுரநுதா தேதீப்யமானோ ஜ்வலா
சாமுண்டாஸ்ரித ரக்ஷபோஷ ஜனநீ தாக்ஷாயணீ வல்லவி
சித்ரூபி பரதேவதா பகவதீ ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரீ!"

மணி அதிசயித்து நிற்கிறான். இந்த மனுஷனிடம் எப்படியும் ஏதோ சொக்குப் பொடியிருக்கு. ஜனங்களின் வரிசை த்வஜஸ்தம்பத்துக்குமப்பால் நீண்டுவிட்டது. இன்று கற்பூரத் தட்டில், பதினஞ்சு இருபதுக்குப் பஞ்ச மில்லே. அசட்டுத்தனமா இடம் கொடுத்துவிட்டேனோ? இவனுக்குப் பங்கு கொடுக்காமல் இருக்க முடியாது போல இருக்கே! வயிற்றில் புளியைக் கரைத்தது நம் பக்த ஜனங்கள் வ்யவஸ்தை கெட்டவர்கள். இத்தனை நாள் மணி குருக்களை நிமிஷத்தில் மறந்துட்டு இந்த சூன்யக் காரனை அணைச்சுப்பா.

இப்பவே ஓரிருவர் விசாரிக்க ஆரம்பிச்சாச்சு.

''தூரத்து உறவு. வீட்டுக்கு வந்து ஒரு வாரமாறது. பிழைக்க வந்திருக்கா(ன்) (ர்)—(கொழகொழ) பூஜைக்கு ஒரு கோவில் பார்த்தாகணும். அதுவரை ஒத்தாசைக்கு. ஆளுக்கும் பழகியாகணுமே, இல்லையா?''

''நாளைக்கு இருப்பாரா?''

கார்க்கோடகன். கார்க்கோடகன் நானாகவே காடியை விலைக்கு வாங்கிக் கட்டிண்டுட்டேன்.

''குருக்களே, புதுமுகம் யாரை வெச்சு வேலை வாங்க றீங்க?''

''யார்... ஓ பிள்ளைவாளா வாங்கோ! வாங்கோ! வரணும் வரணும்!''

''அதான் வந்துட்டேனே! என் கேள்விக்குப் பதிலைக் காணோம்?''

மணிக்கு உதறல் கண்டது. ''தர்மராஜா, வா இங்கே!'' அதட்டலாய்க் கத்தினான்.

அவர் கர்ப்பக்ருஹத்திலிருந்து வெளிப்பட்டதுமே, ஓரிரு பெண்டிர் காலடியில் விழுந்து நமஸ்கரித்தனர். அவ''

களுக்கு ஆசி சொல்லக்கூடத் தன் நினைப்பில் இல்லை; ஏதோ ஒரு விளிம்பில் ஏதோ ஒரு மயக்கம் அவரைத் தன் சுழிப்புள் ஈர்த்துக் கொண்டிருந்தது.

''தருமு, இவர் தர்மகர்த்தாவாள். உன்னைப் பார்க்கணுங்கறா.''

தர்மகர்த்தாவின் கரங்கள் கூம்பலில் எழுந்தன ''வணக்கமுங்க.''

''பிள்ளைவாள், என் உறவு மனுஷன் தஞ்சாவூர்ப் பக்கத்திலிருந்து வந்திருக்காப் போல. பிழைப்பைத் தேடி கஷ்டப்படற குடும்பம்... உங்களிடம்தான் அழைச்சுண்டு வரணும்னு இருந்தேன். அதுக்குள் நீங்களே வந்துட்டேள்' கும்பிடப் போன தெய்வம்னு பழமொழியே இருக்கே!'' ஒரு சிரிப்பு. ''நீங்கள்தான் பெரிய மனசு பண்ணணும், ஒரு இடம் பார்த்துத் தரணும். அத்யயனம் பண்ணியிருக்கான். குழந்தையிலேயே என் தகப்பனார்தான் இவனை எடுத்து வளர்த்தார்.''

''ஓ, அப்படியா! அதுக்கென்ன, நாளைக்கு இவரோடு என்னை வந்து காணுங்க. சரி. வரேன்'' மணி, தர்மகர்த்தாவுக்கு மாலை மரியாதை, நைவேத்யப் ப்ரசதாம், தனிக் கற்பூர தரிசனம் மரியாதையெல்லாம் தானே கவனித்து, வழியனுப்பி விட்டுத் திரும்பி வந்தான்.

வரும்போதே அனலைக் கக்கிக்கொண்டு வந்தான்.

''ஏண்டா தருமு; தர்மகர்த்தான்னு சொல்றேன், இடிச்சபுளிமாதிரி நிக்கறியே, தத்தி!''

''நான் என்ன செய்ய வேண்டும்?'' அவருக்கு அவன் குரல் எங்கிருந்தோ வந்தாற் போலிருந்தது.

''என்ன செய்யணுமா? மனுஷனுக்கு ஒரு மரியாதை காட்ட வேண்டாமா?''

''அவர் எதிர்பார்க்கிற மரியாதையா, அவரைவிட நீ எதிர்பார்க்கிற மரியாதையா?''

''குசும்பைப்பாரு! உன் வயிற்றுப் பிழைப்பே அந்த மனுஷன் கையில்தான் இருக்குடா. நாளைக்கு எப்போ அழைச்சுண்டு வரச்சொன்னானோ, வேலை மடியிலேயே விழுந்தமாதிரிதான்னு வெச்சுக்கோ. இந்தஅளவுக்கு இடம் கொடுத்து, படிஞ்சு இவன் பேசினதாக என் நினைப்பிலே இல்லை. உன் ஜாதகத்தை ஒருநாள் கொண்டு வாயேன், உனக்கு லக்னத்துலே குருவான்னு பார்க்கணும்.

''...இவன் எங்கே உனக்கு இடம் பார்த்திருக்கான்னு எனக்குத் தெரிஞ்சுபோச்சு. சைதை காரணீஸ்வரன் கோவிலில் ஒரு மாஸமா ஒரு இடம் காலியாயிருக்கு. மொத்தம் அஞ்சு அர்ச்சகாள். வெள்ளிக்கிழமையில் தீபாராதனைத் தட்டில் மட்டும் ராத்திரி பத்துமணிக்குச் சில்லறையை உத்தேசமா எண்ணினால்கூட இருநூறுக்குப் பஞ்சமில்லை. தலாப்பங்கு உனக்கு 40/- அதில் எனக்கு இருபது போனாலும்—ஆமாம்; சோழியன் குடுமி சும்மா ஆடுமா?-உனக்கு இருபது மிஞ்சும். வலிக்கறதா? நீ, கணக்கிலே சில்மஷம் பண்ணே, அங்கங்கே ஆள்வெச்சிருக்கேன். முன்னாலேயே சொல்லிட்டேன், பின்னாலே மனஸ்தாபம் வேண்டாம் பாரு! என்ன ஊமைக்கோட்டான் மாதிரி வாயடைச்சுக் கிடக்கே? ஏதேனும் சொல்லித் தொலையேன்! எனக்கு ஒரு 'தாங்க்ஸ்' கிடையாதா?''

அவர் அமைதியாக, ''நான் உன்னை வேலைக்குக் கேட்கவில்லையே!''

''கேட்கல்லியா?''

''கேட்கவில்லை. நன்றாக யோசித்துப் பார்த்துக் கொள்.''

''இத்தனை திமிரா? அப்போ என்ன பண்ணப் போறே?''

''அதுபற்றி நான் இன்னும் யோசிக்கவில்லை.''

''உன் மனசுக்குள் என்னடா நினைச்சுண்டிருக்கே?''

''இல்லை மணி, நான் வேலையைப்பற்றி எதுவுமே வாய் திறக்கவில்லை.''

மணிக்கு ஆவேசம் வந்துவிட்டது. வாயில் நுரை தள்ளாத குறைதான். கைஆட்டலில் மார்ச்சதை, தொந்தி, விலாச்சதைகள் குலுங்கின.

''தவிடு தின்கறதுலே ஒய்யாரம் வேறையா? நல்லது செய்யப்போய் கொடுக்கற கையைக் கடிக்கறையா? நாளைக்குத் தர்மகர்த்தாவுக்கு என்ன பதில் சொல்றது?''

''அது உனக்குத்தான் தெரியணும்.''

''அடே நீ என்னிக்குமே டேஞ்சர் ஆசாமின்னு எனக்குத் தெரியும். பழுதையாக் காட்டி பாம்பாய்க் கடிக்கற ஆசாமி.''

''உன்னை நான் என்ன செய்தேன் என்று தெரிய வில்லை. ஆனால் இந்தக் கோபம் உன் உடம்புக்கு நல்லதல்ல B.P......''

''ஆமாம், என் B.P. பத்தி உனக்கு ரொம்பக் கவலை பாரு! எனக்கு B.P.யினால்தான் கோபம் வரது.''

''கோபம் வருவதனால்தான் B.P. ஏறுகிறது.

மணி சிரித்துவிட்டான்.

''சரி தருமு, உன் இஷ்டப்படி செய், எக்கேடு கெட்டுப்போ! அண்ணன் தம்பி ஆற்றுவெள்ளம்னு சொல்வா. என்ன சண்டை போட்டாலும் ரத்தபாசம் கேட்கல்லியேடா. சரி, இந்தா இதைப்பிடி...''

''என்னது?''

''அஞ்சுரூவா, தட்டுக் காசுலேருந்து ஏதோ யதா சக்தி...''

''வேண்டாமப்பா, நீயே வெச்சுக்கோ.''

"அதானே வேண்டாங்கறது! முருங்கை மரத்துலே ஏறிக்கறியே! அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அப்படி வேண்டாம்னு தள்றபடி என்ன சுகத்திலே இருக்கே? உன்னைச் சும்மா வேலை வாங்கினேன்னு இருக்க வேண்டாம். நீயும் சம்சாரிதானே. ஆனால் ஒரு நாள்கூட சம்சாரத்தை வீட்டுக்கு அழைச்சுண்டு வந்து இதுவரைக் காட்டினதில்லே. சரி அது போகட்டும். நீ வாங்கிக்காட்டா, ராப்பூரா எனக்குத் தூக்கம் வராது. ராப்பூராப் படுக்கையில் புரண்டுண்டே இருக்க வேண்டியதுதான். தூக்க மாத்திரை எனக்குப் பேசல்லே, தெரியுமோன்னோ? கமலாம்பா மனசுலே என்னைப்பத்தி என்ன வெச்சுண்டுருக்காளோ. அது அவளுக்குத்தான் தெரியும். நடக்கறதுதான் நடக்கப் போறது. யாருக்கும் தடுக்க முடியாது. இந்தா நைவேத்யமும் எடுத்துக்கோ. சுண்டல் இன்னும் வேகணுமோ? அதுக்கினால் அரைப் பதமாத்தான் தோணறது. அவளுக்கு அக்கரை கிடையாது வேளையில்லே பொழுதில்லே ராவில்லே பகலில்லே எப்படித்தான் அப்படித் தூங்க முடியறதோ? அதுவே ஒரு வியாதியோன்னு தோணறது. மிச்சப் போதுக்கு சினிமாப் பத்ரிகைகள் பாராயணம் பண்றாள். சுண்டல் வெந்தால் என்ன வேகாட்டி என்ன அவளுக்கு? நான் ஏன் இப்படி ஆயிட்டேன்னா, இதனால்தான். சரி, விடு. தருமு அப்பப்போ என்னை வந்து கவனிச்சுக்கோ. என்னைவிட நீதான் வயசுலே பெரியவன். ஆனால் நான் உன்னை முந்திண்டால் ஆச்சரியமில்லே. ஆமாம், வீட்டிலேயே மூணுவேளை தாண்டின விருந்தாளி ஆனபிறகு, இங்கே இருந்து என்ன ஆகணும்? சரி வரேன். குட்டி, பூட்டினையா? சாவிக் கொத்தைக் கொடு. இப்ப எல்லாம் சாவிக் கொத்தைச் சுவத்து சந்திலே வெக்க முடியாது. தெரியுமோன்னோ? எப்படியோ தர்மகர்த்தா கண்டு பிடிச்சுட்டான். சாவிக்கொத்தைத் தான் எடுத்து வெச்சுண்டு, நாள்பூரா அப்படி அலைக் கழிச்சிருக்கான் பாரு. அவன் லேசுப் பட்டவன் இல்லே. கிராதகன். அவள்தான்

அவனைக் கவனிச்சுக்கணும். என் பிழைப்பு இவாளை யெல்லாம் நல்லத்தனம் பண்ணிண்டு போகணும் சரி விடு. சரி வரேன், சரி குட்டி வா...''

மணி பாவம், பேச்சில் பாதிப் பைத்யமாகிவிட்டான். தனக்குத்தானே பேசிக்கொண்டு, அவன் குரல் படிப்படி யாகத் தூரத்தில் ஓய்ந்த பிறகு வெகு நேரம் அங்கேயே உட்கார்ந்திருந்தார்.

* * *

முதல் தட்டலிலேயே கதவு திறந்து கோமதியின் கவலை முகம் எதிர்கொண்டது.

''என்னவோ ஏதோன்னு பயந்து போனேன் ஸார். ட்ராஃபிக் எல்லாம் வரவர ரொம்ப மோசம். என்ன, சாப்பிட வேண்டாமா? என்ன ஸார், உடம்பு சரியில் லையா? இன்னிக்கு பத்தியச் சமையல்தான் ஸார். மிளகு ரசம், மணத்தக்காளி வத்தல் எனக்காக ப்ளீஸ், ப்ளீஸ்...''

* * *

படுக்கையில் வெடுக்கென எழுந்து உட்கார்ந்தார். அரைத்தூக்க மயக்கத்தில்—ஆனால் தூக்கமில்லை, கனவு போல்...ஆனால் கனவுமில்லை. அந்த மகுடமும் நாசிமேடு விளிம்பின் கூர்மையும் இமைத்திரையில் ஒற்றிவிட்டுப் போன பதிவுதான், நினைவைத் தட்டியெழுப்பி, விழிப்பைத் தந்து, கூடவே கற்கண்டு பாகைப் பழிக்கும் ஒரு த்வனிச் சரடு நுனி உட்செவியில் கோர்த்து வாங்கி, தூக்கம் துறந்தது.

உளிபிடித்த சிற்பியின் கையை அவள் கிருபைதான் பற்றி, அவள் இஷ்டத்தில் ஏற்கனவே உருக்கொண்டு விட்ட சிற்பத்தின் உருவக் கோடின்மேல், நுணுக்கங்களின் மேல் விளம்பியிருக்க வேண்டும். என்னை இப்படி வடி எனச் சொல்லாமல் காட்டும் செயல். இல்லை கனவில் வந்து சொன்னாளோ? இல்லையோ? இல்லை அவன் செதுக்கும்போது மருளாக வந்து அவன் தோளில் அமர்ந்து

கொண்டாளோ? அப்படி ஒரு சைகை காட்டாமல், கல் தன் கடினம் உருகி அந்த மூக்குக்கு அந்தத் தவப் பிஞ்சும் அப்படி ஒரு ம்ருதுவும் எப்படி வர முடியும்?

தன் கலையுடன் ஐக்யம் மட்டும் போதாதெனத் தெரிகிறது. கூடவே ஒரு தற்செயல் அகஸ்மாத், புண்யம், அதிர்ஷ்டம், அந்தர்யாமம்...கொடுப்பனை இல்லாவிடில் அந்த அதரங்களின் லேசான இளகலுக்கேற்பக் கன்னக் குழிவுகள் எண்ணைக் காப்பிடும் விரல்களுக்கு உணர முடிகிறதே.

சிற்பியின் கற்பனையின் சத்யத்தில் அவள் முகம் அவனுக்கு ப்ரத்யக்ஷமாகியிருக்கும். கொடுத்துவைத்தவன். நானும் இருக்கிறேன். ஏன் இருக்கிறேன்? இதுவும் ஒரு ஜென்மமா? தொண்டையை அடைத்தது. இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து குறுக்கும் நெடுக்குமாக—அறையில் உலாவத் தலைப்பட்டார்.

அறைக்கு வெளியே கூடத்தின் இருளில் அவருடையத் தவிப்பு இன்னதென்று புரியாமல், தானும் தாய்மையின் தன்மையில் தவித்துக்கொண்டு அவரைக் கவனித்தபடி... வேறு என்னதான் செய்ய முடிகிறது?

* * *

அவளுடைய அத்தனை அழகுக்கு என்னால் முடிந்தது என்ன? தரிசனம் என்று தனியாக ஒன்று புலன்வழி காண முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. மனதிற்கு சும்மாயிருக்கும் நேரமே கிடையாது. சும்மாவே இருக்க முடியாது. ஏதேனும் சித்திரங்கள் வரைந்தபடி இருக்கிறது. பல தடச்சித்திரங்கள், ஞாபகச் சித்திரம், கற்பனை சித்திரம், சொல் சித்திரம், சம்பவச் சித்திரங்கள், எண்ணக் கோலங்கள், உருவங்கள், உருவகங்கள், அருவங்கள், அருவகங்கள், வடிவங்கள், குழப்பங்கள், குளறுபடிகள், தெளிவுகள், ஆனால் யாவும் சித்திரங்கள், எண்ணங்களே சித்திரங்கள் தான்.

இவைகளில் இஷ்டம் வரித்த வடிவம், அந்த இஷ்டத்தாலேயே மனதுக்கு உயிர்த்து, இஷ்டம் தந்த நாமம் தரித்து, நாமத்தின் உருவேற்றலில் உரம் கொண்டு, இதயத்தில் இடம் கொண்டு பீடமும் ஏறுகையில் இவளே கமலாம்பிகை, இவளே புவனேஸ்வரி, இவளே என் நெஞ்சத்தின் நாயகி, அந்தந்த சமயத்தின் தேவி, தரிசனி.

எழுச்சிகளின் அலை மோதல் தாங்க முடியவில்லை. அவைகளின் மகிழ்ச்சியே ஒரு துன்பமாய் அந்தத் துன்பமே ஒரு இன்பமாய்...என் செய்வேன்? என் செய்வேன்?

பெட்டிமேல் புல்லாங்குழல் கண்பட்டது. எடுத்து வாசிக்கத் தலைப்பட்டார்.

குழலுள் என் மூச்சு என் பிராணாக்னி...

குழலுள் உறங்கிக்கிடந்த ஓசை உயிர்த்தெழுந்து வெளிப்பட்டு ஸ்வரங்களாகப் பிரிகையில் ஒவ்வொரு ஸ்வரமும் என் மூச்சின் அக்னிக்கு ஆஹுதி.

குழலுள் புகுந்து கண்ணாமூச்சி விளையாடுகிறாளே.

தாங்கமுடியல்லியே!

குழல் நழுவி மடியில் விழுந்தது.

ஒரு பெரும் கேவல் அவரினின்று புறப்பட்டது. முகம் கைகளில் புதைந்தது. தோள்கள் குலுங்கின, கூடவே தெரிகிறது. இதுவும் ஒரு மனநிலைதான். உரிய நேரத்தில், நினைவு மாடத்தில் இந்த சமயமும் தன் தழும்போடு, தன் இடத்தில் ஒதுங்கிவிடும்.

உடனே அடுத்த அலை...

ஓடிப்போய் அவரை அணைத்துக்கொள்ள, தோள் மேல் அவர் முகத்தைச் சார்த்திக் கொள்ளத் தவித்தது. ஆனால் தவிப்பது தவிர என்ன செய்யமுடியும்?

பால் மணி நண நணத்தது.

3

மூன்று நாட்களாகவே யாரோ தன்னைத் தொடர்ந்து வருவதைப் போலவோ அல்லது கவனிப்பதாகவோ ஒரு குறுகுறுப்பு. இந்த மூன்று நாட்களாகவே எந்தக் குறித்த நிமித்தமாக அவர் எங்கும் கிளம்பவில்லை. நாள்பூரா வீட்டில் அடைபட்டிருப்பதற்கு மாறுதலாக, மாலை வேளை, காலைவீசி நடக்க வெளியே சென்றபோது இந்தக் கூச்சம் கண்டது. ஆனால் திரும்பிப் பார்த்தால் சொல்லும்படி யாரும் தென்படவில்லை. ஆனால் இந்த சங்கடமான உணர்வு மட்டும் விடவில்லை. அதனாலேயே உலாவக்கூட வெளியே போகவில்லை. ஆனால் அடுத்த நாள் வெளியே கிளம்பினதும் பிடிவாதமாக அது சந்து முனையில் காத்திருந்தது. என்ன இது? என்ன நடந்து கொண்டிருக்கிறது? இதற்காக வெளியில் போகாமலிருக்க முடியுமா? இருக்கலாமா?

கோயிலுக்கு போகலாமா? ஆனால் அங்கு மணியின் தொண தொணப்பையும், மூடுசூளையான கணைகளை யும் சஹித்துக் கொள்ள இன்னும் பொறுமையிருக்குமோ?

நடந்துகொண்டே ஏதேதோ கவலைகள் மொய்க்க ஆரம்பித்துவிட்டன.

இன்னும் எத்தனை நாள் இப்படியே கோமதியின் தருமத்தில்? எனக்கென்று நான் ஏதேனும் வழிதேடிக் கொள்ள வேண்டாமா? அவளுடைய பிரியமான

பிடிவாதத்தினால் என்னைச் சுரணையில்லாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறாளா? உடல் உழைப்பினால் வயிறு வளர்க்கும் காத்திரமோ எனக்கு இல்லை. என்னதான் செய்யப் போகிறேன். ஊரை விட்டுப் போய்விடலாமா? இங்கு இருந்தால்தானே வம்பு? இத்தனை பரந்த பூமியில் என் ஒண்டியாளுக்கு இடமில்லாமல் போய்விடுமா?

''ஸார்!''

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தால் ஒரு சிகப்புத் தலைப்பா ஸெல்யூட் அடித்து நின்றது.

''இன்ஸ்பெக்டர் உங்களைக் கூப்பிடறார்.''

''கூப்பிடுகிறாரா? எதற்கு?'' சுற்றும்முற்றும் பார்த்தார். எதிரே போலீஸ் ஸ்டேஷன்.

''எனக்குத் தெரியாது.''

கோபம் குறுகுறுத்தது. கூடவே ஒரு சிறு பயம்.

''வரமாட்டேன் என்று போய்ச் சொல்.''

''உங்களை request பண்ணிக்கிட்டதா சொல்லச் சொன்னாரு.''

மேலும் எதிர்க்க வலுவற்று அவன் முன் போக பின் நடந்தார்.

அறையுள் நுழைந்ததும் இன்ஸ்பெக்டர் இருக்கையினின்று எழுந்து நின்று கையைப் பற்றிக் குலுக்கினார்.

''வாங்க தர்மராஜன், எப்படியிருக்கீங்க? நீங்கள் போறதைப் பார்த்தேன், அமருங்க.''

தர்மராஜன் அமரவில்லை. கையை விடுவித்துக் கொண்டு தன் முதுகின் பின்னால் இழுத்துக் கொண்டார்.

இன்ஸ்பெக்டர் கவனிக்காததுபோல் ''என்னை நினைவிருக்கிறதா ஸார்?''

''உங்களை மறக்க முடியுமா? நீங்கள்தானே என் கேஸைக் கவனிச்சது?''

"Right you are. உட்காருங்க.''

தர்மராஜன் உட்காரவில்லை. ''என்னை எதற்குக் கூப்பிட்டீங்க? நான் parole‌ல் விடுதலையாகவில்லையே! முழு தண்டனையும் அனுபவிச்சாச்சே!''

''Sure, sure யார் இல்லேன்னது? உங்களை அந்த முறையில் நான் கூப்பிடல்லே.''

''பின் எந்த முறையில்? போலீஸ்காரனுக்கும் சிக்ஷை அடைந்தவனுக்குமிடையே என்னய்யா உறவு கொண்டாடல் வேண்டியிருக்கிறது? இல்லை ஒரு தரம் உள்ளே போய் முறையாக வெளிவந்தாலும் வந்தவனுக்கு இனிமேல் உண்மையான விடுதலை கிடையாது என்கிற கொள்கையில்தானே உங்கள் டிபார்ட்மெண்ட்டே இயங்குகிறது. அதே முறையில்தானே கூப்பிடுகிறீர்கள்?''

''மிஸ்டர் தர்மராஜன் தயவுசெய்து உட்காருங்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.''

தர்மராஜன் தயக்கத்துடன் அமர்ந்தார்.

''எனக்கே தெரியல்லே சார். என் வழக்குகளில் தீர்ப்பான பிறகு அவங்களைப்பற்றி நான் இப்படி இருந்ததில்லை. அவர்களைப்பற்றித் திரும்பி நினைக்க எனக்குக் கட்டுப்படியே ஆகாது ஸார்!''

''நீங்கள் காட்டும் கௌரவம் வேண்டாம், நீங்கள் என்னைக் கூப்பிட்ட காரியத்தைச் சொல்லி என்னைப் போக விடுங்க. அதுவே தயவு.''

''இப்போ நீங்கதான் எனக்குத் தயவு காட்டியிருக்கீங்க. யாரங்கே 333, ரெண்டு காப்பி நல்லதாக் கொண்டுவா!... வந்தியா, ஜல்தி...மிஸ்டர் தர்மராஜன், நான் என் ட்யூட்டியை செஞ்சேன்!''

''என்னை அடித்துத் துன்புறுத்தினது உள்படவா?''

அது முழுவதும் என் கண்ட்ரோலில் இல்லை. அந்த சமயத்துக்குச் சில ஆளுங்க வெறிபிடிச்சவங்களாயிட றாங்க. அவங்க புத்தி நிலையிலேயே அவங்களுக்கு மாறி போயிடுது. ஆனால் நிஜத்தை ஆளிடமிருந்து வரவழைக் கணும்னா அவனிடம் கொஞ்சம் பலத்தைக் காட்டித்தான் ஆகவேண்டியிருக்குது. இல்லாட்டி அவன் ஏய்ப்பு வித்தைக் காட்டிடுவான். ஆனால் இந்த அடிக்குத்து உதை violence எந்த இடத்தில் எல்லை கடந்து போவுது என்கிறது தர்மா மீட்டர் வெச்சுப் பார்க்க முடியாத சமாச்சாரம்.''

''சரி. இப்போ என்ன சொல்ல வரீங்க?''

''உங்க விஷயத்துலே violence அந்த அளவுக்குப் போயிருக்க வேண்டாம். அதைத் தாங்கக்கூடிய தெம்பு உள்ள மனுஷன் நீங்க இல்லை. ஏதேனும் ஏடாகூடமா ஆயிருந்தால், என் பாடு ரொம்ப சீரியஸ் ஆகியிருக்கும். தவிர நீங்கள் hapitual criminal இல்லை. நீங்கள் செய்த முதல் குற்றமே அதுதான்னு எனக்கு நிச்சயம். நீங்கள் லாபத்துக்கு திருடற ஆசாமி இல்லே ஸார். எப்படி சொல்றேனனு கேட்டால் எனக்குத் தெரியாது. முகம் சொல்லுது. எப்படி சொல்லுதுன்னு கேட்டால் தெரியாது.''

''Oh Congratulations! நீங்கள் என்னைப் பாராட்டுவ தால் நான் உங்களைப் பாராட்டணுமா?''

சே, சே. நீங்க இஷ்டப்படி பேசறீங்க, உங்க இஷ்டம். ஆனால் எனக்கு என்னைப் பத்தியே இதுதான் ஆச்சர்யம். உங்களை 'ஸார்' என்கிறேன். அதுவே எனக்குப் புதுசு. எப்படியோ Respect command பண்றீங்க. உங்களுடைய warder என்னுடைய நண்பர். உங்களைப்பற்றி பிரமாதமா அப்பப்போ சொல்வார்; never mind. அவனவனிடம் உள்ள மனிதத்தன்மையை... அதுவும்

போலீஸ்காரனிடம் நினைப்பூட்டும் சக்தி ஸாதாரண விஷயம் இல்லே ஸார். அது உங்களிடம் இருக்கிறது. அதை உங்களிடம் தெரிவித்துக் கொள்ளத்தான்...நீங்க இப்போ தெருவில் போனதைப் பார்க்க நேர்ந்ததே என் அதிர்ஷ்டம் என்று நினைக்கிறேன்.''

'நீளமான ஸ்பீச்சுதான்' தர்மராஜன் கை தட்டினார். ''இநத ஐஸ் எல்லாம் இப்போ எதுக்கு மிஸ்டர்...?''

''கமலநாதன்.''

''சரி, கேஸ் முடிஞ்சு போச்சு. தண்டனை அனுபவிச் சாச்சு. அப்புறம் என்ன?''

''உண்மை. உ....ண்...மை...''

''என்ன இழுக்கறீங்க. இன்னும் உங்கள் File Close ஆகல்லியா?''

"Oh don't worry.'' இன்ஸ்பெக்டர் சிரித்தார். ''நீங்க மறுபடியும் பிக்சர்லே வரப் போறதில்லை. உங்கள்மேல் proof அப்பவே சரியாயில்லையே.''

''ஆனால் ஐந்து வருஷம் தீர்ப்பில் உள்ளே இருந்து விட்டுத்தானே வந்திருக்கிறேன்!''

''நீங்கள் தீர்ப்பானது சந்தர்ப்ப ரூபணையில், evidence பத்தல்லேங்க. இதப்பாருங்க அந்த தூக்கு மாத்திரை விஷயத்தில டாக்டர் சொன்னார் தான் கார்டினால் எழுதிக் கொடுக்கல்லேன்னு. அதனால் என்ன? patient இன்னும் யாரேனும் சொல்லக் கேட்டு தூக்க மாத்திரையோடு இன்னொரு மாத்திரையா கார்டி னால் வாங்கி வெச்சிருக்கக் கூடாதா? இல்லே அவரைப் பார்க்க வர்றவங்க அவருக்கு நல்லது செய்யறதா நெனச் சுக்கிட்டு தாங்களே கொண்டுவந்து கொடுத்திருக்கக் கூடாதா? ஒரு தடவை போட்டுத்தான் பார்ப்போமேன்னு

Patient தானே போட்டுண்டு இருக்கக் கூடாதா? காக்கை ஏற, பனம்பழம் விழன்னு ஆயிருக்கக் கூடாதா. யார் சொன்னத்தையும் கேக்கறதுன்னு Patient சைக்காலஜி ஒண்ணு! உண்டு. அந்த பாஸிபிலிட்டியை அறவே ஒழிக்க முடியாதுன்னு டாக்டரே க்ராஸிலே ஒப்புக்கிட்டாரு. நாய்க்கும் மயக்க மருந்து கொடுத்திருந்ததாலே உங்களுக்கு எதிரா கேஸ் போச்சு. எப்புடியும் ஸேட் கொடுத்திருக்க மாட்டாரு. நாய் உணவில் மயக்க மருந்து; உங்களைத் தவிர வேறு வாய்ப்பு இல்லே. ஸேட்டுக்கு சமையல்காரர் நீங்கதான். ராவுலேகூட ஸேட்டோடு இருந்திருக்கீங்க. நாய் உணவில் மருந்து சேர்க்க உங்களைத் தவிர வேறு இல்லைன்னு முடிவு எடுக்கும்படி ஆயிடுச்சு. மிஸ்டர் தர்ம ராஜன் இந்தக் கேஸ்லே நீங்க முழுக்க நிரபராதி இல்லே. ஆனால் எந்த மட்டுக்கும் அபராதின்னு நிச்சயமும் பண்ண முடியல்லே.''

இன்ஸ்பெக்டர் தான் செய்வது தெரியாமலே சிகரெட்டைப் பறறவைத்து குப்குப் பலமாக இழுத்து, மார்புள் புகை பரவி சற்று நிறுத்திக்கொண்டு பிறகு வெளியே விட்டார் பெரிய புகை.

''சரி. இந்த நகை Safeலே காணாமல் போனதை எடுத்துப்போம். Safe மேலே திருப்பற இடத்துல கைப் பிடியிலே உங்கள் கைரேகையில்லை. சேட்டுனுடைய ரேகையுமில்லே. அதனால நீங்க துடைச்சிருக்கீங்கன்னு முடிவு செய்தால் அதிலும் ஒரு Hitch இருக்குது. ஏன் தூசி தும்பு துடைக்கிற மாதிரி கடைசியா ஆபீஸ் விட்டு மாடி ஏறதுக்கு முன்னால் தானே டஸ்டர் செய்திருக்கக் கூடாது? அது மாதிரியும் உண்டே.

''ஆனால் நகை Safe உள்ளே இல்லை. உங்கள் கிட்டக்கவும் இல்லை. உங்களை எங்கள் பார்வையிலிருந்து இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நாங்க அசையவும் விடல்லே.

வீடு முழுக்க சந்து பொந்து எங்கேயும் தேடியாச்சு. வீட்டிலேயும் இல்லை. அப்போ எங்கேதான் போச்சு? கையும் களவுமா நீங்க பிடிபடல்லே. Confusing. இங்கே தான் ஏதோ Angle இடறுது. Qne of those cases with benefit of doubt to the accused. ஆனால் ஆளை விடுதலையும் செய்ய முடியாது. திருடினீங்களோ இல்லையோ திருடணும்னு எண்ணம், ப்ரயத்தனம் நடந்திருக்குது. அதற்கு நாய் உணவுல மருந்து Evidence.

''உங்களுடைய சிக்கலை நான் க்ளியர் பண்ணனும்னு எதிர்பார்க்கறீங்களா? நான் எதையும் எதிர்பார்க்கல்லே. இது ஒரு Academic discussion. அவ்வளவுதான். அப்பவே உங்களிடமிருந்து வரவழைக்க முடியல்லியே, கடைசிவரை எதுவுமே தெரியாதுன்னு மறுத்துட்டீங்க. நாய்க்கு மருந்து உள்பட. உங்கள் உடம்பு பூஞ்சைக்கு உங்கள் நெஞ்சுக் கனம் அசாத்தியம். ஒரு முத்திப்போன கிரிமினலுடைய பிடிவாதம். நான் இப்போ இப்படி சொல்றேன். நீங்க நகையைத் திருடல்லே. ஆனால் எடுத்திருக்கீங்க. ஏன் எதற்கு, எப்படி? Motive தெரியாத வரை. களவுபோல பொருள் போன இடம் தெரியாதவரை, போலிஸ் கேஸ் சரிஞ்சு போச்சு. சந்தர்ப்பம் உங்களை சுட்டிக் காட்டுது. அத்தோடு சரி. ஆனால் ஒரு விஷயம்...''

தர்மராஜன் காத்திருந்தார். அவருக்கு நெற்றியை ஒற்றிக்கொண்டால் தேவலை. ஆனால் அடக்கிக் கொண்டார்.

''அன்னிக்கு முதன்முதலா உங்களை நான் விசாரிக்கறப்போ, நீங்க உங்களுக்கே என்னவோ பேசிகிட்டீங்க. என்னவோ, கல், தெய்வம்னு. நான் அஸால்ட்டாயிருந்துட்டேன். ஆனால் இந்தக் கேஸ் சம்பந்தமா முக்கியமான தகவல் அதுல இருந்திருக்குமோன்னு இப்போ, இந்த நிமிஷம் தோணுது.''

உடனே தர்மராஜனுக்கு நினைவு வந்துவிட்டது. மண்டையுள் நியோனில் வார்த்தைச்சரடு வேகமாய் ஊர்ந்தது.

கல் சிரிக்கிறது.

கல் சிரிப்பதை தெய்வம் சிரிப்பதாக எண்ணிக்கொண்டு அந்தச் சிரிப்புக்கு நமக்கு இஷ்டமான அர்த்தத்தை வரவழைத்துக் கொண்டு, தெய்வம் கொடுத்த உத்தரவாக எடுத்துக்கொண்டு காரியத்தில் இறங்குகிறோம். காரியம் முடிந்தபின் கல் தெய்வமாக மாறி, அப்போ தெய்வம் சிரிக்கிறது.

தர்மராஜனுக்குப் புல்லரித்தது.

ஆனால் அவர் புன்னகையில் ஏளனம் சிந்திற்று. 'அதை இப்போ உங்களுக்குத் திருப்பிச் சொல்லணும் என்கிறீர்களா? இத்தனை நாள் கழித்து ஞாபகம் இருக்குமா? இருக்கணுமா?'

இன்ஸ்பெக்டர் இரு கைகளையும் விரித்தார். உதட்டைப் பிதுக்கினார்.

"நான் சொல்லமாட்டேன் என்கிறேன்."

"That is alright."

"மிஸ்டர் இன்ஸ்பெக்டர், உங்களுடைய Academic discussion எல்லாம் எனக்குத் தேவையில்லை. Discussion ஆ பண்றீங்க? நண்டு பிடிக்கறீங்க."

"Sorry Sir."

"இப்போ நான் ஒரு Discussion. ஆனால் ரொம்பச் சின்னது மிஸ்டர் கமலநாதன். நீங்கள் அடிப்படியிலிருந்து படிப்படியா கான்ஸ்டேபிள், H. C, Sub இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் அப்படியா அல்லது—?

இன்ஸ்பெக்டர் இடைமறித்தார்—"இல்லை Directly recruited as S. I. தகப்பனார் Retire ஆறப்போ D. I. G."

''அப்போ காலேஜ் போயிருப்பீங்க—''

''B.A. Lit.'' இன்ஸ்பெக்டர் முகத்தில் பெருமிதம் ஒளி வீசிற்று.

''நல்லதாப்போச்சு Les Miserables—விக்டர் ஹ்யூகோ படிச்சிருக்கீங்களா? நான் ஜெயில் லைப்ரரியில் படிச்சேன் ஏழு Volumes.''

''ஆ, அந்த Jeoavaljean, Bishop—grand character இல்லே?''

''ஏன் இன்ஸ்பெக்டர் javert ஐ மறந்துட்டீங்க? அவன் லேசுப்பட்டவனா? அந்த work ஐ சுருக்கமாவேனும் police departmentக்கு text book ஆ வெக்கணும்னு எனக்குத் தோணுது. ஒரு குடும்பத்தில் குழந்தைகளின் பட்டினி பொறுக்காமல் ரொட்டியைத் திருடினவனை சட்டத்தின் பேரில் துரத்தி துரத்தி அடிச்சு பக்கா கிராதகனா ஆக்கி, அப்புறம் அவன் நல்லவன் ஆன பிறகு கூட அவன் உயிரோடு இருக்கிற வரைக்கும் சட்டத்தின் பேராலேயே உருப்படாமல் செய்யக்கூடும் எனும் உங்கள் departmentஇன் சாதனைக்கு. அந்தப் புத்தகத்தைக் காட்டிலும் சாக்ஷியில்லை.''

''மஹத்தான காவியம் அதுபத்தி சந்தேகமேயில்லை'' இன்ஸ்பெக்டர் யோசனையாக, சிகரெட் நுனியில் oshe trayல் தேய்த்து அவித்தார். ''ஆனால் ஒரு விஷயம் எனக்கு இப்போ படுது.''

''அந்த ரெண்டு வெள்ளி மெழுகுவத்தி ஸ்டாண்டு களையும் ஜீன்வால்ஜீனிடம் கொடுத்து ரெண்டு வார்த்தை கள் சொல்லி ஒரே நிமிஷத்தில் ஒரு கயவனைக் கண்ணிய வானாக Bishop மாத்தறது இருக்குதே, அது உண்மை வாழ்க்கையில் நடக்கக்கூடியதா என்று நம்பறது எனக்குக் கஷ்டமாயிருக்குது. ஆனால் இந்த திடீர் மாறுதலை

ஒட்டித்தான் முழுக்காவியமே ஓடுது. இந்த weakness தெரிஞ்சுதான் அந்த ரஸவாத சக்தியைக் காக்கத்தான் Bishopக்கு வேண்டிய பின்னணி கட்டுவதற்காக அந்தக் காரெட்க்டருக்குத் தனி வால்யூமே எழுதி விட்டிருக்கார். என்னதான் எழுதினாலும் என்னதான் காரை பூசினாலும் அங்கே காதுலே பூ சுத்தல் நடக்கத்தான் நடக்குது.''

தர்மராஜன் பெருமூச்செறிந்து எழுந்தார். எதிரே கோப்பையில் காப்பி வெள்ளை பூத்துவிட்டது.

''நீங்கள் எதைத்தான் நம்பப் போகிறீர்கள்? எதையும் நம்பாதே. உன்னைப் பெத்தவளையும் நம்பாதே என்பது தானே உங்கள் அரிச்சவடி, ஆத்திச்சூடி எல்லாமே! இன்ஸ்பெக்டர்!—'' கை கூப்பினார். ''என்னை வேட்டை யாடாதீங்க. நான் ஆயாசமாகிவிட்ட ஒரு கிழவன் நான் செய்த குற்றம் என்னவாக இருந்தாலும் அதன் தன்மையும் தீவிரமும் என்ன என்று இன்னும் குழம்பிக்கொண்டிருக் கிறேன். எப்படியும் அதற்குச் சட்டம் கொடுத்த தண்ட னையை அனுபவித்தாகிவிட்டது. என்னை வாழவிடுங்கள் என்று கேட்கவில்லை. எனக்கு மிச்சம் இருக்கும் நாட் களை கிடைத்த அளவு அமைதியில் கழித்துவிட்டுச் சாக விடுங்கள்.''

இன்ஸ்பெக்டர் சற்றுத் திணறிப்போனார். ''Now மிஸ்டர் தர்மராஜன்...''

தர்மராஜன் திடீரென்று கோபாவேசத்துக்கு மாறி னார். ''சரி நிறுத்துங்க. இந்தத் தூண்டில் விளையாட் டெல்லாம் வேணாம். இதற்கு உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. யோசிச்சுகிட்டேயிருங்க. நான் வரேன்.''

'விர்'ரென எழுந்து போய்விட்டார்.

இன்ஸ்பெக்டர் குனிந்த தலையை இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு சற்றுநேரம் உட்கார்ந்திருந்தார்.

P.C. 333 பக்கத்தில் வந்து நின்றான். இன்ஸ்பெக்டர் தனக்குள்ளே பேசிக்கொண்டார். 'மனிதனுக்குள் நடப்பது Legal struggleஐக் காட்டிலும் moral sturggle...'

P.C. 333 காதண்டை குனிந்து 'வால் ஒட்டவா?'

இன்ஸ்பெக்டர் தலை நிமிர்ந்தார். அவர் முகத்தில் ஐந்து வருடங்கள் கூடியிருந்தன. "வேணாம் ஆளைவிடு, என்னை விடு."

* * *

ஓயாத நமு நமுப்பு ஒன்று இருந்தாலும், மொத்தத்தில் ஸார் வந்ததிலிருந்து வெகுநாளாகக் காணாமல் போன மனதுக்கு ஒரு மெத்துத்தான். நாளை உடைமீது மின் சலவைப் பெட்டியை ஓட்டியவண்ணம் கோமதி அந்த உணர்வின் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருந்தாள். நடையில் சாய்வு நாற்காலியில் (வீட்டுக்கு ஒன்று வாங்கியாகி விட்டது) அமர்ந்திருந்த அவர்மீது அவ்வப்போது அவள் பார்வை சென்று மீண்டது.

"போனது போக மிச்சம் என் வாழ்க்கையில் இனிமேலானும் நிம்மதியிருக்குமா? வீட்டுக்கு ஒரு ஸ்திரீ லஷ்மிகரம் என்றால் ஆண்பிள்ளையும்—பெரியவரோ சின்னவனோ தேவைதான். தேடும் அமைதியும் தைரியமும் அப்போத்தான் கிடைக்கிறது. ஆமாம். எனக்கென்று ஏதோ ஒண்ணு பண்ணித் தின்னாலும் அதில் சுவாரஸ்யமில்லை. ஆனால் இப்போ அப்படி இல்லை. அவருக்குப் பசிக்குமே. அவரைத் தனியாக விட்டுவிட்டு வந்தேனே அவருக்காக... என்கிற நினைப்பில் வீட்டுக்கு விரைகையில், அந்த கவலையில் ஒரு சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது. குறிக்கோள் இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? ப்ரஸாந்த்தான் இருக்கானே என்றாலும், குழந்தையோடு ஒரு பெரியவாளும் என்றால் அதில் தனி பாக்யம்தான்.

வாய்த்தவன் சரியாக அமைஞ்சு, உடன் இருந்தால் என் நிலை நிறைவு கண்டிருக்கும். அப்புறம் உயிரோடு இருக்கவே தேவைதான் என்ன? உயிர் நீடிக்கவே கஷ்டம்தான் காரணம். நான் படும் ஆசை துராசைன்னு எனக்கு உறுத்தத்தான் எனக்குக் கணவன் இப்படி நேர்ந்திருக்காப் போலவும்... சே, இந்தச் சமயத்தில் அந்த ஆளைப்பற்றி நினைக்கறதே பாயசத்தில் ஈ விழுந்தாப்போல'' அருவருப்பில் உடல் குலுங்கிற்று.

''கோமதி!''

''ஸார்.''

''வேலையாயிருக்கியா? உன்னோடு கொஞ்சம் பேசணும்.''

''இதோ வந்துட்டேன்.''

''வா இப்படி உட்கார். நேற்று ஒரு விஷயம். அது சின்னதா, பெரிதா இல்லை விஷயமே இல்லையா? போகப் போகத்தான் தெரியணும். நேற்றுப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகும்படி ஆயிற்று.''

கோமதிக்கு நாடியே ஒடுங்கிப் போயிற்று. உள்ளே சுவர் கேவுவது தெரிந்தது. அறியாமலே ஒரு கை மார்க்குலையைத் தொட்டுக் கொண்டது.

''என்ன ஆச்சு?

''ஒன்றும் ஆகிவிடவில்லை. பயப்படாதே.''

''என்னதான் ஆச்சு, சொல்லுங்களேன் ஸார்!'' குரலில் அழுகை நடுங்கிற்று.

''என் கேஸைப் பார்த்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் நான் தெருவில் போவதைப் பார்த்து என்னைக் கூப்பிட்டு, வரவழைத்து இருவரும் பேசினோம்.''

சரி பரமபதப் படத்தில் பெரிய பாம்பு கடிச்சாச்சு அடி அசடு சற்று நேரத்துக்கு முன்னால்தானே கனவு கண்டு கொண்டிருந்தே, உன் கனவு என்ன ஆச்சு பார்த்தியா? உள்ளே ஒரு கோமதி கொக்கரித்தது.

''என்ன கோமதி, இப்போ என்ன ஆகிவிட்டது?''

''சரி அழல்லே ஸார்,'' முன்றானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆனால் அது பொல பொலத்தது. ''சரி சொல்லுங்கோ, என்ன பேசினான்?''

ராமா நீதான் துணை.

''அதுதான் சொல்கிறேனே, உருப்படியா, உன்கிட்டே சொல்லும்படியாகக்கூட எதுவும் இல்லை. பழைய பாடத்தைத் திரும்பிப் படித்தோம். வேறு என்ன நடக்கும்? நினைத்துப் பார்த்தால் வேடிக்கையாகக்கூட இருக்கிறது. நடுமுதுகில் ஐஸை வைத்து எடுத்து எடுத்து விளையாடினான். மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். ஆனால் போலீஸ்காரனுக்கு அவன் சுபாவம் விடாது. எப்படியும் அவனுக்கு நகை கிடைக்கவில்லையே. கேஸ் முடிஞ்சு போனால் அவன் வரைக்கும், அதாவது சொந்தமான அவன் வரைக்கும் அவன் ஃபைல் மூடப்படவில்லை, அதானால் அவன் என்னை என்ன பண்ண முடியாது என்கிறது வேற விஷயம். அவன் வரையில் ஃபைல் க்ளோஸ் ஆகவில்லை. அது அவனுக்கு ஒரு சவால். அப்படித்தான் அவன் பார்ப்பான். அவன் நியாயப்படி அது சரிதான் என்று எனக்கே தோன்றுகிறது. கோமதி போலீஸ் உன்னிடம் வந்து விசாரித்ததே, அதாவது ஸேட், தன் சொந்த பாஷையில் வைத்திருந்த கணக்குப் புத்தகத்திலிருந்து உன் விலாசத்தைத் தெரிந்துகொண்டு உன்னிடம் வந்து விசாரித்ததாக அப்பவே சொன்னான். என்ன விசாரித்தான்? கொஞ்சம் நினைவுபடுத்திப் பார்த்துக்கொண்டு விபரமாகச் சொல்லேன்—''

"விவரமாக அதிகம் இல்லை. நகையை ஸேட்டிடம் அடகு வைத்தது நான்தானா என்று கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டான். அந்த நகை திருட்டுப்போச்சு என்று அறிவித்தான். கிடைத்தால் அடையாளம் சொல்ல, கோர்ட்டுக்கு வர வேண்டியிருக்கும் என்று சொல்லிவிட்டுப் போனார்."

"அவ்வளவுதானா?"

"அவ்வளவுதான்."

அந்தமட்டுக்கும் லாபம்னு சந்தோஷப்பட வேண்டியதுதான். உன்னைக் கோர்ட்டுக்கு இழுக்காமல் இருந்தானே!"

"இழுத்தால் என்ன? என்னை அவர்கள் என்ன கேட்க முடியும்?"

"ஏன், ஏற்கனவே நாம் ஒருவருக்கொருவர் தெரிந்தவர் என்பது வெளியானால், அவர்கள் ஏதேனும் முடிச்சுப் போட்டு உன்னையும் உடந்தையாக்கி இருப்பார்கள். உண்மையில் இந்தத் திருட்டுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை. ஆனால் சம்பந்தப்படுத்தி விடுவார்கள். அப்போது விசாரணை எப்படிப் போயிருந்திருக்கும் என்று சொல்ல முடியாது என்று தெரிந்துகொள். நியாயஸ்தலத்தில் நியாயத்துக்கும் உண்மைக்கும் சம்பந்தமில்லை. சட்டப்படி எது நிரூபணை ஆகிறதோ அதன்படி தீர்ப்பு."

தலை சுத்தறது.

"சும்மாயிருக்கும் சங்கை ஊதிக் கெடுத்தானாம் தாதன் என்கிற மாதிரி என் செயலாகி விட்டது. அதன் ஆழம் எந்த மட்டும் பாயும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் என்ன எண்ணத்தில் என்ன செய்தேன். நான் எண்ணியது என்ன, ஆனால் நடந்தது என்ன என்று உனக்குத் தெரிய வேண்டாமா?"

''வேண்டாம் ஸார் வேண்டாம். வேண்டவே வேண்டாம். நான் தெரிந்துகொள்ள ஆசைப்படவே யில்லை.''

அவள் கெஞ்சலில் மூர்க்கம் ஒலித்தது.

''ஆம். அதுவும் சரிதான். அந்தச் சிக்கல் உனக்கு எதுக்கு? ஆனால் உன் நகை? உனக்கு வேண்டாமா?''

''எதுவும் வேண்டாம்!'' அவளுடைய பயத்தில் சற்று உரக்கவே கத்திவிட்டது பிறகு உடனேயே தெரிந்தது.

''சொன்னேனே அன்றி அதுவும் சுலபமாக எடுக்கும் படியில்லை.''

சில வினாடிகளுக்குப்பின் தன்னை அழுத்தும் யோசனையிலிருந்து சிரமத்துடன் விடுவிடுத்துக் கொண்டு தொடர்ந்தார்.

''இப்போது ஏன், சிறையிலிருந்த போதும் கூடத் தான்—திரும்பிப் பார்க்கையில், திட்டம் போட்ட இந்த அசட்டுத் துணிச்சல் எனக்கு எப்படி வந்தது? இன்னமும் திகைப்பாகவும், திகிலாகவும் கூட இருக்கிறது. என்னதான் புத்தியோடும், ஜாக்கிரதையாகவும் இருந்தாலும், ஏன், எப்படி ஏமாந்து போகிறோம்? இது என்ன, அவன் ஒருவன் இருக்கிறான் என்பதற்கு இப்படி ஒரு அத்தாட்சியா? சரி அப்படி என் துணிகரமான செயலினாலும் நிலைமை மாறவில்லையே! நீ பட்ட கடன் தீராமல் அப்படியே இருக்கிறது. நகையும் உன்னிடம் சேர்ந்தபாடில்லை. நீ வட்டியேனும் கட்டிக் கொண்டிருக்கிறாயா?''

''வட்டியாவது மண்ணாங்கட்டியாவது, கடனே காலாவதி ஆகிவிட்டது. நகையிருந்தால், வட்டியும் முதலும் சேர்ந்து இப்போ மூழ்கிப் போனாலும் போயிருக்கலாம்!''

"ஓ அப்படியும் ஒரு நிலைமையிருக்கிறதா?" நெற்றியில் அடித்துக் கொண்டார். "அது எனக்கு இதுவரை தோன்றவேயில்லையே!"

"ஸார். நான் அது பற்றிக் கவலைப்படவேயில்லை. அத்தோடு என்னைப் பிடித்த கெட்ட காலமும் விட்டதென்றே நினைக்கிறேன்."

"எனக்கு இப்போதுதான் ஒவ்வொன்றாகப் புரிந்து கொண்டே வருகிறது. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று உனக்கும் உபகாரமாயிருக்க வேண்டும். எனக்கும் நஷ்டம் இருக்கக் கூடாது என்று தலையைச் சுற்றி மூக்கைப் பிடிப்பதுபோல ஒரு திட்டம் போட்டேன். அது கோணிப் போனது நியாயம்தான். ஒன்று நன்றாக விளங்கிவிட்டது. நம் காயை நாம் நகர்த்துவதாக நினைத்துக் கொள்கிறது. காய் நம் கையால் நகர்கிறது. அதில் தான் ஏமாந்து போகிறோம். காயை நகர்த்தும் நம் கையை நகர்த்துவது நம்மை மீறிய ஏதோ ஒரு சக்தி. அதற்கு ஆண்டவன் என்று பெயர் சொல்லி அழைக்கிறாயோ அல்ல வேறு ஏதேனும் அழைக்கிறாயோ நிச்சயமாக நாம் இல்லை. அதை நாம் மறுத்தாலும் அதன் அகண்ட கருணையில் நம் மறுப்பையும் அது ஏற்றுக் கொள்கிறது. அதுதான் அதனுடைய மஹிமை, நம்முடைய ஆச்சர்யம். சரி கோமதி என்னுடைய உரத்த சிந்தனையைக் கேட்க உன்னைக் கூப்பிடவில்லை. ஆனால் இனி நான் இங்கு இருப்பது புத்திகரமாகப் படவில்லை."

"என்ன ஸார் சொல்றீங்க? மறுபடியும் ஆரம்பிச்சாச்சா?"

"இல்லை கோமதி, இதை யோசித்துப் பார். நான் உன்னிடம் இருப்பது போலீசுக்குத் தெரிந்தால் நகையை எப்படியோ உன்னிடம் சேர்த்துவிட்டதாக, உனக்கும்

எனக்கும் முடிச்சுப் போட்டு, புதுக் கேஸ் ஜோடித்து விடு வார்கள். அது பழங்கதை என்று நீயும் நானும் சொல்ல லாம். ஆனால் அவர்களைப் பொறுத்தவரை எல்லாம் ஒரு கதைதான். ஓ, அவர்களுக்குப் புது கேஸாகக் கொண்டு வரும் வழியெல்லாம் தெரியும். அநியாயமாகப் பழிக்கு என்னால் ஆவாய். நியாயம் என்கிற பேரில் என்ன நடக் கிறதென்று நினைக்கிறாய்? செய்த குற்றம் செய்யாத குற்றம் எல்லாவற்றுக்கும் சமுதாயத்தின் பழிவாங்கல் தான். ஓநாயும் ஆடும் கதை உனக்குத் தெரியாதா?',

''ஸார், நீங்களாகவே பூச்சாண்டி காண்கிறீர்கள். ஏதாவது ஒன்று நேருமுன் அதை எதிர்கொண்டு அழைக் கணுமா? அட, அப்படித்தான் வரட்டுமே, ஆமாம், பல வருடங்களுக்குமுன் நாம் இருவரும் ஒரே இடத்தில் வேலை யாயிருந்தோம். பல வருடங்களுக்குப்பின் ஒருநாள் சந்தித்தோம். சந்திக்கக் கூடாதா? உடனே நகையுடன் நம்மை முடிச்சுப் போடணுமா? சரி, களவுக்கு நாம் சதி காரர்கள் என்றே குற்றம் கொண்டு வரட்டும். முதலில் நீங்கள் எடுத்ததாகச் சொல்லும் நகையை அவர்களால் உங்களிடம் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்ததாக அது உங்களிடமிருந்து கைமாற உங்களுக்கு நேரமும் சந்தர்ப்பமும் உங்களுக்கு அவர்கள் கொடுக்கவில்லை.''

''ஒரு வினாடிகூட அவர்கள் கவனத்திலிருந்து நீங்கள் தப்பவே இல்லையே! என்னத்தை அவர்கள் நிரூபிக்க முடியும்? சந்தேகமே தீர்ப்பு ஆகிவிட முடியுமா? அப்போ நாட்டில் சிறைகள் எல்லாம் நிரம்பி வழிய வேண்டியது தான். உங்கள் மூலம் பெரியவர்களிடம் நான் கண்ட குறை இதுதான். பெரிய திட்டம் போடுகிறீர்கள். அதற்கேற்ற படி எதிர்பார்க்கிறீர்கள். ஏமாற்றமும் பெரிதாகிவிடு கிறது. உங்கள் பயங்களும் பெரியதாயிருக்கு, எங்களுக்கும் திட்டங்கள் உண்டு. ஏமாற்றங்கள் உண்டு. துரோகங்கள் நேர்கின்றன. அதனாலேயே ஓரளவுக்கு ஏமாற்றமும்

துரோகமும் தினசரி வாழ்க்கைப் பதமானங்கள் ஆகி விட்டன. எங்களுக்கு அதனால் மனிதத் தன்மை குறைந்து போயிருக்கலாம். அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? அப்பப்போ நிலைமையை அப்பப்போ உசிதப்படி சமாளிப்பதுதான் வழி. அதில் கொள்கை, லக்ஷியம், நேர்மை இப்படி எல்லாம் எதிர்பார்க்க முடியாது. வாழ்க்கையிலோ நம்பிக்கையில்லை. எது எப்படியானால் என்ன? அமைதி, சந்தோஷம், அன்பு, அடையாளம்கூடக் கண்டுபிடிக்க முடியாதபடி அபூர்வப் பொருள்கள் ஆகிவிட்டன. ஆமாம் ஸார், இப்போ வாழ்க்கையில் குணங்கள் கிடையாது. எல்லாமே பொருள்கள்தான். குணங்கள் கூடப் பொருள்கள்தான். இந்த மூணு வருடங்களில் நான் பாதி ஆண் பிள்ளையாகிவிட்டேன். நீங்கள் எப்படியேனும் என்னை விட்டுக் கழலப் பார்க்கிறீர்கள். அது நியாய மில்லை ஸார்—''

புன்னகை புரிந்தார்.

பெருமூச்செறிந்தார்.

4

அனுபவம் மட்டும் அன்று அருளும் வாய்த்த சைத்ரீகனால்தான் அத்தனை வேகமாக ஆச்சர்யமாக அந்த சித்திரத்தை அப்படிக் கண் எதிரிலேயே வரைகோட்டிலிருந்து கையை எடுக்காது, அதன் திக்கு மாறாது வரைய முடியும்.

ஆனால் சைத்ரீகனேயில்லை, சித்திரம் தன்னையே வரைந்துகொண்டது.

இதோ ஏதோ ஒரு நுனியில்தான் சித்திரம் ஆரம்பித்தது. எதன் நுனியென மனம் தன்னைக் கூட்டிக் கொள்வதற்குமுன் ஒரு சுண்டு விரல் தோன்றிற்று. சுண்டு விரலை மோதிரமாக சுற்றிய பாம்புக்குட்டி, உடனே அதை வியப்பதற்கு நேரமில்லை. அப்பவே மற்ற விரல்களும் வந்துவிட்டன, அதைச் சேர்ந்த கை, தோள், உடனே சடாமுடி பரபரவெனக் கீழ் இறங்கி, முகம் கண்கள் மன மயங்கும் மந்தஹாசம், மோவாய்க் குழி கீழு மேலுமாய் வியாபித்து கண்ணைக் கசக்கித் திறப்பதற்குள் தாண்டவ மூர்த்தி உயிர் அளவுக்கு முழுமை அடைந்துவிட்டார். எப்படி—எப்படி? ஆச்சரியப்பட்டுக் கொண்டேயிரு. திரைச்சீலையில்லை. தூரிகையில்லை. அந்தரத்தில் ஓவியம் தன்னைத்தானே வரைந்து கொண்டுவிட்டது.

இந்த அதிசயத்திலிருந்து மீளுமுன்னரே சித்திரம் விக்ரஹமாக மாறிப் பிதுங்கிற்று.

உடனேயே உயிர்த்தது.

ஆச்சர்யங்கள் இன்னும் ஓயவில்லை. உயிர்த்துக் கொண்டே மேலும் மாறுதல்கள் கண்டு மனம் உணரும் தரிசன பயத்துக்கு நேரம் இல்லை. சர்வாபரண பூஷிதை யாக நெற்றிச் சரத்தின் பதக்கம் நடு வகிடில் ஜீவலிக்க

காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே
என்னைக் கை தூக்கியாள் தெய்வமே

மேடையோரத்திலிருந்து வாத்தியங்களினூடே பாட்டுக் கிளம்பிற்று.

''மது! மது!!''

தர்மராஜன் தூக்கத்தில் அலறினார்.

''தா தரிகிட தரிகிட
தக தளாங்கு தகதா
திமிதா
நாதிர்தானி நாதிர்தானி
நாதிர்தானி''

கனவு கலையாமல் தர்மராஜன் தலையை உதறிக் கொண்டு அம்பு பாய்ந்த விலங்கு போல் படுக்கையில் புரண்டு புரண்டு துடித்தார்.

மஹா தாண்டவ மஹரீ ப்ரளய சாக்ஷி

தர்மராஜன் காலடியில் பூமி மிதந்தது.

கோமதி அருகே கைகளைப் பிசைந்து கொண்டு நின்றாள். அவரை எழுப்ப பயமாயிருந்தது. மது! மது!! படிப்படியாக முனகலாய் ஓய்ந்து அதுவும் ஓய்ந்தது. அவர் கண்கள் நனைந்திருந்தன.

* * *

மதுவின் தனிசாமர்த்தியமா, தற்செயலா? ஒப்பனை யில் சவுரி சேர்த்துப் பின்னி, முழங்கால் வரை தொங்கிய

பின்னல், நடனத்தில் முன்னும் பின்னுமாக வீசுகையில் அசல் பாம்பு போலவே நெளிந்து ஏமாற்றியது.

தன்னை மறந்த ஒரு வெறியின் ப்ரபையின் ஒளி நடுவே

தன் நர்த்தனத்தோடு ஐக்கியத்தில் மது தகதகத்தாள்.

* * *

இந்த சமயத்துக்கு நடராஜன்.

* * *

ராதா கிருஷ்ண நடனத்தில் கிருஷ்ணப்ரேமியாகவே மது மாறிவிடுவாள்.

கிருஷ்ணா பேகனே பாரோ

சுந்தரத்தில் குழைந்து உருவான ராதா

கானா நடன நடன

ரூப மதுரவாணி

மது

மதுவிடம் அம்சம் இருந்தது. சந்தேகமேயில்லை.

மதுவின் அழகை என்று அடையாளம் கண்டு கொண்டேன்?

தொட்டிலில் ஆறுமாதக் குழந்தைமேல் ஒருநாள் ஆசையுடன் குனிந்தபோது, குழந்தை மூக்கிலிருந்து கண்ணாடியைப் பறிக்க முயன்று, மார்பிலும் உதைத்தாளே அப்போது. இதில் என்ன இருக்கிறது என்று என்னை இப்போது கேட்டால் எனக்கு மட்டும் சொல்லத் தெரியுமா? சூசகங்கள் கடைசிவரை சூசகங்கள்தாம். சற்று அழுத்திப் பிடித்தால் கசங்கிப்போம். இதழ்கள் பிய்ந்துகொள்ளும்.

அப்பவே அந்தக் காலுக்கு என்ன பலம்! மார் வலித்தது. அப்போது உதைத்தாள். இப்போது மிதித்தாகி விட்டது. மார் வலிக்கிறது. அடி பாவி!

* * *

ஒன்று.

மறத்தலுமில்லை. மறுத்தலுமில்லை.

மரகதத்திடம் அழகு இல்லாமல் மதுவுக்கு அழகு வர முடியாது.

மரகதத்திடம் இல்லாத அழகு மதுவிடம் இல்லை.

* * *

அன்று கோவிலில், மூன்றரை வருடங்களுக்கு முன்னால் பத்து வருடங்களுக்குப் பின்னால் பார்த்த போது அழகு அழிந்து, தடித்தும் போய்விட்டாள்.

ஆனால் பாழடைந்த அரண்மனையை அடையாளம் கூட கண்டுபிடித்துக்கொள்ள முடியாதபடி ஆகிவிடுமா என்ன?

மறக்க முடியாது.

அதுவே ஒரு கனவாக விளங்கிய காலத்தையும் மறக்க முடியாது.

—கனாக் கண்டேன் தோழி—

மது அபிநயம் பிடித்திருக்கிறாள்

மரகதத்துக்கு அப்புறம்தான் மது

தாய்க்கு பின் சேய்

* * *

ஏதோ ஒரு சோப்புக்கு Sales Representative ஆக ஆந்திராவில் சுற்றிக்கொண்டிருந்த சமயம் அது.

கஸ்டமரிடம் வேலையை முடித்துக்கொண்டு அந்த கிராமத்தை விட்டுக் கிளம்புமுன் இருட்டிவிட்டது. ரயிலைப் பிடிக்க வேணுமானால், காட்டு வழியில் இருட்டில் நாலு மைல் நடந்தாகணும். இந்த அத்துவானத்தில் ராப்பொழுதுக்கு தங்குவதைத்தவிர வழியில்லை. பசி வயிற்றைப் பிராண்டிற்று. இரண்டு வாழைப்பழத்தை வாங்கி முறித்துப் போட்டுக் கொள்ளலாமா என்றால், பழம் வாங்கக் கடையிருந்தால்தானே முடியும்?

இந்தக் குக்ஷியை வளர்க்க எங்கேயெல்லாம் போக வேண்டியிருக்கிறது! எவன் காலில் எல்லாம் விழவேண்டியிருக்கிறது.

ஆனால் பெரிய ஆர்டர்.

தன் வீட்டில் தங்க, சாப்பிட, கஸ்டமர் பிரியமாகத் தான் அழைத்தான். ''கோழி பிரியாணிக்கு மனபார் யாவன்ட்டா. சால பாக ஸேஸ்துந்தியண்டி. மீரு ஒக்க கொஞ்சங்கா பெட்டுக்கோனி சூடண்டி! நேனு எவருதக்ர மன்னி செப்பப்போதானண்டி!

உண்மையாகவே உபசரிக்கிறானா?

கேலி பண்ணுகிறானா?

பிறகு அவனேதான், சாப்பாட்டுக்கும் ராத்தங்கவும் கோயில் குருக்கள் வீட்டில் ஏற்பாடு செய்தான்.

சாப்பாடா அது?

சாதமா அது?

சோறு.

குருக்கள் வீட்டுக்கு விருந்தாளி வந்தடைந்தபோது சற்று நேரம் அதிகமாகி விட்டாலும் அந்தக் குடும்பம் விருந்தாளிக்காகப் புதுச் சமையல் செய்கிற மாதிரி இல்லை. காரணம்—இல்லாத குறையா? இஷ்டமில்லையா?

அவர்களுக்கே உருப்படியாகத் தெரியாது. அடிப்படை ஒரு அடிச்சோம்பேறித்தனம் என்றுதான் சொல்ல வேண்டும். மதியம் சமையலில் மிஞ்சியதை வைத்துக் காலத்தை ஓட்டு. சிவன் கோவிலைத்தவிர ஒரு மைல் வட்டாரத்தில் குருக்கள் ஒரு பிள்ளையார் கோவிலிலும் மாரியம்மன் கோவிலிலும் பூசை செய்தார். எல்லா கோயிலுக்கும் ஒரே நைவேத்திய மூட்டை. இலையில் வட்டிக்கையில் அந்த அன்னம் சில்லிட்டுப் போய் ஒரு மாதிரியாக வேர்த்துக் கொண்டு வேல் வேலாக சாதம் விரைத்துக்கொண்டு அப்புறம் மூன்று நாட்களுக்கு விருந்தாளி கஷ்டப் பட்டான். ஏற்கனவே தர்மராஜனுக்கு குடல் நுட்பம். காரமே தாங்காது.

நல்ல காலமே பார்த்திராத மனிதன் பாதி மிருகமாகி விடுகிறான். கூடவே கொஞ்சம் மறை லூஸ். சாப்பிடு கையில் குருக்கள் தான் தஞ்சாவூரில் இருந்ததைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். சொன்னதையே சொல்லிக் கொண்டு வந்த ஆள், தான் சொல்வதைக் கவனிக்கிறானா என்ற நினைப்பே இல்லாமல் தன் குரலைத் தானே கேட்டுக் கொண்டிருந்தார். வாய் ஓயவில்லை. மறுநாள் ஸ்னானத்தை முடித்துக்கொண்டு (சாப்பிடவில்லை) கிளம்பினாற் போதும் என்றாகிவிட்டது.

குருக்களுக்கு இரண்டு பெண்கள். அங்கிருந்தவரை தாயார் கண்ணில் படவில்லை. ஆகையால் இல்லை என்று நினைத்துக்கொள்ள வேண்டியதுதான். குருக்களின் ஓட்டை வாய்க்கு குடும்ப ரஹஸ்யம் என்றே தங்காது போலும். மூத்த பெண் கணவனுடன் வாழவில்லை. வீட்டுக்கு வந்துவிட்டாள். இது தெரிந்துகொண்டு எனக்கு என்ன ஆக வேண்டும்? மானசீகமாகத் தலையில் அடித்துக் கொள்வதைத் தவிர.

இளையவளின் அழகு ப்ரமிக்கத்தக்கதாக இருந்தது. பாலைவனத்து ரோஜா. அவள் அழகை யாரும் பார்க்கப் போவதுமில்லை. அக்கா அவளுக்கு திருஷ்டி கழித்தமாதிரி யிருந்தாள். மூத்தவள் குருக்களைக் கொண்டிருந்தால், தங்கை தாயாரைக் கொண்டிருந்தாளோ? ஆனால் இம் மாதிரி யோசனையால் எனக்கென்ன ப்ரயோசனம்?

சாப்பாடு முடிந்து, கையலம்ப புழைக்கடைக்குப் போனபோது கிணற்றடியில் வழுக்கி—பின்னால் சட் டென்று ஒரு கை தாங்கிக் கொண்டிராவிட்டால், ஆசாமி அப்படியே குடை சாய்ந்திருப்பான்.

''என்னை இங்கிருந்து அழைச்சுண்டு போயிடுங் களேன்!''

கிணற்றடியின் கும்மிருட்டில் கன்னத்தைத் தீய்த்த அந்த அனல் மூச்சு, அந்த ரஹஸ்யக் குரலின் அவசரம்—

* * *

விருந்தாளிக்குத் திண்ணைமேல் ஒரு பழம் பாயும் ஒரு அழுக்குக்கல் கெட்டித்தலையணையும் வழங்கப் பட்டன.

ஆனால் விருந்தாளிக்கு அன்றிரவு பூரா தூக்கம் வர வில்லை. மாறி மாறிப் புரண்டான். நாலு இடம் அலை வதன் வினை என்றுமே தூக்கம் தகரார்தான். இல்லா விட்டால் தூக்கமாத்திரை எதற்கு?

இன்னும் யார் யாரை இப்படிக் கேட்டிருப்பாள்?

ஆனால் இங்கே வருவார் போவார் யார் இருக்கப் போகிறார்கள்?

முன்பின் பார்த்துக்கூட இராத ஒருவனிடம் ஒரு வயதுப் பெண்ணுக்கு (ஏன், வயது தாண்டின என்றே

சொன்னால் என்ன? அந்த விளிம்பில்தான் இருந்தாள்) எப்படி இந்தத் துணிச்சல்? அந்தக் கேள்வியை மனம் சுற்றிச் சுற்றி வந்து வேறு தடத்துக்கே கொண்டுபோய் விட்டது.

அந்த ஒரு வாரம் வரை, சம்பவத்தை நினைத்து நினைத்து, அதிலேயே ஊறிப்போய் ஒரு லாகிரியில் தர்ம ராஜன் மிதந்து கொண்டிருந்தான்.

நினைக்க நினைக்க அவளுடைய துணிச்சல் துணுக் குற்ற மன அலைகள் படிப்படியாகத் துணிந்து—முதலைப் பிடியில் அகப்பட்டுக்கொண்ட—ஒரு அபலையின் அபயக் குரலின் தவிப்புக்குப் பாய்ந்தன.

"என்னை இங்கிருந்து அழைச்சுண்டு போயிடுங் களேன்!"

என்ன அர்த்தம்?

என்னை யாரேனும் காப்பாற்றுங்களேன்!

வேறு என்ன அர்த்தம்?

சமுதாயப் பார்வை உண்மையில் சந்தேகப் பார்வை. சுயநலப் பார்வை.

தனக்குப் புரியாததைத் தனக்கு ஒவ்வாததாகப் பார்க்கும் நான் ஒரு சமுதாய உற்பத்திதானே; அபூர்வ மாக, மனசாக்ஷி ஜெயிக்காவிட்டால் அதன் படிமத்தின் பாதிப்பு என்னைத் தன்னிலிருந்து தப்ப விடுமா?

கூடவே தன் வாழ்க்கையின் அவலமும் நெஞ்சில் புதி தாக உரைக்கத் தலைப்பட்டது.

ஆமாம் இது என்ன பிழைப்பு? ஊர் ஊராக சுற்றிக் கொண்டு, படிப்படியாக ஏறிக்கொண்டு எவனோ ஒருவன் உற்பத்தி செய்த சோப்பை—இன்று சோப்பு,

நாளைக்கு பிஸ்கட் இல்லாவிட்டால் வனஸ்பதி, இல்லாவிட்டால் மருந்து, மாத்திரை, டானிக், ஊசி—விற்பனை செய்துகொண்டு, முதலாளிக்கு செல்வத்தை சேர்த்துக்கொண்டு... காலாகாலத்தில் சாப்பாடு கிடையாது தூக்கம் கிடையாது; ஞாயிற்றுக்கிழமை கிடையாது; நாள் பண்டிகை இல்லை; ஓய்ச்சல் கிடையாது; ஒழிவு கிடையாது. எப்பவும் வேலைதான். அதுவே மூச்சு. என்றைக்கு வயிற்றில் அல்சர் வைக்கப் போகிறதோ, குறிக்கோளே இல்லாமல் இப்படியே செத்துப்போய் விடுவேனோ?

இதில் எந்த மட்டும் சுயம்? எந்த மட்டும் கழிவிரக்கம். தெரியவில்லை. வாழ்க்கை பொதுவாக வெட் கம் கெட்டுப் போய்விட்டது.

பகலில்லை. இரவில்லை. சமயங்களில் ஓட்டலில் இலையில் உட்கார்ந்து, கையிலெடுத்த கவளம் வாய்க்குப் போகு முன் ஒரு முகம் மனதுள் இடைமறிக்கும்.

என்னை இங்கிருந்து அழைச்சுண்டு போயிடுங்களேன்!

அப்புறம் அந்தச் சோறு விஷம்தான். இலையை விட்டு எழுந்துவிடுவான். கன்னத்தை அடிக்கடி தொட்டுக்கொள்வான். அன்றைய அவள் அனல் மூச்சில் கன்னம் கன்றிப் போயிருந்தது.

ஆகவே, அடுத்தமாதம் தர்மராஜன் அந்த கிராமத்துக்கு வியாபார ரீதியில் அவசியமில்லாது திரும்பிய போது, கொஞ்சம் தூக்கததில் நடப்பவன் நிலையில் இருந்தான் என்று உவமை பாஷையில் சொல்லலாம். முழுக்கவும் அதில் தன்னிச்சையில்லை. அவரைச் சுற்றிலும் அவர்மேல் தன்னைத்தானே நூற்றுக்கொண்ட ஒரு வசிய சக்தி படர்ந்திருந்தது. நாள் கழித்து மாட்டிக்கொண்டால்

அவ்வளவுதான். ஆளைத் தலைகீழாகக் கவிழ்த்துவிடும் காதலே! வெட்கமாயிருந்தது. ஆனால் தப்பவும் முடிய வில்லை.

அன்று மணவறையில் அவள் அவனை அணைத்த போது—ஆம் அவள்தான் முதலில்—

என்னை இங்கிருந்து அழைச்சுண்டு போயிடுங்களேன்!

எனும் வேண்டுதலின் வெற்றியாகத்தான் அவள் அணைப்பு அமைந்தது.

'பார்த்தேளா! காத்திருந்தேன் ஜயித்துவிட்டேன்.

சொல்லவில்லை.

சொல்லணுமா என்ன?

என்னைக் கல்யாணம் பண்ணிக்கோங்களேன்!

அப்படிக் கேட்டிருந்தால் அதுகூட அதீதம்தான்.

ஆனால்

'என்னை இங்கிருந்து அழைச்சுண்டு போயிடுங் களேன்!'

நினைக்க நினைக்க திகைப்புக் கூடிற்று. இன்பத் திகைப்பு. அது பற்றித் தூண்டித் துருவா விட்டாலும் அவளைக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"சொல்ல என்ன இருக்கு?" புதிர்ப் புன்னகையுடன் கைவிரித்தாள். வெகு அழகானாள்.

"அப்பா ஒரு கையாலாகதவர், அக்கா ராக்ஷசி. இடமோ சுடுகாடு. தப்பிச்சா போதும்னு ஆயிடுத்து."

"நான் வராவிட்டால் என்ன செய்திருப்பாய்?"

"என்ன செய்திருப்பேன். ஒரு நாள் பொறுக்காது பாழுங்கிணற்றில் விழுந்திருப்பேன். ஆனால் என் துன்பம்

தீர அதில் தண்ணீர் இருந்திருக்குமா என்பது அப்புறம் கேள்வி. ஆனால் அதைப்பற்றி இப்போ என்ன? நீங்கள் தான் எனக்குக் கிடைச்சுட்டேளே!''

ஏதோ விலங்குபோல் முனகிக்கொண்டு அவள் அணைக்கும்போது மனிதன் சந்தனச்சேறில் புதைந்து போனான்.

* * *

மாதாங்கி, மரகதாங்கி

தோடியில் ஒரு அடி அப்படி என்று நினைக்கிறேன்.

ம ர க த வ ல் லீ ம்.

காம்போதிக்குக் கம்பீரத்துடன் ஒரு மென்மையான லலிதமும் இருக்கிறது.

பௌர்ணமியின் சமுத்திரத்தில் அலைகளின் வெண் ணுரையில் நினைவின் நீலம் கலப்பதுபோல்.

என்னென்னவோ பைத்தியக்கார எண்ணங்கள். ஆனால் அவைகளிலும் ஒரு கோர்வை இருக்கத்தான் செய்கிறது.

மணவாழ்க்கையின் அந்த முதல் கட்ட நாட்களை எப்படி விவரிப்பது. அதுவே அவன் வாழ்க்கையின் காவியப் பகுதி என்று சொல்லலாம்.

அவன் பிரயாணங்களில் அவளும் உடன் சென்றாள். அவனால் பிரிந்திருக்க முடியவில்லை. ஆங்காங்கே வீட்டிலோ, ஓட்டலிலோ அறையெடுத்து ஓட்டல் சாப்பாடு, கண்காக்ஷி உடனே அடுத்த முகாம். கல்யாண செலவு அத்தனையும் மாப்பிள்ளையுடையதுதான். குருக் களிடம் உண்மையிலேயே செல்லிக் காசு ஏது? அந்த மட்டும் சாமி சன்னதியில் தாலி கட்டினதோ இன்னும்

செலவு தப்பித்தது. இரு தரப்பிலுமே சுற்றம் உறவு சூழ், இல்லாதது நல்லதாப்போச்சு. தர்மராஜன் சுபாவத்திலேயே சிக்கனம். ஆகையால் இந்த நீண்ட தேனிலவையும் சமாளிக்க முடிந்தது.

ஆனால் அவள் உண்டான பின், ஒரு கட்டத்தில் இந்த முகாம் வாழ்க்கை முற்றுப்புள்ளி காணக் கட்டாயம் வந்துவிட்டது.

தான் வேலை செய்யும் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் இருந்த இடத்தில் வீடு பார்த்துக் குடியேறி அக்கம்பக்கத்தாரை நைச்சியம் கட்டிக்கொண்டு, அவர்களைத் துணை வைத்துவிட்டு தர்மராஜன் தன் வேலையில் முனைந்தான். பொருளாதார நிலையை சரி பண்ணிக் கொள்ளும் அவசியம்.

பிரசவ காலம் நெருங்கினதும்— தாய்வீடு போக அறவே மறுத்துவிட்டாள். தர்மராஜன் ஒரு மாதம் ரஜா எடுத்துக்கொண்டான். தனியார் மருத்துவமனையில் பிரசவம் நடந்து பத்து நாட்களானதும் தாயும் குழந்தையும் வீடு திரும்பினர். எதிர் வீடு, அண்டை வீட்டில் பாட்டிமார்களிடம் யோசனை கேட்டுக்கொண்டு, அவர்களிடம் அவ்வப்போது சரீர உதவியும் வாங்கிக்கொண்டு, பத்தியம் போட்டு தர்மராஜன் தாயுமானவன் ஆனான். வென்னீர் வைத்து குழந்தையை முழங்காலில் போட்டுக் கொண்டு குளிப்பாட்டினதும் உண்டு. இதில் என்ன ஆச்சர்யம்? அவசியம் நேர்ந்தால்தானே எல்லாம் தெரிய வரும் ஸ்வாமி! என்று அவனே சொல்வான்.

அப்படியெல்லாம் அருமை பெருமையுடன் பெற்று வளர்த்த மதுமதி! பெயர் வைத்தது மரகதம்தான். அவளுக்கு எப்படி இந்தப் பெயர் கிடைத்தது? புதுமையுமிருக்கிறது. நன்னாகவும் இருக்கிறது. இல்லை?

மரகதமும் அந்த ஒரு மாதத்தில் தன் காரியத்தைத் தானே பார்த்துக் கொள்ளுமளவுக்குத் தேறிவிட்டாள். நாட்டுக் கட்டை.

தர்மராஜன் உத்யோகத்துக்கு மீண்டான். தனியார் ஸ்தாபனம். சலுகைகள் அதிகம் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. குறிப்பிட்ட டார்ஜெட்டுக்கு பிஸினெஸ் காண்பித்தாகணும். இந்த லைனில் எப்பவுமே போட்டிதான். இடத்தைக் கோட்டை விட்டால் மறுபடியும் ஓடிப் பிடிப்பதென்பது சுலபமன்று.

மாதம் ஏதேனும் ஒரு ஞாயிற்றுக்கிழமையுடன் அபூர்வமாக விடுமுறை நாள் ஒன்றும் சேர்ந்தால் தர்மராஜன் வீட்டுக்கு வந்துவிடுவான். ஒவ்வொரு தடவையும் குழந்தையின் வளர்ச்சி பளிச்செனத் தெரிந்தது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்று சும்மாவா பெரியவர்கள் சொன்னார்கள்?

தாயும் மேனி மினுத்தாள்.

உத்யோக ரீதியிலும் அப்போது தர்மராஜனுக்குப் பொற்காலம்.

ஆடவர்கள மனதை மதுமதி பிளக்கப் போகிறாள் என்று அவளுடைய பன்னிரெண்டு, பதிமூன்று வயதிலேயே தெரிந்துவிட்டது. பள்ளிப் பாடங்களில் சுட்டி. ஆனால் பாட்டுக்குக் குரல் இல்லை. நடனத்தில் அவள் மனம் ஊன்றியது.

அதனால் என்ன? குழந்தை இன்னும் நாலைந்து வருடங்களுக்கு அவள் இஷ்டப்படி திளைத்துவிட்டுப் போகிறாள் என்கிற எண்ணத்தில் டான்ஸ் க்ளாசிற்கு மது அனுப்பப்பட்டாள். அங்கு பாடங்களை வெகு சீக்கிரமே அவள் விழுங்கின பிறகு புகழ் பெற்ற நடன ஆசிரியரிடம் பிரத்யேகமாக பயில ஆரம்பித்தாள். Gostly

Business Never mind. இன்னும் சில வருடங்களில் வேறு வீட்டுக்குப் போகிறவள். அவள் கலையைப் பராமரிக்கும் இடமாகக் கிடைத்தால் அவள் அதிர்ஷ்டம். இல்லா விட்டால் புக்ககம் அவள் கடமைதானே! இடையில் குழந் தையின் சந்தோஷத்திற்கு ஏதோ என்னால் முடிந்த அளவு.

நடனம் கற்று முடிந்தால் ஆகிவிட்டதா? உடனே அதற்கு ஒரு அரங்கேற்றம் வேண்டாமா? அரங்கேற்றத் துடன்தானே நடனத்தின் முத்திரை!

அதற்கு ஒரு மேடை, அழைப்புகள் அச்சடிப்பு, தனிப் பிரமுகர்களின் ஏற்பாடு, தனி அலங்காரங்கள், உடை, வாத்யம் வாத்யாருக்கு தனி சம்பாவனை, வந்தவர் களுக்கு தனி மரியாதை— ஹி! ஹி!! பத்திரிகைகளில் போட்டோ, பாராட்டு—அமர்க்களம்தான் போ!

செலவும் அமர்க்களம்தான். திருடனின் ராஜமுழி.

அடுத்த வாரம் கம்பெனி Director பிள்ளைக்குக் கல்யாணம். ''மிஸ்டர் தர்மராஜன், சாயந்தரம் ரிஸெப்ஷ னுக்கு ப்ரோக்ராம் வெச்சுப்போமா? அன்னிக்குப் பார்த் தேன். Fine Performance அவளுக்கு நல்ல future இருக்குது—

என்ன சொல்வது? சொல்லவும் முடியவில்லை. மெல்லவும் முடியவில்லை.

ஆனால் அன்றைய கடைசி ஐட்டம், மது ஆண்டா ளாக அபிநயம் பிடித்தபோது சபையில் ஒரு ஹாஹா காரம்— அனைவரின் திரண்ட பெருமூச்சு ஒன்று கிளம் பிற்று. தர்மராஜன் கண்கள் துளும்பிவிட்டன. காது வரை மைக்கோடு இழுத்துவிட்ட அந்த விழிகளுக்கும், முன் கொண்டைக்கும் நெற்றியில் ஒற்றை நாமத்திற்கும்

இரு கைகளை நீட்டிக்கொண்டு திருத்துழாய் மார்பனைத் தேடும் ஏக்கத்துக்கும், இந்தப் பக்கமும் அந்தப்பக்கமுமாக ஓடி ஓடி அலைந்து அந்தத் தவிப்புக்கும் இத்தனை சக்தியா? இதற்கு வராத பரந்தாமன் இந்த ப்ரேமைக்கு லாயக்கு தானா?

மரகதம் மேடையில் நட்டுவாங்கத்துடன் உட்கார்ந் திருந்தாள். அவள் நெற்றியில் முத்திட்ட வேர்வையில் எத்தனை அழகாயிருந்தாள்.

இருட்டடிக்கப்பட்ட அரங்கத்தில் பக்கத்து நாற்காலி யிலிருந்து ஒரு கம்மின குரல் தர்மராஜன் பக்கமாகச் சாய்ந்தது.

''ஸார் உங்களைத்தான்—?''

''yes?'' தேன் போதை இன்னும் முழுக்கத் தெளிய வில்லை.

''Exeuse me. நீங்கதானே குமாரியின் ஃபாதர்?''

''yes?''

''நான் அம்மாவோடு பேசினேன். அவங்க உங்க ளோடு பேசச் சொன்னாங்க—எப்ப சாவகாசமா நம்ம சந்திக்கலாம்? நாளைக் காலையிலே வரலாமா? இல்லே அதைவிட பெட்டர் நீங்க என் ஆபீசுக்கு வந்துடுங்களேன். I am a busyman. இதோ என் visiting card'' ஏதோ ஒன்று கையில் திணிக்கப்பட்டது.

''என்ன விசேஷம்?'' ஒண்ணுமே புரியவில்லை.

''நான் ஒரு ஃபிலிம் ப்ரொட்யூஸர். என்னுடைய latest ப்ரேமரதம் பார்த்திருப்பீங்கன்னு நெனைக்கிறேன். வர வெள்ளி, வெள்ளி விழா கொண்டாடுது. மந்திரி வராரு. அழைப்பு அனுப்பறேன்.''

நாற்காலியில் முள் ஏறினாற்போல் அப்போதுதான் தர்மராஜனுக்கு முழு விழிப்பு முழுத் தெளிவுடன் வந்தது. கண்ணிலிருந்து திரை கிழிந்த தெளிவு. இனி இந்த விழிப்புக்கு கண் மூடல் இல்லை. மூடல் முடியாது.

அன்று இரவு அப்பாவும் அம்மாவும் பெருத்த மோதல். மரகதம் ஸ்வரூபம் எடுத்ததும் தர்மராஜன் அதிர்ந்து போனார்.

பட்டணத்தில் குழாய் பாஷை என்கிறோம்.

கிராமத்தில் படித்துறை பாஷை என்பதா?

இத்தனை வருஷங்கள் அவர்களிடையே சண்டை சச்சரவு வாக்குவாதம் வந்ததில்லையா?

ஆனால் இதுமாதிரி மனைவி 'கோதாவில்' இறங்கிப் பார்த்ததில்லை. இது ஒரு முகமூடிக் கலைப்பு. மூச்சு வாங்கக்கூட தடை படாத அந்த வார்த்தை வெள்ளம். எக்கச்சக்கப் பிரசங்கம். மட்டு மரியாதையின் கட்டிடச் சரிவு. உனக்காச்சு எனக்காச்சு. இந்த முதல் தாக்குதலிலேயே நீ விழுந்துவிட வேண்டும். Count-one-two-three four என்கிறமாதிரி முரட்டுச் சொல்லடி—அந்தப் புயலுக்கு தர்மராஜனால் எதிர்கொள்ள முடியவில்லை. செவிகளைப் பொத்திய வண்ணம் நாற்காலியில் உட்கார்ந்து விட்டார்.

அப்புறம் செவியில் இறங்கின அத்தனை கக்கல், கரைசல், வண்டல், வாடை, சாக்கடை, உடைப்பை வடிகட்டினால் மரகதத்தின் வாதத்தின் சாராம்சம்.

இந்தக் காலத்தில் பெண்களுக்கு அவ்வளவு சுருக்கக் கல்யாணம் ஆகிவிடுகிறதா? அந்த நாளிலேயே நான் எத்தனைக் காத்திருந்தேன். காத்திருந்தும் என்ன? புதையல் குழியில் விழுந்து விட்டேனா? அன்னாடம்

காய்ச்சிப் பிழைப்பு! இதில் கவுரவம் என்ன வேண்டிக் கிடக்கு. இங்கே என்ன கொட்டிக் குவிச்சா கிடக்கு எல்லாருக்கும் சினிமா சான்ஸ் வாசலுக்கு வந்து கதவை யிடிக்கிறதா? பிழைக்கத் தெரியாதவனுடன் என் முடிச்சைப் போட்டிருக்கு. வேளையைப் பணம் பண்ணத் தெரியாத மனுஷன் என்ன மனுஷன்? மானமாம், கௌரவமாம், குடும்பமாம். அது அது வேளா வேளையில் நடக்கணுமாம். தட்டிக் கழிக்கிற சாமாச்சாரம். கலியாணம் வேளை வந்தால்தானே ஆறது.

'ஆண்டாள்'—மேக்கப்பை இன்னும் கலைக்க வில்லை. முன் கொண்டையுடனும் தரையில் புரளும் திண்டு மாலையுடனும் இருவரையும் மாறி மாறி பார்த்துக்கொண்டு நின்றாள். அந்தப் பார்வையில் திகைப்பா, ஏளனமா? பயமா? ஆண்டாள் யார் பக்கம்? கண்டுபிடிக்க முடியவில்லை.

* * *

மறு நாளே காம்ப் இருந்தது. 'கடகடத்துப் போன தன்னை ஒன்று சேர்த்துக் கொள்ள அவகாசம் கிடைத்தது.'

தர்மராஜன் தன் வாழ்க்கையில் விரிசல் கண்டு விட்டதை உணர்ந்தான். ஏமாந்து போனேன். இன்று அல்ல, அன்றே இவளுடைய கிராமத்தில், இவள் வீட்டில் ராத்திரி சாப்பாட்டுக்குப் பின் கையலம்ப புழைக் கடைக்குப் போனபோது, கிணற்றடியில் வழுக்கிவிட்டதே, அப்போதே வகையாக மாட்டிக்கொண்டேன். வீட்டுக்குள் கக்ஷி வந்தாச்சு. மகளும் தாயும் எனக்கு எதிர். ஆமாம் இதென்ன வேடிக்கையாயிருக்கிறதே, இந்த அளவுக்கு விவரம் தெரிய மதுவுக்கு வயதாகவில்லையா, புத்தி யில்லையா?

இந்தச் சமயம் டூர் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேலேயே நீடித்துவிட்டது. மதுவுக்குப் போட்ட இரண்டு கடிதங்களுக்குப் பதில் இல்லை. தூண்டில் விளையாடுகிறார்களா? இன்னொரு மோதலுக்கு ஆயத்தம் ஆகணுமா? உள்ளூர பீதிதான். வியாபாரத்தில்கூட ஏறக் குறைய நாணயம் உள்ளவர்களுடன் எனக்குப் பழக்கம். மானத்தை விட்ட பெண்பிள்ளையைச் சமாளிக்க என்னாலாகாது. 'தங்கமுலாம் பூசிய இரும்புக்கவசம் என் பலவீனம்'. என்னைவிட நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாள். மதுவைக் காப்பாற்றியாகணுமே!

வேணுமென்றே தான் திரும்புவதை முன்கூட்டி அறிவிக்கவில்லை. மாலைவேளை வீட்டுள் நுழைந்தபோது கூடத்தில் சோபாசெட்டில் அவர் குடும்பத்துடன் மூன்றாவது ஆள் காப்பி அருந்திக் கொண்டிருந்தான். தர்மராஜனைப் பார்த்ததும் அந்த ஆள் எழுந்திருக்கக்கூட இல்லை.

''ஹல்லோ ஸார், என்னை நினைவு இருக்குதா?''

''ஐயோ மறக்க முடியுமா என்ன? 'ப்ரேமரதம்' இன்னும் முட்டி வந்து சேரல்லியா?''

''ஓ, தாங்க்யூ—சரி வர்ரேன். அப்புறம் பார்க்கலாம் அம்மா—''

மரகதம் சமாதானம் சொல்ல முன்வரவில்லை. தர்மராஜனும் கேட்டுக் கொள்ளவில்லை. அன்றிரவே ஒரு முடிவுக்கு வந்தார்.

மறுநாளே தன் வேலையை ராஜிநாமா செய்தார். ஒரு மேஜை வேலையாகத் தேடத் தலைப்பட்டார். கொஞ்சம் சிரமம்தான். ஆனால் அவருடைய கம்பெனி டைரக்டர் சிபாரிசிலேயே ஒரு தனியார் வங்கியில் சேர்ந்தார்.

எப்படியும் இப்போது தான் உள்ளூரிலேயே ஸ்திரமாகத் தங்கிவிட்டதால் இவர்களுடைய தனிக்காட்டுத் திரியல் கட்டுப்படும் அல்லவா? என்று எண்ணம்.

கோமதி அவருக்குப் பின்தான் வேலையில் சேர்ந்தாள். அவள் திறமையைச் சோதித்து அவர்தான் அவளைத் தேர்ந்தெடுத்தார். அவளுடைய நன்றி காரணம் இதோ இன்றும் என் தலைக்குமேல் ஒரு கூரை; என்னைக் காக்கிறது.

அந்தப் பழக்கச் சாக்கில் கோமதி அவர் வீட்டுக்குச் சில முறைகள் வந்திருக்கிறாள். அந்த முறையில் அவளுக்கு மாமியோடும் தன் வயதுக்காரி மதுவோடும் மேலெழுந்தவாரியான பழக்கமுண்டே தவிர குடும்பத்துக் குமுறலை அவர் அறிய நியாயமில்லை.

'இரண்டு புலிகளும் ஒரு புலிக் குட்டியும் ஒரு கூட்டில் சுற்றிச் சுற்றி வளைய வந்தன; அடிபட்ட ஆண்புலி தன் காயங்களை நக்கிய வண்ணம்.'

வெளியிலேயே பழக்கமாயிருந்து விட்டபின் ஸ்திரமாக ஒரே இடத்தில் காலை 10 மணியிலிருந்து மாலை ஐந்து வரை சிறைப்பட்டு வேலை செய்வது சிரமமாயிருந்தது. சாதனைகளுக்குச் சந்தர்ப்பமில்லாமல் பக்கங்களில் கூட்டிக் கழித்து, பெருக்கி வகுத்துக் கொண்டிருப்பது என்பது சுலபமான ருட்டீன் அல்ல. இருந்தாலும் குடும்பம், கௌரவம் என்று காப்பாற்றியாக வேணடும். பெண்ணுக்கு வரன் சுறுசுறுப்பாகப் பார்க்க ஆரம்பித்தார். மனைவி, கடிவாளத்தைத் துப்பிய குதிரையாகி விட்டாள். ஆனால், மகளைக் காப்பாற்றியாகணும். வருமானம் இறுகிக் கொண்டது. டூரிங்கில் மாதச்சம்பளம் தவிர தன் பணமோ, கம்பெனிப் பணமோ, வசூல் பணமோ தினப்படி 'பேட்டா' கமிஷன். டார்ஜெட்டை மீறி

விற்பனை காண்பிக்கும் வரை, அதற்குப்புறமும் அன்றாட புழக்கத்துக்கு ரொக்கத்துக்குக் கவலையில்லாமல் இருப்பது எப்படி, மாதச் சம்பளக்காரன், சம்பளம் கரைந்துபோன பின், அடுத்த முதல் தேதியை எதிர்பார்த்துக் கொண்டிருப் பது எப்படி? தவிர மாதச் சம்பளம் அப்படி ஒன்றும் தூக்கிக் கொடுத்து விடாது. பல்லைக் கடித்துக்கொண்டு தர்மராஜனுக்கு சிரம திசை.

அவன் ஊரோடு வந்து சேர்ந்து விட்டதற்கு அவர்கள் கிணுங்கவில்லை. ஆச்சர்யப்படக்கூட இல்லை.

அத்தியாவசியம் தவிர பேச்சு விட்டுப் போச்சு. சந்தேகம் புதுவிதமாகப் பிடுங்கித் தின்றது. ஆமாம், நான் காலை ஆபீசுக்குப் போய், மாலை திரும்பி வரும்வரை இவர்களைக் கட்டிப் பிடிப்பவர் யார்? தனக்குத் தன் காவல் இல்லாதவரை என் அடைகாவல் என்ன செய்யும்? இவர் நாள் பூரா போலீஸ் பண்ணுவதென்றால் அது ஆகிற காரியமா? அதுவே எனக்கு அசிங்கமில்லையா?

'நீதான் விட்டுப் பிடிக்கணும்.' உள்ளே குரல் எழும்பிற்று.

'எதை? இவர்கள் சினிமாப் பித்துப் பிடித்துப் படுகுழி நோக்கிப் போவதையா?'

'நடனம் ஆடுகிறவர்கள் எல்லோருமே சினிமா ஸ்டார் ஆகி விடுகிறார்களா? சங்கீத மேடை கௌரவமாக இருக்கிறது திரை மேடை அவமானமாப் போச்சாக்கும். கலை என்றால் எல்லாமே கலைதான். சங்கீதம், நடனம், நாடகம், சினிமா.' தன்னைத்தானே தான் கேலி செய்கையில் ஆத்திரம் பொங்கிற்று. மனிதன் தவித்தான். கவலையால் இளைத்தான்.

ஞாயிறு, விடுமுறைகளில் அல்லது சில சமயங்கள் மாலை ஆபீசிலிருந்து திரும்பினால், கூடத்தில் மரகதம் உட்கார்ந்துகொண்டு, தரைமேல் ரூல்கட்டையால் தட்ட, மது ஆடிக் கொண்டிருப்பாள். முதலில் சிரிப்பு வந்தது. அப்புறம் எரிச்சல் பொறுக்க முடியாமல் கூப்பிட்டு விசாரித்தபோது,

''ஆமாம் அப்படித்தான். இத்தனை நாள் கஷ்டப் பட்டுக் கத்துண்டது மறந்து போகாமல் இருக்க நீங்கள் தான் காலில் விலங்கு பூட்டியாச்சே. விலங்கோடு ஆடறாள். நீங்கள் விலங்கைப் பூட்டினப்புறம் நாங்கள் எப்படிப் போனால், உங்களுக்கென்ன?''

அப்புறம் அது என்ன சினிமாவைப்பற்றி அப்படி ஒரு பேச்சோ? உட்கார்ந்தால் மரகதத்தைச்சுற்றி வெறும் சினிமாப் பத்திரிகைகள்தான். இவர்களுக்கு யார் இப்படி ஸப்ளை பண்ணுகிறார்கள்? சினிமா நடிகன் நடிகை களைப் பற்றிப் பேச்சுதான்.

இது என்ன சினிமா பாராயணம் வீடு உருப்படுமா? என்று கடிந்தபோது, காத்திருந்தாற்போல் பதில் வந்தது. பதில்கள் எல்லாம் மரகதம்தான்.

''நன்னாயிருக்கு கார்வார்! வாய்ப்பூட்டு வேறே யாக்கும்! நீங்கள் எந்தக் காலத்தில் இருக்கேள்? நாக்கை சுடறது, கண்ணைக்குத்திப் பொட்டையாக்கறது, அதெல் லாம் உங்கள் அம்மா காலத்தோடு போச்சு. அப்படித்தான் எங்களுக்கு இஷ்டப்பட்டதைப் பேசுவோம். உங்களால் முடிஞ்சால் மனசின் மூடியையே திறந்து பார்ப்பேள். அதன் உலையைக் கண்டேள், பயந்தே போயிடுவேள்...''

வேணுமென்றே சீண்டுகிறார்கள். எதற்கோ தயா ராகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாளும் ஒரு நாள் வந்தது.

பிற்பகல் ஒரு போன் வந்தது.

எடுத்துக் கேட்டார் ''யாரது? தர்மராஜன் ஹியர்''.

''பாவம் தர்மராஜன்!'' உடனேயே அந்தப் பக்கம் போன் அறுந்தது.

ஒன்றும் புரியவில்லை.

புரியாமலும் இல்லை.

என்ன தோன்றிற்றோ. வீட்டுக்கு—

வாசற்கதவில் பூட்டு தொங்கிற்று. அக்கம் பக்கம் கேட்டதில் பக்கத்து வீட்டில் சாவியைக் கொடுத்தார்கள்.

மாமி இதைக் கொடுக்கச் சொன்னாள். மாமியும் மதுவும் ஆளுக்கு ஒரு கைப்பெட்டியோடு ஆட்டோ ஏறிப்போனா. இப்பத்தான் அரை மணி ஆச்சு.''

வந்த உடனே கண்ணில் படும்படியாக, சோபா செட் நடுவே டீபாயின் மேலே கனம் வைத்து ஒரு கடிதம்.

''எங்களைத் தேட வேண்டாம் நகை நட்டு எதையும் தேட வேண்டாம். நீங்கள் போட்டதானாலும் எங்களுடையதுதானே? பாங்கியிலிருந்து பணத்தை எடுத்துண்டு போறோம். என் பேரையும் சேர்த்து நீங்கள் கணக்கு வெச்சது சௌகர்யமாப் போச்சு. மதுவின் எதிர் காலத்தை நிறக்கப் பண்றது எப்படின்னு எனக்குத் தெரியும். அவளுடைய பேரையும் புகழையும் நான் எழுதி தெரிஞ்சுக்க இருக்காது. பத்திரிகையிலேயே கண்டுப்பேள். அவளுடைய 'ஸ்டார்' சரக்கு உங்களிடம் குட்டிச்சுவரா யிடும்னு தெரிஞ்சுபோனதால் சொல்லிக்காம போனோம். இப்படி நாங்கள் போறதுக்கும் நீங்கள்தான் காரணம், பொறுப்பு.''

தர்மராஜன் மின் விசிறியைப் போட்டுவிட்டு சோபாவில் அமர்ந்தார். ஒரு பெருமூச்சு. 'அப்பாடி' மூச்சு இனி

என்ன நேரப்போகிறதோ என்று காத்திருக்கும் நரகம் இல்லை. ஒரு நரகம் போனால் இன்னொன்று. அது தெரியும். ஆனால் இந்த நரகம் இனி கிடையாது.

மரகதமே ஒரு தனி கேஸ் போலத் தெரிகிறது. ரத்தத்திலேயே ஒரு கால் 'ஜீன்ஸ்' சமாச்சாரம். கிராமத்தில் கிணற்றடியிலிருந்தே அவள் சமயத்துக்குத்தான் காத்திருந்திருக்கிறாள். அவளுடைய சமயங்களும் அவளுக்குத்தான் தெரியும். என்னோடு அவளுக்குக் கஷ்டம்தான். ஆனால் மது?—No, நான் ஒன்றும் செய்வதற்கு இல்லை. மது இப்போது கேட்கமாட்டாள்.

மரகதம் என் தவறு. என் வாழ்க்கை முழுக்க என் தவறுக்கு பிராயச்சித்தம்தான். சரி. இனி நடக்க வேண்டியது என்ன? கடையைக் கட்டு. சீட்டைக் கலை Fresh Deal.

பழைய கம்பெனிக்குப் போய் பழைய வேலையைக் கேட்டார். இரு கைகளாலும் வரவேற்கப்பட்டார்.

"Welcome back to the fold Mr. Dharmarajan."

டைரக்டர் காரணம்கூடக் கேட்கவில்லை. ஏற்கனவே தெரியுமோ என்னவோ. இது மாதிரி விஷயங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் தகவல் கடைசியாக கிடைக்கிறது (சமுதாயத்தின் சதி, விதியின் புரளி!) எப்படி!

தன்னை மறக்கும் ஈடுபாடில் தன் வேலையில் முழு வெறியுடன் தர்மராஜன் இறங்கினார்.

"நான் ஹீரோக்களின் வார்ப்படத்தில் விழவில்லை" அவ்வப்போது தனக்குச் சொல்லிக் கொண்டார். அப்படி இருந்தால் என் நிலைமையை, நிலைமைகளை எப்படி நிர்வகித்திருப்பேனா அதுவும் எனக்குத் தெரியாது. நிச்சயமாக, நான் கப்பலின் கேப்டன் அல்ல, கப்பலோடு கடைசியாக அமிழ்பவன் காப்டன்தானாமே. நான் சர்வ சாதாரணமானவன்.

இது சமாதானமா? தைரியமா? தன் உண்மையா? அந்தக் கமலாம்பிகைக்குத்தான் வெளிச்சம்.

இரவுகளில் தூக்கம் மறுத்து, படுக்கையில் புரளுகை யில் கமலாம்பிகை நினைப்பில் வருவாள். ஒட்டினாற் போல் பெரியப்பாவையும் நினைப்பது இயல்புதானே! பெரியப்பாவின் தாத்தா நாளிலிருந்தே குடும்பம் பூஜை செய்த தெய்வமாச்சே கமலாம்பிகை.

பெரியப்பா அசகாய சூரன். வாள் எடுத்தவன் தான் வீரனா? நாக்கைக்கட்டி, வயிற்றைக்கட்டி உடம்பில் ஆயிரம் கோளாறுகள்—சர்க்கரை, உப்பு, ரத்தக்கொதிப்பு, மூத்திரக்கட்டு, மூலம்—இளம்பிள்ளை வாதத்தில் வலது கால் முறுக்கிக் கொண்டுவிட்டது. இதே ரீதியில் கத்தி முனையில் நடந்தே மனிதன் தன் முழு ஆயுசையும் நடத்தி இருக்கிறார் என்பதைச் சிந்திக்கையில் மனித சாதனைக்கு எடுத்துக்காட்டாக விளங்கி இருக்கிறார்.

சாவுக் கடிதாசு எட்டு முத்திரைகளைத் தாங்கிக் கொண்டு ஊர்ஊராகத் தேடி அவரை அடைகையில் முதல் மாசிகம் ஆயிருக்கும். ஆளே போயாச்சு. இருப்பவரைக் கட்டி அழுவதும் இருப்பவர் நடத்தும் நாடகம்தானே. அப்படி அங்கு ஒட்டுதலும் இல்லை. மணி காய்ச்சல்காரன். அவர் போன மூன்று மாதங்கள் கழித்து பெரியம்மா கால மாகிவிட்ட கடிதாசு. கணக்கே பைசல், நான் போகாதது சரி என்று சாதிக்கவில்லை. பெரியப்பாவே அப்படித்தான் சொல்லியிருப்பார். என்னடா தருமு? நீ வந்து எதைத் தடுக்கப்போறே; மனிதன் அப்படிப்பட்டவன், உடம்பில் வாழவில்லை. சித்தத்தில் வாழ்ந்தார். வாழ்ந்து காட்டி னார்.

ஆகாரத்தில், உட்கார்ந்தால் தப்பு, நின்றால் அபராதம், திரும்பினால் தண்டனை. வயிற்றுக்கு நிரம் பவும் நாக்குக்கு ருசி பார்க்கவும் மறந்தே போயிருக்கும்.

நாக்குக்குப் பேச்சு ஒண்ணுதான் மிச்சம், அதையும் அடக்கிவிட்டான். லேசாய், மணிக் கணக்கில் கிழக்கைப் பார்த்துக்கொண்டு, அசைவற்று அப்படி வேறு யாரால் உட்கார்ந்திருக்க முடியும்? அப்படியெல்லாம் இருக்கணும் என்று எனக்கும் ஆசைதான். ஆனால் எல்லாராலும் முடிகிற காரியமா?

அப்போது என்னத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்? எதை நினைத்துக் கொண்டிருந்திருப்பார்? தன்னையே தின்று கொண்டிருந்தாரா?

மிச்சப்போதுக்கு எழுதிக்கொண்டிருப்பார். தேவ நாகரி. நோட்டுக், நோட்டுக்காகக் குவித்துக் கொண்டிருந் தார். ஒன்றிரண்டாவது ஞாபகார்த்தத்துக்கு மணியிடம்? ஊஹூம். ஆத்திரம் பிடித்தவன் போகி கொளுத்தியிருப் பான். பெரியப்பா என்னிடம் கனிவாயிருந்தது அவனுக்கு எப்பவுமே ஆகாது. தாய் தகப்பனில்லாதவன், தருமச் சோறு தர்மராஜன், எதிர்த்துப் பேச எனக்கு வாயேது?

கோவில் பூஜை தவிர வீட்டில் சின்ன மர விமானத்தில் ராஜராஜேஸ்வரி பிரதிஷ்டை. நவராத்திரியில் இரண்டு வேளையும் அபிஷேகமும் ஸஹஸ்ரநாமமுமாக அமர்க் களப்படும். அப்புறம்தான் பெரியப்பாவுக்கு அன்றைய தினத்தின் ஒரே வேளை முழு ஆகாரம், இரண்டு வாழைப் பழம், ஒரு தம்ளர் பால்.

எப்போது பார்த்தாலும் அவள்மேல் ஏன் இப்படி ஒரு வேட்கை? உனக்காச்சு எனக்காச்சு பலப்பரீட்சையா? இல்லை, உள்ளே விட்டால் எனக்கு வேறேது கதியென்று சரணாகதியா? இல்லை பெரியப்பா, பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்து ருசி கண்டுவிட்டாரா?

கடலில் துள்ளியெழுந்து அதிலேயே விழும் மீன் போல், மூழ்கிப்போன மோனத்திலிருந்து அவ்வப்போது வார்த்தைகள் மனமில்லாது ப்ரஸாதம் போல், காத்திருந் தவர், உணர்ந்தவர் அதிர்ஷ்டம்.

மோனத்தில் சோதனை நடத்த எத்தனையோ இருக்கு. வெறும் பேச்சை அடக்குவது மட்டும் மோனம் அன்று. இன்னும் என்னவோ இருக்கு. அந்த உலகமே தனி. பார்க்க, கேட்க, ஆசை. பக்கத்தில் போக பயம்.

ஆனால் பெரியப்பா ஏதோ ஒரு கட்டத்தில் தானிருந் திருக்கிறார். அதில் சந்தேகமில்லை. அத்தனை வியாதி கள் படுத்துகையில் ஏதோ ஒன்றின் காரணியாக ரத்து ஆகாமல், உயிரை உடம்புடன் பிடித்து வைத்துக்கொண் டிருந்ததே ஒரு அமானுஷ்ய வித்தைதான்.

ஒரு நள்ளிரவு பக்கத்தில் தூங்கிக்கொண்டிருப் பவனைத் தட்டி எழுப்பி, ''தருமு, யாருக்காகவும் யாரும் காத்திருப்பதில் அர்த்தமில்லை. உண்மையில் யாருக்காக வும் யாரும் காத்திருக்கவில்லை. எதற்காக இந்த ஆலஸியம் என்று தெரிவதும் இல்லை. ஆகவே யாரும் யாருக்காகவும் காத்திருக்க வேண்டாம்...''

காத்திருந்தேன்.

கைவிரித்தார். ''நீ வந்த வேலையைப் பார்...''

''என் வேலை என்ன பெரியப்பா?''

' உன் ப்ரக்ஞை.''

''அப்படியென்றால்?''

''நீயே கண்டு பிடித்துக்கொள்.''

திரும்பிப் படுத்துக்கொண்டு விட்டார்.

என்னைப் போவென்று அவர் சொல்கிற முறை அது போலும். இனி இங்கிருந்து உனக்காக வேண்டியது ஒன்று மில்லை. அவர் விளக்கும் முறை அது.

அடுத்த நாளே கிளம்பிவிட்டேன். இன்னும் என் ப்ரக்ஞையைத தேடிக்கொண்டிருக்கிறேன். இப்படிச் சாண் ஏறாமலே, முழம் முழமாகச் சறுக்கிக்கொணடே போவதா? பெரியப்பா தாங்கள் இப்போது எங்கிருந் தாலும் என்னைக் கை தூக்குங்கள். கை தூக்கிக் கொள்ளுங்கள்.

ஊர்களில் திரிந்த நாட்களில் திரியும் நாட்களில் வாழ்க்கையின் மேடுபள்ளங்களுக்கேற்ப, கட்டிலில் விட்டத்தைப் பார்த்துக்கொண்டு எனக்கு நடந்ததையெல் லாம் எண்ணிப் பார்க்கையில், பெரியப்பா என்ன பேசி னார்? என்ன அர்த்தம்? என்ன மனதில் வைத்துக்கொண் டிருந்தார்?

கூடவே

தாய்ப்பாசம், தந்தை பாசம், பிள்ளைப்பாசம், பெண் பாசம் என்கிறோமே? அதில் சற்றேனும் உண்மையிருக் கிறதா? இல்லை மனிதசந்ததி, தலைமுறை தலைமுறை யாகத் தனக்குத்தானே முட்டிக்கொண்டு அதனாலேயே உண்மைப் படுத்திக் கொள்ளும் வெறும் கிசுகிசுப்புத் தானா? ஆனால் மிருகங்களுக்கு அது இருக்கிறதே, அது எப்படி? மிருகங்களிடம் அது உண்மை, மனிதனிடம் பொய்யா? ஆறு அறிவு கண்ட மிச்சம் இதுதானா?

நீண்ட பெருமூச்சு ஒன்று தன்னிடமிருந்து புறப்படு வதை உணர்ந்தார். தொப்புளிலிருந்து கிளம்பி உடலின் அத்தனை நரம்புகளிலிருந்து அவைகளின் பலத்தை உருவிக்கொண்டு புகைபோக்கு போல் பிராணனிலிருந்து

ஒரு சிறு பங்கு, மூச்சோடு இனி திரும்பி வராத பங்கு, நாசிவழியே வெளிப்படுவதை உணர்ந்தார். உயிரின் செலவே இப்படித்தான் சிறுக...சிறுக...அரித்து...அரித்து...

பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் தன்னை மறக்கும் முயற்சியில் ஓடியாடித் திரிந்து, உடல் ஓய்ந்து அறுபதை எட்டி, மன நிலையின் ரணம் முற்றிலும் ஆறிவிட்டதா, அல்ல மேலுக்கு ஆறினாற்போல் காட்டிற்றா? தர்மராஜனாலேயே தனக்குக்கூட திடமாக சொல்லிக்கொள்ள முடியாது. ஆனால் எப்படியிருந்தால் என்ன? போனால் என்ன? என்று ஒருவிதமான விரக்தி, ஒட்டுதலற்ற தன்மை, ஒட்டுதலையே விரும்பாத தன்மை மனதில் வெகு வெகு நுட்பநிலை, மாண்டில் திரி போன்று வெளித் தோற்றத்துக்கு அழகிய புஷ்பம், தொட்டால் பிசுபிசு அவ்வளவுதான். ஆகையால் தொடாதே, தொடப் படாதே. தொடவிடாதே என்கிற ஒரு ஜாக்கிரதை, உள் கூச்சம், ஒரு நுட்பமான, நீண்டு புகைந்துகொண்டிருக்கும் கோபம். இந்த நிலையில்தான் தற்செயலாக கோமதியை மீண்டும் அவள் பணியாற்றிக்கொண்டிருந்த பாங்க் ஆஃப் பரோடாவில் சந்தித்தார்.

5

குற்றவாளி தன் குற்ற உணர்வினாலேயே தூண்டப் பட்டு, தான் குற்றம் இழைத்த இடத்தையே திரும்பத் திரும்பச் சுற்றி வருவான் என்று மனோதத்துவ ரீதிப்படி ஒரு கோட்பாடு உண்டு.

தர்மராஜன் இப்போது அந்த வீட்டுக்கெதிரே நின்ற படி அதைச் சிந்திக்கையில், வீடு அடையாளமே மாறி விட்டிருந்தது. மாடிக்கு மேல் மாடி. புதுப் பெயிண்ட். வீட்டின் முன்பிலேயே ஒரு துடிப்பு தெரிந்தது. 'மனக் சந்த் நர்ஸிங் ஹோம்' என்று நாஸுக்கான எழுத்துக்களில் பெயர் புதைத்திராவிட்டால் இடம் புரியாமல் தர்மராஜன் நகர்ந்திருப்பார்.

வாசலில் ஒரு கார் நின்றது.

பெரும் ஆவலால் தூண்டப்பெற்று உள்ளே நுழைந் தார்.

உட்புறமாக உட்கார்ந்திருந்த சௌக்கிதார் எழுந்து நின்று ஸெல்யூட் அடித்தான். தர்மராஜன் திறுதிறுவென்று சுற்றும் முற்றும் நோக்கினார். பெரிய நீண்ட தறிகளில் ஆட்கள் எம்பிராய்டரி வேலை செய்துகொண்டிருந்த கூடங்கள் இரண்டும் கண்ணிலேயே படவில்லை. குறுக்கே சுவர் விழுந்து உள் வாசலில் திரை தொங்கிற்று.

ஸேட் தன் நேரத்தில் பெரும்பகுதி புழங்கிய ரேழி அறை வாசலை இப்போது 'ஆபீஸ்' என்ற தோரணைப் பெயர், பலகையில் அலங்கரித்தது.

''ஆயியே, ஆயியே, வாருங்கள். தங்களுக்கு நான் என்ன செய்யக்கூடும்?''

ஆள் டீக்காயிருந்தான்.

தர்மராஜன் வாசலிலேயே தயங்கினார்.

''நான் முன்னால் பார்த்தபோது இங்கே எம்பிராயிடரி வேலை நடந்துகொண்டிருந்தது.''

''ஓ, அப்படியா?'' புன்னகை புரிந்தான். மீசைக் கடியில் பற்கள் அழகாய்த் திறந்தன.

''அப்புறம் பாலத்தடியில் வேண்டிய தண்ணீர் பாய்ந்து விட்டது.''

எனக்கு ''மனக்சந்த் சர்க்காரைத் தெரியும்.''

''அப்படியா? சாச்சாஜி இறந்து நான்கு வருடங்கள் ஆகப்போகின்றனவே! ஏன் வெளியவே நிற்கின்றீர்கள்? உள்ளே வாருங்கள். வந்து அமருங்கள்.''

''அதுவும் தெரியும். மிஸ்டர் மனக்சந்தைக் கடைசியாக உயிரோடு பார்த்தவன் நான்தான்.''

ஒருகணம் திகைத்து அவர் சொன்னது உள்ளே ஊறியதும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''க்யா? Wait a minute. அப்படியானால்...'' அவரைச் சுட்டிய விரலுடன் அவன் கண்கள் வினாவின.

ஆம் என அவர் தலை அசைத்தது.

(ஆமாம் ஏன் இந்தக் கிண்டியாயநம; அவருக்கே தெரியவில்லை.)

''ஹரே பகவான், How strange! சப்ராஸி! மணியின் மாஜிக்கில் ஆள் தோன்றியதும்

"தோகப் சாய் லாவ்!" ஆள் மறைந்தான்.

"மிஸ்டர், மிஸ்டர்—இருங்க நீங்க சொல்ல வேண் டாம் நானே நானே—சாச்சா எனக்கு எழுதி யிருக்காரே— Yes!" விரலைச் சொடுக்கினான்; "மிஸ்டர் தர்மராஜ், மிஸ்டர் தரம் இல்லே? Bnt you don't look that sort of Person."

"What sort of Person?"

"You know what. You are a gentleman."

தர்மராஜன் புன்னகை புரிந்தார். A butler is a gentleman's gentleman. I was cook and butler to Mr. Manekchand."

'சபாஷ்!' கலகலப்பாகச் சிரித்தான். "அதனாலேயே நீங்கள் gentlemanனு ப்ரூவ் ஆவுதே, டீ வந்திருக்கு. டீ சாப்பிடுங்க இங்கேயே செய்தது."

தர்மராஜன் ருசித்துப் பருகினார்.

"Smoke? no? Doyou mind if I do? Thanks," இழுத்து மார்புள் நிறுத்தி அனுபவித்து வெளியே 'புக் புக்'. "ஓ என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். நான் கோபி சந்த், மணக்சந்தின் சகோதரி மகன். ஏற்றுமதி இறக்குமதி பிஸினெஸ். Oh, several lines வருடத்திலே நானூறு நாள் Foreign லேதான் சுத்திட்டிருப்பேன். நாளைக்கு ஜப்பா னுக்குப் புறப்படறேன். நாளைக்கு இன்னேரத்துக்கு வந் திருந்தால் நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது. So! very interesting நான் இப்படி உங்களோடு பேசறது உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கிறதா? Not at all. நான் உலகத்தைப் பல தடவை சுத்தி இருக்கேன். என் பிஸினெஸ் என்னை எங்கெங்கோ கொண்டு போவுது, யார் யாரையோ சந்திக்க வைக்குது. மனித சுபாவத்தை உடனே சுலபமா எடுக்க முடியாது. Life ஐஸா ஹை!"

''நான் ஸேட்ஜியை கொலை செய்ததாக தண்டிக்கப் படவில்லை. திருடினதாக ஜெயிலுக்கு அனுப்பப் பட்டேன்.''

அவன் தடுத்துக் கையமர்த்தினான். ''மிஸ்டர் தர்ம ராஜ் அது என் கவலையா என்பதே யோசிக்க வேண்டிய விஷயம்.''

''நீங்கள் 'மானக்சந்த்'தின் nephew. மானக்சந்த் மிக மிக நல்ல மனிதர்'' தர்மராஜன் குரல் தழுதழுத்தது.

''I know. அத்தோடு இல்லை—ஆளை எடை போடு வதில் சாச்சா படா ஆத்மி. நீங்கள் அவரைக் கொல்ல வில்லை என்று அவருக்குத் தெரியும்.''

தர்மராஜனுக்கு மூச்சு திடீரெனத் திணறிற்று. ஜாடை காட்டினார். அவன் எழுந்து கூஜாவிலிருந்து கண்ணாடி டம்ளரில் சரித்துக்கொண்டு வந்து கொடுத்தான்,

"Take it easy sir. போதுமா? இன்னொரு டீ. Fanta? if you don't mind a sip of Brandy?"

தர்மராஜன் வேண்டாம் என்று தலையை அசைத்தார். ஆனால் கண்ணுக்குள் வீசிய நிலாக் குளுவில் உலகமே அழகாகத் தோன்றிற்று.

மன்னிப்பு. மன்னிக்கப்பட்டவனையும் மன்னிப் வனையும் ஒரே சமயத்தில் ஆசிர்வதிக்கிறது.

மனத்தில் இப்படி ஒரு வாக்கியம் ஓடிற்று.

''சாச்சா இறந்துபோன தகவல் வ்ளாசம் வ்ளாசமா தேடி என்னிடம் சேர்ந்தபோது நான் ஆம்ஸ்டர்டாம்லே இருந்தேன். ஒரு டையமண்ட் டீல். தலை போற சமாச் சாரம். ஆமாம் அசலா அப்பிடித்தான். அதெல்லாம்

பெரிய விஷயம். நியாயமெல்லாம் ஒரு மாதிரியாயிருக்கும். கேக்காதீங்க, நானும் சொல்ல மாட்டேன்.'' சிரித்தான். ''அன்னி ராத்ரியியே, இத்தாலிக்கு ஃப்ளைட் சரி. சாச்சா செத்துட்டார். நான் வந்து என்ன செய்யப் போறேன். தாத்தாவுக்கு நான்தான் மனுஷன். வேறே கிடையாது. நான் வர முடியாது. நான் வராமே என் Family வரமாட்டாது. எல்லாம் யோசனை செய்து, எங்கள் 'ஸங்'குக்கு—அவங்க கிட்டிருந்துதான் தந்தி வந்தது—பதில் தந்தி அடிச்சுட்டேன். பாடியை டெலிவரி எடுத்து cremation செய்யும் படி. எல்லாம் என்ன பைசாதானே! அவங்களும் செய்துட்டாங்க.

''சாச்சாவின் கூலிக்காரங்களுக்கு உடனே கூலி கொடுத்து பிஸினெஸ்ஸை நிறுத்திடச் சொல்லிட்டேன். ஒரு மாஸம் பொறுத்து சாச்சா வக்கீலிடமிருந்து லெட்டர் வ்ளாஸம் தேடி வந்தது. சாச்சா உயிலுக்கு நான் தான் executor. நேரில் வந்து பார்க்கவும். அதுக்கப்புறம் எனக்கு. அஞ்சி மாசம் ஆச்சி. மெட்ராஸ் வரத்துக்கு. Big business is bad business. மனிதனாயிருக்க நேரம் கிடையாது. Riding a tiger you know'' கைகளை விரித்தான்.

''இன்னொண்ணு. சாச்சாவுக்கும் எனக்குங்கூட அப்படி ஒண்ணும் ரொம்ப 'டச்' கிடையாது. அவர் என்னவோ கடிதாசி போடுவார். நான் பதில் போட வேணாமா; எனக்கு நேரம்? ஒரு கடிதாசு என்னைத் தேடி வந்து சேரத்துக்குள்ள அதில் விஷயம் Fazali ஆயிடும். அப்புறம் ஒத்தருக்கொருத்தர் தீவாளி greetings ஓடு சரி.

''சரி மதறாஸ் வந்து, வக்கீலைப் பார்த்து உயிலையும் பார்த்தேன். சாச்சா ஏதோ கண்டிஷன் போட்டிருக்காரு. இந்த இடத்தை Hospital ஆக்கணும். எங்கள் ஜாதி மனுஷங்களுக்கு free treatment இல்லே, Concessions.

மத்தவங்களுக்கு reasonable charges, full time doctors, visiting specialists வேறே தவிர, establishment. சாச்சா ஆசைக்கு அவர் வெச்சிருந்த funds பத்தாது. கீழே பத்து beds. மாடியிலே operation theatre, office மேல் மாடியிலே 10 Beds, சாச்சா ஆசையிலே எழுதிவிட்டுப் போயிட்டாரு. practical side அவருக்குத் தெரியல்லே. அதனால் விட்டுடலாமா? தவிர ஆறு மாஸத்துக்கு ஒரு வாட்டியேனும் வந்து சரியா நடக்குதான்னு 'செக்' பண்ணியாகணுமாம். இந்த Projectக்கே Business side சரியாயில்லை. இல்லவே இல்லைன்னு சொல்லலாம். சுத்தப் பைத்தியக்காரத்தனம். பைஸா waste. அதைவிட என் நேரம் waste.

'சாச்சா உயில்லே கண்டிஷன் போட்டு, ஆறு மாசத்துக்கொருவாட்டி மதறாஸ்லே நிறுத்தி வெக்கற நேரம் எனக்குக் கட்டுப்படியே ஆவல்லே. இங்கே நான் தங்கற நாளுக்கு எனக்கு இன்னொரு இடத்துல நஷ்டம் ஆகிக் கொண்டிருக்கிறது. இங்கே இந்த தர்மம் ஓடற நஷ்டம் வேறே. ஆனால் சாச்சா நல்ல மனுஷன். எனக்கு சாச்சாவாலே நல்ல மதிப்பு. என்னை businessலே ட்ரையின் பண்ணினதே சாச்சாதான். நான் இப்ப இந்த நிலையில் இருக்கிறேன்னா அவராலேதான். இங்கே நஷ்டம் ஆனால் ஆயிட்டுப் போவுது. நான் தனியார் charities செய்யப் போறேனா? ஏதோ இந்த ஆஸ்பத்திரி பேர்லே கையை விட்டுப் போனால் போவட்டுமே! என்ன சொல்றீங்க? எல்லாம் கணக்கிலே பேரை மாத்தி எழுதற சமாச்சாரம்தானே! எங்கேயும் எப்பவும் net position-ஒரு ஆடு, ஒரு புல்லுக்கட்டு, ஒரு தாம்புக் கயிறு—இது ஒரு மதறாஸிக் கதைதான். சாச்சா சொன்ன கதை. மனசிலே நல்லா பதிஞ்சிடுச்சி. ஃபிலாசஃபி இருக்குது அதிலே. மிஸ்டர் தர்மராஜன், நான் ரொம்ப நாழி பேசிட்டேன். ஆனால் யாரிட்டியானும் சொல்லியாவணுமில்லே?

''சாச்சா உயிலோடு சேர்த்து ஒரு கடிதாசி எழுதியிருக்காரு. அதிலே உங்களை சொல்றார் 'நீங்கள் அஞ்ஞாதவாஸ் அர்ஜுன். நீங்கள் அவருடைய ப்ரதர்—' இப்படியெல்லாம் எழுதியிருக்காரு. அவர் எப்படி அப்படி ஒரே அடியா bowl over ஆயிட்டார் தெரியல்லே. ஆனா சாச்சா ஒரு Peculiar man. அவர் உங்களிடம் சொன்னாரா? அவருடைய சம்சாரம் சின்ன வயசிலேயே முதல் டெலிவரியிலேயே இறந்துட்டாங்க. குழந்தையும் போயிடிச்சி. இந்த ஆஸ்பத்திரி ஐடியாவுக்கு அவர் வாழ்க்கையில் அந்த சம்பவம்தான் காரணம். சாச்சா அப்புறம் கலியாணம் செய்யவேயில்லே. அதென்ன ஆண்களுக்கு ஒரு நாயம், பெண்களுக்கு ஒரு நியாயம்? அவங்களுக்கு ஏக் பதின்னா எனக்கு ஏக் பத்னின்னு பிடிவாதமா இருந்துட்டாரு. எப்படியிருந்தாரோ?

''என்னைப் பாருங்க. எனக்கு ஏழு கொழந்தைங்க. நாலு ஆம்புள்ளேப் பசங்க. மூணு பொம்புள்ளேப் பசங்க. எட்டாவது Carrying. இது மாசம். அதனாலதான் நான் இந்தியா வந்திருக்கேன். எட்டாவது புள்ளையாப் புறக்கக் கூடாதேன்னு கவலையாயிருக்காங்க. என் சம்சாரத்துக்கு நாலு ப்ரதர்ஸ். பொண்ணாத்தான் பொறக்கணும்னு கட்டாயமா இருக்காங்க. ஆனால் நம் இஷ்டத்திலியா இருக்குது?'' உதட்டைப் பிதுக்கினான். கூடவே கண்ணைச் சிமிட்டினான். "But the flesh is weak." எல்லாரும் சாச்சாவாக முடியுமா? அதனாலேயே எனக்கு சாச்சா மேலே மரியாதை. அவர் இஷ்டப்படி நடக்கணும்னு ஒரு பயம்கூட. நானே பேசிகிட்டிருக்கேன். என்ன காரியமா வந்தீங்க? உங்களுக்கு நான் என்ன செய்ய? உங்கள் பெண் In the family way? ஏன் தூக்கிப் போடுது? Any other trouble? Don't worry, உங்களுக்கு treatment இலவசம். சாச்சா இஷ்டம் அப்படித்தான் இருக்கும்.''

தர்மராஜன் 'குப்'பிட்ட நெற்றியைத் துடைத்துக் கொண்டார்.

''அப்படி எல்லாம் இல்லை. ஏதோ பழைய நினைப்பில் வந்தேன்.''

''Nice, Thank you for சாச்சா. Incidentally, உங்கள் சமாச்சாரம்...'' புது சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். ''நான் அதை யோசிக்காமல் இல்லை. இங்கே வந்ததும் முதல் வேலை சாச்சா பிஸினெஸை windup செய்தேன். இந்த நகை மேலே அட்வான்ஸ்—ஆளுங்களைக் கூப்பிட்டு கடனை வசூல் பண்ணி, நகைகளைத் திருப்பினேன். இந்த Jewel Loan businessஐ சாச்சா business ஆ செய்யலை. ரொம்ப தெரிஞ்சவங்களுக்கு ஒத்தாசை மாதிரி. லைசன்ஸ் கிடையாது. அது சாச்சா மேலே தனி கேஸ். ஆளேயில்லை இப்போ என்ன பண்ண முடியும்? அது கிடக்கட்டும். இப்ப நீங்க சம்பந்தப்பட்ட கேஸ்லே advance நிக்குது. நகையைக் காணோம். ஆனால் நகைக்கு சொந்தக்காரர் வருவாங்களா? இன்னிக்கு இதுவரைக்கும் அவங்க வரல்லேன்னா என்னாச்சு? வாரிசு வரமாட்டாங்களா? எனக்கு ஒரு moral responsiblity இருக்கே. pro-note காலாவதி ஆயிடுச்சி. ஆனால் நகை, புஸ்தகத்திலே இருக்குது. இருப்பிலே இல்லை.

''நகை உங்ககிட்டே இல்லை, உங்களை X-ray கூடப் பண்ணியிருக்காங்க உங்கள் அறையை Search பண்ணியிருக்காங்க. அது அனாவஸ்யம். பூரா போலீஸ் காவலில் இருந்திருக்கீங்க. யாரேனும் உடந்தையிலே இந்தத் திருட்டு நடந்திருக்குமான்னா, அதுக்கும் நீங்க வெளியே நகையை hondover பண்ற மாதிரி, ஜன்னல் சௌகரியமாயில்லே. எல்லாம் wire netting. ஜன்னல் திறக்கற மாதிரியில்லே. நகை எங்கேதான் போச்சு?''

தர்மராஜனுக்கு சுவாரஸ்யமாயிருந்தது. காத்திருந்தார்.

"நான் சொல்றேன். நகை திருட்டே போவல்லே."

"என்னது!" தர்மராஜன் தன் அதிர்ச்சியை மிக்க சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்.

"ஆமாம் சாச்சாவே யாருக்கோ கொடுத்திருக்காரு."

"ஏன்? எதற்கு?"

"அப்பிடி வாங்க சொல்றேன். ரொம்ப தோஸ்த் யாராச்சும் வந்து கேட்டிருப்பாங்க.

"கோயமுத்தூரிலே ஒரு கண்ணாலம். சம்சாரம் போவுது. அதன் கழுத்திலே ஒண்ணுமில்லே. வெக்கப் படறா. கஷ்டப்படறா. ஆனால் கல்யாணத்துக்குக் கட்டாயம் போயே ஆவணும். ஒருவாரம் ஊரிலே திரும்பிக் கொண்டுவந்து கொடுத்திடறேன். இப்போ புரியுதா? இது மதறாஸ் மட்டும் பழக்கமில்லை, ஊர்லே உலகத்திலேயே எங்கேயுமே நடக்குது, கடன் வாங்கின நகையிலே 'ஷோக்' தன்னது மாதிரி காட்டிக்கறது. மாப்பசான் 'Necklace' கதை படிச்சிருக்கீங்களா?

"இதே நகையை Bankலே அடமானம் வெச்சிருந்தால் 'இந்த ஷோக்' முடியுமா? ஆனால் இங்கே சாச்சாவே ராஜா. சாச்சாவே மந்திரி. சாச்சாவைக் கேக்கறதுக்கு யார்? யார் நகையோ எடுத்து யாருக்கோ கொடுத்துட்டார். ஒரு ரொடேசன்தானே!

"ஆனால் என்ன ஆச்சி? நகையைக் கடன் வாங்கின ஆசாமி ஊரிலேருந்து இல்லை எங்கிருந்தோ நகையைத் திருப்பிக் கொடுக்க காலையோ மாலையோ வந்தா சேட் வீட்டுலே கும்பல். போலீஸ் பந்தோபஸ்த். சேட்ஜி— திடீர்னு மர்கயா. ஆள் கஸ்டடியிலே. வந்த ஆள் பயந்

திருப்பான். தன்மேலேயே சந்தேகம் வந்துட்டால்? போலீஸ் விசாரணை. அதைத் தொடர்ந்து என்னல்லாமோ...அப்படியே back out ஆயிருப்பான். அப்புறம் பார்த்துக்கலாம். காத்து அடிச்சுட்டு ஓயட்டும்னுதான் முதலில் எண்ணம் இருந்திருக்கும். அப்புறம் நாளாக ஆக ஸேட் தன்கிட்டே கொடுத்ததுக்கு சாட்சி ஏது? temptation ஆளை நல்லவனாக்கறதோ கெட்டவனாக்கறதோ opportunity. ஆள் போனவன் போனவன்தான்.''

அடங்கினான். இருவரும் சற்றுநேரம் அவரவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். 'ஆனால் இதிலே ஒண்ணு இடிக்குது.' சிகரெட்டை ash tray இல் நசுக்கினான்.

தர்மராஜன் தலைநிமிர்ந்தார்.

''நாய்க்கு மருந்து கொடுத்திருக்குது. அங்கே நீங்க picture இலே வந்துடறீங்க. அது எப்படின்னு நான் கேட்கப் போறதில்லே. எல்லாம் ஏற்பாடா செஞ்சுட்டுக் கடைசி நிமிசத்திலே funk ஆகியிருக்கலாம். என் angle படி; ப்ராக்டிகலா உங்க மேலே கேஸே இல்லேன்னு சொல்லுவேன். இல்லாட்டி கேஸ் படா Weakனு சொல்லுவேன். நியாயம், சட்டம், உண்மை எல்லாமே தனித்தனி factors. கோர்ட்டிலே angles and argumentsதான் தீர்ப்பைத் தீர்மானம் செய்யுது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன? Participate பண்ணவனுக்குத்தான் தெரியும்.

''இந்தக் கேசிலே நீங்கள் குற்றவாளியா இல்லையா எனக்கு சம்பந்தமில்லை. உயில்படி சாச்சா விவகாரங்களில் நான் சம்பந்தப்பட்டவரை, நகை கணக்கிலே காட்டுது. ஆனால் இருப்பில் இல்லை. நகைக்கு சொந்தக்காரரோ, வாரிசுதாரரோ வந்து நகையைக் கேட்டால்—? அதுதான் என் Problem.''

தர்மராஜன் ஆவலுடன் காத்திருந்தார். 'என்ன செய்யப் போறீங்க?' கேள்வி நாக்கில் துடித்தது. சிரமப் பட்டு அடக்கிக் கொண்டார்.

"நான் ஒரு முடிவு செஞ்சுட்டேன். ஆள் வந்து கேட் டால் நகைக்குத் தன் சொந்தத்தை prove செய்த பிறகு நகைக்கு ஒரு மதிப்பு போட்டுக் கடனைக் கழிச்சுகிட்டு Balance இந்தா. எனக்கு செத்த யானையேதான் வேணும்னா—அதுவும்—மதறாஸ் கதைதான். உன்னால் ஆனத்தைப் பார்த்துக்கோ. வேறு என்ன நான் செய்ய முடியும்?"

மறுபடியும் மௌனத்தின் தேக்கம். தர்மராஜனுக்குப் பெரும் இருளில், ஊசிமுனை சந்துவழி வெளிச்சத்தின் தூலம் அடித்தாற்போல் இருந்தது. ஆனால் என்ன வெளிச்சம் என்று புரியவில்லை. பெருமூச்செறிந்தார்.

"என்ன எழுந்துட்டீங்க?"

"போக வேண்டாமா? உங்கள் நேரத்தை ரொம்ப வாங்கிக்கொண்டு விட்டேன்."

"ஒரு நிமிஷம் பொறுங்க. I have something for you."

ட்ராயரிலிருந்து செக் புக்கை எடுத்துப் பரபரவென்று எழுதிக் கிழித்து நீட்டினான்.

அவருக்குப் புரியவில்லை. அவர் வாங்கிக் கொள்ள வில்லை. 'என்ன இது?' திகைத்தார்.

"பயப்படாதீங்க. வாங்கிக்கங்க. உயிலோடு சாச்சா எனக்கு லெட்டர் வெச்சிருந்தாரே அதிலே உங்களுக்கு 2000/ கொடுக்கும்படி—what is the matter?"

அவன் பிடித்துக் கொண்டிராவிட்டால் விழுந்திருப் பார். தாங்கிக் கொண்டுபோய் சோபாவில் அமரச் செய் தான்.

''என்ன இவ்வளவு weak feeling ஆசாமி; நீங்களா குற்றம் செய்திருப்பீங்க?'' சிரித்தான்.

''மிஸ்டர் கோபிசந்த்''—இடைமறித்தான்.

''இது சாச்சா இஸ்டம் அதை நிறைவேத்தறேன். எனக்கென்ன கணக்கிலே ஏறப்போவுது.''

''மிஸ்டர் கோபிசந்த், உங்கள் பிரியம் கொடுத்த துணிச்சல்லே பேசறேன். எனக்கு வேலை வேணும். அக்கௌண்ட்ஸ் எழுதுவேன், பார்த்துக் கொள்வேன். இங்கே இந்த ஹாஸ்பிடல்லேயே என்னுடைய back ground இலே இங்கேயே நான் வேலை கேட்பது தப்பாவு மிருக்கலாம். ஆனால் எனக்கு வேறு வழியும் இல்லை. மனக்சந்த் ஸர்க்கார் என்னை நடத்திய விதத்துக்கு என்னுடைய பரிகாரம் பிராயச்சித்தமாயிருந்தாலும் இருக்கட்டும்.''

அவன் தன் மீசை முனையை யோசனையாகத் திருகிக் கொண்டே ''நீங்கள் இப்படிக் கேக்கறதே சாச்சாவோட இஷ்டமாயிருக்கலாம். யார் கண்டது? சாச்சாவின் இஷ்டத்துக்கு மாறாகப் போகக் கூடாது. எனக்கும் ஒரு ஆள் தேவைப்படுது. ஒரு பதினைந்து நாள் பொறுத்து வாங்க. நிச்சயமா வந்து பாருங்க. ஏதாச்சும் ஏற்பாடு செய்வோம்.''

மனக்சந்த் ஸர்க்கார் படத்திலிருந்து சிரித்தார்.

பழிவாங்குவதில் இது ஒரு தினுசு.

'இன்னா செய்தாரை ஒறுத்தல்...'

* * *

மனக்சந்த் வீட்டுக்குப் போனதால் ஏதோ துலக்கம் தெரிந்த மாதிரியிருந்ததே, அது என்ன? கடனைத் திருப்பிக் கேட்க முடியாது. கோமதிக்கு என்னால் என்ன சஹாயம்

செய்ய முடியும்? அதைச் செய்துவிட்டுக் கிளம்பிவிட வேண்டும். அவள் போய்க் கேட்டால், கடன் போக நகை மதிப்பீட்டில் மிச்சம் கிடைக்கும். கிடைத்தவரை லாபம். நகை வேறு குத்துக்கல்லாய் அப்படியே இருக்கிறது. ஆனால் இந்த டபிள் ப்ரைஸ்—நியாயம் அதில் என்ன இருக்கிறது? இப்படி நினைப்பதே என் புத்தியின் அழுக்குக்கு அத்தாட்சி.

ஆனால் என்றேனும் நகையை சொந்தக்காரிக்கு திருப்பிவிட வேண்டும். அந்தப் பொறுப்பு என்னை விஷமாய்த் தீய்க்கிறது நான் எப்போ நகையை வெளிக் கொண்டு வந்தாலும் புதைவாணம் கிளம்பத்தான் போகிறது. ஸேட் சேஃபில் காணாமல் போன நகை கோமதியிடம் எப்படி வந்தது? இதைக் கூர்ந்து குத்தியாக கவனிக்க யாரேனும் இருப்பான். நகையின் ஜாதகத்தையே படிக்கிறவன்களுக்கு குறைச்சலே இல்லை. அப்படிப் புதைவாணம் கிளம்பும்போது கேஸ் புது விதமாக, புது முகத்துடன் எப்படித் திறந்து கொள்ளுமோ? அப்போது உண்மையில் வெளிச்சம் இல்லை. மூட்டம்தான். ஒன்றும் செய்வதற்கில்லை. தூங்குகிற நாயைத் தட்டி எழுப்பாதே. என் பிழைப்பு என்ன பிழைப்போ?

மனக்சந்த் நீங்கள் சுவர்க்கத்திலிருந்து பிச்சையிடுகிறீர்கள்.

நான் செய்த தீம்புக்கு என்ன பிராயச்சித்தம்?

கண் துளும்பிற்று.

6

மாலை கோமதி ஆபீசிலிருந்து திரும்பியபோது அவளுடன் ஒரு ஆள் இருந்தான்.

"ஸார் Meet husband mine!" பேச்சைப் போலவே நாடக பாணியில் இரு கைகளையும் தட்டு சுற்றுவதுபோல் வீசி விரித்தாள்.

"நமஸ்காரம் "

ப்ரஸாந்த் ஓடிவந்தான். "Daddy, என்ன கொண்டு வந்திருக்கே?"

"Sorry ப்ரஸாந்த் நினைப்பே இல்லையே!" ஆனாலும் கை எதையோ தேடலில் ஜேபியைத் தொட்டுக் கொண்டது.

'அசட்டு ப்ரஸாந்த், என்னிக்குத்தான் தெரிஞ்சுக்கப் போறியோ?' கோமதி தன் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து "இந்தாங்கோ. நீங்களே கொடுங்கோ. நீங்கள் கொடுத்ததாகவே அவன் நினைச்சுக்கட்டும்."

அவள் ஏளனத்தைப் பொருட்படுத்தவே இல்லை அவள் கணவன்.

பொட்டலத்தைப் பற்றிக்கொண்டு பையன் சிட்டாய்ப் பறந்தான்.

''சௌக்யமா ஸார்?'' அவன் சுற்றுமுற்று நாற்காலி தேடி, காணாமல் எதிரே தரைமேல் சப்பணமாக உட்கார்ந்தான்.

''நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்?'' புன்னகை புரிந்தார்.

''என்ன என்னை 'நீங்கள்' என்கிறீர்கள்! கோமதி 'வா' 'போ' ஆனால் நானும் உங்களுக்கு அப்படித் தானே?''

''Thank you.''

''பேசிண்டு இருங்கோ காப்பி போடறேன்'' கோமதி உள்ளே போனாள்.

''ஸார். ஒன்று சொல்லட்டுமா? நீங்கள் நல்லாயிருக் கீங்க. தலை மயிர் இன்னும் அடர்த்தியா இருக்குதே! என் வயதுக்கு நான் எப்படி ஆயிட்டேன் பாருங்க.'

ஆமாம், விழியோரங்களில் சுருக்கம் விழுந்திருந்தது. கன்னங்கள் தளர ஆரம்பித்து விட்டன. தலை மயிரின் பின் வாங்கலில் நெற்றிமேடு உயர்ந்து அகலமாகிக் கொண்டிருந்தது. அப்படியும் அந்த ஆளிடம் ஒரு வசீகரம். நல்ல சிவப்பு. முகத்தின் இறுக்கம் தளர்ந்து போனதால், முகம் ஒரு முகமூடி உணர்வைத் தூண்டியது.

வெட்கத்தில் சிவப்பாகிவிட்ட முகத்தை தர்மராஜன் துடைத்துக் கொண்டார். 'நாம் அழகைப் பற்றிப் பேசிக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அதற்குத்தான் பெண்கள் இருக்கிறார்களே?'

''ஆனால் அதிலும் கோமதி wanting.''

''எதில், அழகிலா?''

''ஐயையோ அவள் காதில் விழப் போறது.'' பொய்க் கிலியில் அவன் பதுங்கினான். ''I mean கோமதிக்கு அழகு பண்ணிக்கொள்வதில் அக்கறையில்லை.''

'என்ன சொல்லிட்டிருக்கேள்?' கேட்டுக் கொண்டே கோமதி சமையலறையிலிருந்து வந்தாள் "ஒண்ணுமில்லே. கோமதி தன் appearance லே கவனம் செலுத்தறதில்லே... கொஞ்சம் மேக்-அப் பண்ணிண்டால் தூக்கி அடிச்சுடு வாள் என்கிறேன்."

'மத்ததெல்லாம் கிடக்கட்டும். கிழவியைத் தூக்கி மனையில் வை' திரும்பவும் கோமதி சமையலறைக்குள் விரைந்தாள்.

"நான் சொன்னது சரியாப் போச்சா, பார்த்தேளா?"

தர்மராஜன் சமாதானப்படுத்துகிற மாதிரி "கோமதி வேலையில் கெட்டிக்காரி. மிகவும் நல்ல பெண்."

"ஆனால் மூக்குக்குமேல் அடிக்கடி கோபம்"—

தர்மராஜன் முறுவலித்தார். "யாருக்குக் கோபம் வர வில்லை? அவளுக்குச் சிரமங்கள் கூடத்தான். இல்லையா?"

அவள் கணவன் தயங்கி, தக்க பதிலுக்குத் தேடிக் கொண்டிருக்கையில் கோமதி இரண்டு கைகளிலும் ஒரு தட்டை ஏந்திக்கொண்டு வந்தாள். ட்ரேயில் மூன்று தட்டுகளும் மூன்று காப்பிகளும்.

ஆளுக்கொரு தட்டைக் கொடுத்துவிட்டு அவளும் உட் கார்ந்தாள்.

"ப்ரஸாந்த்?"

"போணியே அவன்தான். இன்னிக்கு டிபன் வரும் போதே கடையில் வாங்கி வந்துட்டேன். "சும்மா லைட்டா Snacks. ராத்திரி சமையலை விவரமா வெச்சுப்போம்."

"போம்னா என்ன அர்த்தம்? மாமாவும் சேர்ந்து பண்ணப் போறாரா?"

"Shut up!"

''ஏன் கோமதி நான் பண்ணறேனே! எனக்கும் கை துருதுருக்கறது.''

(ஆனால் ஏன் இப்படி வெடிக்கிறாள்)

''Nothing doing.''

''ஸார்''—அவன்: ''ஒரு நாலு வருஷம் முன்னால் ஒரு நாள் ராத்ரி நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து போனீர்களாம். எனக்கு உங்களை சந்திக்க அதிர்ஷ்டமில்லை. ராத்ரி ஒரு மணிக்கு வந்தேன். உங்கள் சமையலைச் சாப்பிடும் பாக்யம் எனக்குக் கிடைச்சது. ப்ரஸாதம்தான். ஆனால் இன்னும் மறக்கவேயில்லை. மறக்க முடியாது. அன்னிக்குத்தான் ஒரு உண்மை தெரிஞ்சுண்டேன். Good food can be religion.''

''நீங்கள் ஸாருக்கு என்ன வேணுமானாலும் சிப்பக் கட்டு கட்டுங்கள். நான்தான் சமைக்கப் போகிறேன். இஷ்டப்பட்டால் சாப்பிடுங்கோ...''

''இல்லாட்டா போங்கோ அதானே! இந்த ஷரத் எல்லாம் எனக்குக் கட்டுபடியாகும் நிலையிலா இருக்கேன்! போட்டதை சாப்பிடுகிறேன், அம்மா தாயே...''

'வாஸ்தவம்தான். தேதிதான் மாஸம் பாதி தாண்டியாச்சோன்னோ...முதல் வாரம் உங்களுக்கு இங்கே வரத் தோணுமா? வந்தால் ப்ரஸாதத்துக்கு ஏதேனும் வாங்கியாகணுமே!'

''நீ சொல்வது அத்தனையும் சரி, அதுக்கு மேலேயும் சரி. இந்த மாஸம் நெருக்கடி ஜாஸ்தி. நீதான்—உங்கள் பஞ்சப் பாட்டை வேறு எங்கானும் போய்ப் பாடும். ஓயாத பாட்டு. வேலையில் இருக்கேள் இல்லையா?''

''அதென்ன அப்படிக் கேட்டுட்டே? என்னவோ தொங்கிண்டிருக்கேனோ பிழைச்சேன்.''

''இல்லை நான் பிழைச்சேன் பிழைச்சமட்டுக்கும்...'' அவள் கண்கள் கொதித்தன.

[ஏன் இவ்வளவு கொடுமையாகப் பேசுகிறாள்? இவன் ஏன் இத்தனையும் கேட்டுக் கொள்கிறான்? இவர்கள் ஏன் என்னை சாக்ஷிப்படுத்துகிறார்கள்?]

''இவள் கோபத்தைப் பார்த்தேளா ஸார்? நான் என்ன சொன்னேன்? ஆனால் நீங்கள் சொன்னமாதிரி கோமதி நல்ல பெண். வெகுளி. அவ்வளவுதான். சுபாவத்தை மாற்ற முடியுமா? எல்லாரும் ஒரு குணமாயிருந்தால் அப்புறம் வாழ்க்கையே எதற்கு? ஆனால் கோமதி நீயே பார்க்கப் போறே. என் காலம் இப்படியே இருக்காது. ஒரு நியூமராலஜிஸ்ட் இன்னிக்கு சொன்னான். என் அதிர்ஷ்ட எண்ணிற்கு ஏற்றபடி—என் பேரிலே ஒரு சின்ன change பண்ணிட்டேன்னா—ஒரு N சேர்க்கணுமாம். எப்படி சேர்க்கறதுன்னுதான் யோசிச்சிண்டிருக்கேன்... அப்புறம் கூரையைப் பிச்சுக்கப் போறது.''

''அந்த நாள் வந்தால் அதற்கு நீங்கள் ஒண்டிதான் சாக்ஷியாயிருக்கப் போறேள்.''

''ஏன் நீ பார்க்கமாட்டியா? கண்ணை மூடிண்டிடுவையா?''

''ஆமாம். ஒரேயடியா மறுபடி திறக்காது. ஏன் இந்த வெட்டிப் பேச்சு? நான் என் வேலையைப் பார்க்கிறேன்.''

அவள் போனபிறகு மோனத்தை அவன்தான் கலைத்தான்.

'அவளைச் சொல்லிக் குற்றமில்லை அவளுக்கு நான் சரியாயில்லை.'

அந்தக் குரலில் வருத்தம் தெரிந்தது.

"விஷயம் முற்றிப்போச்சு. நான் எவ்வளவு உருப் படப் போகிறேன் என்று அவளைவிட எனக்கே நல்லா தெரியும். But I Love her terribly But I can't do anything about it or about anythiug." அவன் கனைத்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"Mind if I Smake?" அவன் கைகள் அவன் ஜோபியுள் துழாவிற்று "I mind!" உள்ளிருந்து உர்த்தண்டமாகக் குரல் வந்தது. "ப்ரஸாந்த்துக்கு உங்களால் ஆன பாட மாக்கும்!"

"Yes, you are right." அவன் எழுந்தான். "ஸார் நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்."

அவன் சரிந்த கட்டிடம்போல போகையில் பரிதாப மாக இருந்தது.

ஈஸிசேரிலிருந்து எழுந்து சமையலறைக்குச் சென் றார். அடுப்பில் கிளறிக்கொண்டிருந்தாள்.

"ஸார் வாங்கோ. முருங்கக்காய் சாம்பார் ஸார்."

"கோமதி ஏன் இப்படியெல்லாம் பேசறே, அதுவும் என் எதிரே?"

"ஸார், ரஸத்திலே, மிளகு சீரகத்தை நுணுக்கித் தாளிச்சுக் கொட்டப் போறேன்."

"கோமதி..."

அவசரமாக, "ஸார் உங்களுக்கு உருளைக் கிழங்கு தயிர்ப்பச்சடி பிடிக்குமோ?"

"கோமதி..."

"இதுதான் புரியல்லே ஸார். ஒரு நல்ல சமையல்னா உருளைக்கிழங்கு மசாலா கறியில்லாமல் அது நல்ல

சமையலில் சேர்த்தியாயில்லை. அதென்னவோ மனுஷா ளுக்கு அப்படி ஒரு பழக்கமாகி விட்டது. Silly. பீன்ஸ் இல்லையா, காரட் இல்லையா, ஏன் வாழைக்காய் வதக்கல் எந்த விதத்தில் உருளைக்குக் குறைச்சல்?''

''கோமதி நீ இப்படிப் பேசினால் புருஷன் பெண்சாதி விஷயம் தலையிட வேண்டாம் என்றுதான் அர்த்தம்.''

''ஸாரி ஸார், ஸார் சொல்லணுமா ஸார்?'' சிரித்தாள். அந்த சிரிப்பில்தான் எத்தனை துக்கம்?

தன் ஏளனம்! கூடவே உள்ளோடும் ஒரு அச்சச்சரடு Hysteria?

''கோமதி ப்ளீஸ்...!''

''ஸார் என் நிம்மதியைக் கெடுக்க இங்கே யார் வரச் சொன்னது. தெருமுனையில் திருட்டு முழியை முழிச்சுண்டு காத்திருக்கான். ஸாரி—உங்களுக்காக—காத்திருக்கார்—''

''இதோ பார் கோமதி.''

''கொஞ்சம் எனக்கு செவி கொடுங்கள். அப்புறம் நீங்கள் என்ன வேணுமானாலும் சொல்லுங்கோ. ஆனால் எதுவும் என் காது வாங்கிக்கப் போறதில்லை. இவர் விஷயத்தில் எனக்குக் காது என்ன, மூளையே வாங்கிக் கொள்ள மறுக்கிறது. ஸார் நான் ரொம்பப் பட்டு விட்டேன். இந்த மனுஷன் உண்மையில் மாஞ்செடி முளைக்கச் செய்யறமாதிரி. ஒரே நிமிஷத்தில் திருந்தினால் கூட நான் நம்புவது, இவரை ஏற்றுக்கொள்வது என்பது முடியாத காரியம். இனி நீங்கள் என்னைத் திட்டுங்கள். காத்துக்கொண்டிருக்கேன்.''

அவர் வேறு பேசவில்லை. தரைமேல் குனிந்த தலையுடன் தன்னிடத்துக்குத் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டார்.

அப்போதுதான் தனக்கு முன்னால் தன்னிடத்தில் அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்தார்.

''ஹல்லோ...கெட்டப் பழக்கம் ஸார். Worriesஐ மறக்க புகைக்க ஆரம்பிச்சு; அப்புறம் Smoking wo.ry யோட worrierஆ சேர்ந்துபோச்சு. வேடிக்கையாயில்லே? அந்த நினைப்பு வந்துட்டா, வழியிலே எவன் வந்தாலும் சரி, பீடியானாலும் கொடுன்னு கேட்கத் தோணுது. இதிலே இன்னொரு தொந்தரவு ஸார். சிகரெட்டோடு போவல்லே, கூடவே தீப்பெட்டி ஏமாத்தாமல் இருக்கணும். இருக்கற கடைசிக் குச்சி சிகரெட்டைப் பத்தாமலே பத்தி எறிஞ்சு போச்சுன்னா அப்போ யார் எதிரே வந்தாலும் கொலையே செய்துடலாம் போலத் தோணும். நீங்கள் lucky man. உங்களுக்கு ஒரு பழக்கம் கூடக் கிடையாதா? Life dull ஆயிருக்குமே. Wrong English, but right meaning.''

அவரால் குஞ்சிரிப்பு சிரிக்காமலிருக்க முடியவில்லை.

''ஆனால் என் வாழ்க்கை என்ன லச்சணத்தில் இருக்கு. எனக்கும் ட்ரபிள். எல்லோருக்கும் ட்ரபிள். வர வர self pity அதிகமாறது ஸார். மோசமான நிலைமை I have not been a good husband I know. கோமதிக்கு நான் லாயக்கில்லை. கத்தறாளே ஒழிய என்னை கைவிட மாட்டாள். ஸார் ஒரு விஷயம் உங்களைப் பிடிச்சிருக்கு. கோமதி எங்களைப் பற்றி உங்களிடம் சொல்லாமல் இருந்திருக்க மாட்டாள். அதனால் என்னைப்பற்றி உங்களுக்கு நன்னாகத் தெரியும். ஆனால் நான் இங்கே வந்து இன்னேரமாச்சு. நீங்கள் எனக்குப் புத்தி சொல்ல ஆரம்பிக்கக்கூட இல்லை. எல்லா பெரியவங்களும் அவங்க பெரிய தனத்தனத்தைப் புத்தி சொல்றதுலே காட்டிப்பாங்க. சொல்றதுக்கென்ன நோவுமா? ஆனால் பக்கத்தில் இருந்து கையைப் பிடிச்சு கரையேத்த சொல்லுங்க; எட்டிப் போயிடுவாங்க. ஆனால் நானும் கரையேறப் போறதில்லே.''

"ப்ளீஸ் பேச்சை மாற்றுவோம். நான் இங்கே விருந்தாளி. நான் தங்கும் எல்லையை எப்பவோ மீறிவிட்டேன்."

"சேச்சே நீங்க அப்படி சொல்லக்கூடாது. நானும் அப்படி நினைக்கல்லே. நீங்கள் இங்கே இருப்பது வீட்டுக்குப் பெரியவாளா, என்னுடைய அதிர்ஷ்டம் என்றே நினைக்கிறேன்."

அவர் வாளாயினார். இது என்ன வஞ்சப் புகழ்ச்சியா?

"தட்டுப் போடலாமா?" முன்றானையால் முகத்தைத் துடைத்தபடி கோமதி வந்தாள்.

பசியின் சிறலை அவர்கள் அப்போதுதான் உணர்ந்தனர்.

பரிமாறிக்கொண்டே கோமதி, "சாப்பாட்டுக்குப் பிறகு பத்து மணிக்கு ஒரு Surprise. Husband mine, உங்களுக்கு இஷ்டமிருந்தால் நீங்களும் பங்கு கொண்டுவிட்டுப் போகலாம். ஆனால் நான் சொல்லும் வேளைக்கு உங்களுக்குத் திடீரென்று அவசர ஜோலி இருக்கும். இல்லையா?"

அவன் காதில் வாங்கிக்கொண்ட மாதிரி காட்டிக் கொள்ளவில்லை. அவனுடைய பொறுமை ஆச்சரியத்துக்கு உரியதாக இருந்தது. இதுவரையிலும், அவள் கங்கணம் கட்டிக்கொண்டு அவனைப்படுத்தும் அவமானங்களுக்கு அவன் எதிர்கூடப் பேசவில்லை. சுரணை அந்த அளவுக்குப் போய்விடுமா? இல்லை காரியவாதியா? இல்லை அவனுக்கு அவள்மேல் அத்துணை பாசமா? அவன் அப்படி நடந்துகொண்டதில் ஒரு பெருந்தன்மைகூடக் காண முடிந்தது.

எல்லா ஸ்திரீகளிடமும் ஒரு பேய்க் குணமிருக்கிறது. காரணமற்ற, விதண்டாவாதமான, மானம் பார்க்காத

பேய்க்குணம். அவள் தாயாயிருந்தால்கூட, பேயின் மூர்க்கமில்லாமல் சேயை அதன் வயிற்றுள் பருவத்திலிருந்தே தாங்க முடியுமா, காப்பாற்ற முடியுமா? போதும் போதும் நான் பேய்களிடம் பட்டபாடு. தாய்ப்பேய், சேய்ப்பேய்.

''ரஸம் டாப்ஸ்!'' அவன் கையில் ஏந்தி உறிஞ்சினான்; ''அதனால் சாம்பார் தரம் குறைவு என்று அர்த்தமில்லே. முருங்கை மரத்தில் ஏறிக்காதே.''

''ஆமாம், நான் கோவிச்சுண்டு, நீங்கள் பயந்துண்டு—போறுமே!''

''இல்லை கோமதி, இப்படி வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு எத்தனை நாளாச்சு.''

''உங்களை ஒரு தயவு கேட்டுக்கறேன். குளவிக் கூட்டைக் கலைக்க வேண்டாம். கலத்தில் சாதத்தைப் போட்டுட்டு நான் இப்படிப் பேசக்கூடாது. ஆனால் நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கறது நல்லது.''

விழித்தான். ''நீங்களே பாருங்கள் ஸார். இப்போ நான் என்ன செய்தேன்?''

மோசமான நிலைமை.

ப்ரஸாந்த், திடீரென்று கையைத் தூக்கிக்கொண்டு ''அம்மா என்ன சஸ்பென்ஸ் பண்ணியிருக்கா நேக்குத் தெரியுமே! பால் பாயசம்.''

அவ்வளவுதான் கோமதி பொட்டென உடைந்து போனாள். முதுகை முறிக்கும் கடைசி சுள்ளியாக ப்ரஸாந்தின் கொக்கரிப்பு முடிந்தது. அலமாரி விளிம்பில் முகத்தைப் பதித்துக்கொண்டு விக்கி விக்கி அழுதாள். அப்புறம் தன் நினைப்பு வந்து வேகமாக வெளியே சென்றாள், மீண்டாள்.

சாப்பாடு ஒரு வழியாக முடிந்து மூவரும் எழுந்தனர். கோமதி முகத்தைத் தூக்கிக்கொண்டு அவ்வப்போது மூக்கை உறிஞ்சிக்கொண்டு, காரியங்களைக் கவனித்தாள்.

சற்று நேரம் கழித்து, கோமதி, தட்டில் மூன்று கோப்பைகளுடன் வந்தாள். சிரிக்க முயன்றாள். முகம் மழை காலத்து அழிந்த நிலாப்போல் இருந்தது.

"I am sorry கோமதி, ஆனால் எதற்குன்னுதான் தெரியல்லே" என்றான்.

"உங்களுக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் பாயஸத்தைப் பண்ணிட்டு அதைக் கசக்க அடிச்சுட்டேன். தப்பு என்மேல்தான்."

"கசப்பா, யார் சொன்னது? தெய்வீகமா அல்லவா இருக்கு!—கோமதி வரியா, கொஞ்சம் தனியாப் பேசணும்."

"இந்தப் பாயஸம் எப்படிப் பண்றது என்கிறதைப் பத்தியா?"

சிரித்தான். "பார்த்தேளா லார்? இஷ்டப்பட்டால் இவளால் எப்படி 'ஜோக்' அடிக்க முடிகிறது! ஆனால் பாயஸத்தைப்பற்றி இல்லை."

"எதைப்பற்றி என்றும் எனக்குத் தெரியும். நம்மிடையில் இனி தனி என்பதே கிடையாது. எல்லாம் நடுக்கூடத்தில் உடைச்சுடுவேன். காலைச் சுற்றின பாம்பு. சரி, எவ்வளவு?"

அவனும் தயங்காமல். "ஐம்பது."

அவள் பதில் பேசாது விர்ரென்று போய், அலமாரியைத் திறந்து மூடி, சாவியை அதில் திருப்பிவிட்டு,

திரும்பி வந்து அவன் கையில் திணித்தாள். இரண்டு ஐந்துகள் கீழே விழுந்தன. அவன் குனிந்து பொறுக்கி எடுத்துக் கொண்டான்.

தர்மராஜன் கண்களை மூடிக் கொண்டார். மறுபடியும் கண்கள் திறந்தபோது, அவன் சிரித்தபடி, நோட்டுக்களை எண்ணிக்கொண்டே,

''கோமதி, இப்போ உன் கை ஓங்கியிருக்கலாம்; ஆனால் காலம் இப்படியே இருக்கும் என்று எண்ணாதே!''

''நானும் நாட்களை எண்ணிண்டுதானிருக்கேன்!''

''ஓ! ஏனாம்?'' அலட்சியமாக, கேலியாக.

''விவாகரத்துக்கு.''

ஊசி கேட்கும்.

''ஆமாம், இதே மூடுசூளையில் எத்தனை நாள்? நானும் காலண்டரைப் பார்த்திண்டு தானிருக்கேன். இன்னும் 156 நாட்கள்.''

''கோமதி, நன்னா யோசனை பண்ணினையா?'' அவன் குரலில் கவலை தெரிந்தது. தனக்காக இல்லை அவளுக்காக.

''இதுவரை இரண்டு வருடங்கள், 209 நாட்கள் யோசனைக்குப் போறாதா? மிச்சம் 156 நாட்கள் உங்களுக்கு யோசனைக்கு. அதனால் 'நேரமாயிடுத்து கோமதி, இன்னிக்கு மட்டும் ராத்தங்கிட்டுப் போறேன்'னு ஏதானும் சிக்கலை ஏற்படுத்த வேண்டாம். நீங்கள் வந்த காரியம் முடிஞ்சதா, புறப்படுங்கள், ஊ...ம்!''

காளி.

அவன் பதில் பேசவில்லை.

வாசல் கதவு மூடிய சத்தம் கேட்டு அடங்கியதும், அவள்: "என்ன ஸார், சும்மாயிருக்கேள்? கண்ணகி பிறந்த நாடு இது என்று பாடம் படிக்கப் போறேளா?"

அவர் ஒன்றும் பேசவில்லை. தன் கோப்பையைக் கீழே வைத்தார். அவள் அவசரமாக அதையெடுத்து அதிலிருந்து பருகினாள்.

"கோமதி அது என்னுடைய மிச்சம்!"

"இருக்கட்டுமே!" பாடினாள்.

"எச்சில் எச்சில் என்பீரே
ஏது கேட்ட மானிடரே
கன்றின் வாயும் எச்சில்
அதுக்குமேல் தெரியாதே!"

தர்மராஜன் வாய் விட்டுச் சிரித்து விட்டார். உடனேயே ஏதோ குழப்பத்தில் ஆழ்ந்தார்.

அவள் குஞ்சிரிப்புடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

* * *

தன் முதுகைத் துருவும் பார்வையின் உணர்வு. யாரோ தன்னைப் பின்தொடர்வது போன்ற பீதி. நடுவில் சில நாள் விட்டிருந்தது மறுபடியும்—

வெடுக்கெனத் திரும்பினார். எலெக்ட்ரிக் கம்பத்தின் மேல் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தான்.

"ஹல்லோ ஸார்!"

அருகே சென்றார்.

"அப்படியானால் இதற்கு முன்னாலும் நீதானா?" கோபம் கன்னங்களில் குறுகுறு—

''இருக்கலாம்—அடேயப்பா, என்ன வெய்யில்! எங்கேனும் ஒதுங்கலாமா? நீங்கள் ஏன் எனக்குக் காப்பி வாங்கித்தரக் கூடாது?''

''ஏன், கொடுப்பது என்பது உன் பழக்கத்தில் கிடையாதா?''

''ஓ, அப்படியும் செய்யலாமே! 'மாருதி ஸ்பெஷல்' சாப்பிட்டிருக்கேளா? இந்த வட்டாரத்தில் பிரசித்தம். அடுத்த தெருவுதான்.''

ராக்ஷஸ ஹோட்டல். ராக்ஷஸக் கூட்டம்.

''A.C.க்குப் போயிடுவோம்'' முன்னால் நடந்தான்.

''கோமதியின் பணம் எல்லாம் இப்படித்தான் போகணுமா?'' அவருக்குக் கடுப்பாய்த்தானிருந்தது.

''சரியாப் போச்சு, கோமதிக்குக் கொடுத்தது எதற்குக் காணும்னு நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவளிடம் வாங்கிக்கொள்வது ஒரு கொள்கை, அவ்வளவுதான்.

''என்ன கொள்கை?''

''ஒரு மாதம் வாங்கத் தவறினால், மறு மாதத்துக்கு ஏன் கொடுக்கணும்னு தோன்றிவிடும்.''

''உன் பேச்சு தலைகீழ்ப் பாடமாக உனக்குத் தோண வில்லை.''

''அவரவர் பார்வையைப் பொறுத்தது. என் கஷ்டம் அறிந்தவர்கள் சொல்லமாட்டார்கள். என்ன சாப் பிடறேள்?''

''எனக்கு எதுவுமே வேண்டாம்.''

''அப்படிச் சொன்னால் ஆகுமா? நாம் பேசுவதற்கு இருக்கிறதே! அப்பா, எனக்குப் பூரிமசால், ஸாருக்குக் காப்பி—பெஸ்டா இருக்கணும், என்ன?''

அவன் போனபிறகு அவர்:

"எந்நாளா என்னை வேவு? தெரிந்துகொள்கிறேன்."

"சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னால் நீங்கள், ஒரு மாலை எங்கள் வீட்டுள் நுழைவதைப் பார்த்தேன்."

"நான்தான் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

"எனக்கும் முதலில் குழப்பமாத்தானிருந்தது ஆனால் கோமதி உங்களைப் பற்றி அடிக்கடி பேசுவாள். உங்களை வர்ணித்திருக்கிறாள். உங்கள் சிவப்பு மேனியையும், தும்பை நரையையும். அப்புறம் எனக்கு ரெண்டும் ரெண்டும் அஞ்சு பண்ணுவது சிரமமாக இல்லே"

"சரி, என்னைத் தொடருவானேன்? உடனே வந்து பேசவேண்டியதுதானே?"

"நீங்கள் சொல்றமாதிரி அதெல்லாம் அவ்வளவு சுலபமில்லை, ஸார். ஏற்கெனவே எனக்கும் அவளுக்கும் பூசல். ஆனால் உங்களைத் தினப்படிக் கண்காணிக்க முடியவில்லை. ஆனால் எனக்கு மனுஷாள் இருக்கா. ஒருநாள் ஒரு கான்ஸ்டேபிள் உங்களை அழைத்துக்கொண்டு போலிஸ் ஸ்டேஷனுள் நுழைந்ததாகச் சொன்னார்கள். சரி, தொடர்வதில் இனிப் பிரயோசனம் இல்லைன்னு நான் தீர்மானம் பண்ணிக் கொள்கையிலேயே அடுத்த நாள் நீங்கள் வீட்டிலிருந்து வெளிவந்ததைக் கண்டேன். சாதாரணமாகத்தானிருந்தீர்கள். சரி அவசரப்பட வேண்டியதில்லை என்று எண்ணிக் கொண்டேன்."

"பரவாயில்லையே, பாரா போலிஸ் பந்தாவுக்குக் குறைச்சல் இல்லாமல் இருக்கிறதே!"

அவருடன் சேர்ந்து சிரித்தான்.

"சரி, நாம் பேச இருக்கிறது என்று சொன்னாயே, அப்படிப் பேச என்ன இருக்கிறது? என்ன இருக்க முடியும்?"

புன்னகைத்தான். ''ஸார், நீங்கள் ஆழமான ஆசாமி. உங்களிடம் எனக்கு ஒன்று பிடிச்சிருக்கு. நாம் சந்தித்ததும் நீங்கள் எல்லாப் பெரியவர்களைப்போல் என் வாழ்க்கையைத் திருத்திக்கொள்வதற்குப் புத்திமதியும், வழிகளும் சொல்லித்தர முற்படவில்லை. சாதாரணமாகப் பெரியவர்களுக்குத் தங்கள் குரலைக் கேட்பதில் ஒரு அலாதி திருப்தி. ஆனால் நீங்கள் அப்படியில்லை. நீங்கள் அழுத்தமானவர்.''

''சரி விஷயத்துக்கு வருவோம்; என்ன விஷயம்?'' சுற்றி, வளைக்கவில்லை.

''பார்த்தீர்களா, உடனே நேரே விஷயத்துக்கும் வந்துவிடுகிறீர்கள். உங்களுடன் பிஸினெஸ் பண்ணுவதே ஒரு சந்தோஷம்.''

ஸெர்வர் வந்து பண்டங்களை எதிரே வைத்துவிட்டுப் போனான்.

போன தடவைக்கும் இப்போதைக்கும் இவனிடம் ஏதோ வித்தியாசமிருக்கிறது. இவன் மரியாதைக் குறைவாயில்லை. ஆனால் மனதின் செதிள்கள் உஷாரில் விறைத்துக் கொள்கின்றன.

''பிஸினெஸ் பண்ணுவது சந்தோஷம் என்றேன். ஆனால் சுலபமா? இனிமேல்தான் தெரியணும். ஏன்னா, acc உங்கள் கிட்டத்தானிருக்கு.''

''எனக்குச் சீட்டாட்டம் தெரியாது.''

''அப்படியா? இதுதான் சார் வேடிக்கை, உண்மை, விபரீதம். விஷயம் தெரியாதவனிடம்தான் acc. என்னைப் பாருங்கள். சீட்டாட்டத்தில் எப்படி ஜெயிப்பது என்று என்னால் ஒரு புஸ்தகமே எழுதமுடியும். ஆனால் ஜெயிப்பு

மட்டும் எனக்குக் கிடையாது. பாட்டு வாத்தியார் மாதிரி. சொல்லிக் கொடுக்கத்தான் தெரியும். ஆனால் அவருக்குப் பாட வராது.''

சிரித்தான். உடனே முகம் மாறியது. ''ஆனால் என்றேனும் இத்தனை தோல்விகளுக்கும் ஈடு கொடுக்கிற மாதிரி ஒரே ஆட்டத்தில் ஜெயித்துவிடுவேன் என்கிற நம்பிக்கை இன்னும் விடவில்லை. அது இன்னொரு சாபம்.''

''கோமதி என்னிடம் சொல்லியிருக்கிறாள்.''

கோமதி— I love her terribly. But no use.'' கோபத்துடன் பூரியைக் கிழித்து வாயில் போட்டுக் கொண்டான். ''என்ன ஸார் காப்பியை சாப்பிடுங்களேன்! ஆறல்லே?''

''எனக்கு வேண்டாம். நீதான் வீண் செலவு பண்ணுகிறாய் என்று அப்பவே சொன்னேனே!''

''அப்படியானால்...'' அவர் அனுமதிக்குக் காத்திருக்கவில்லை. கோப்பையைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டான். ஒரு முழுங்கும் குடித்தான். ''எனக்குக் காப்பிக்கு வேளையே கிடையாது. விஷயம் என்ன என்று கேட்டீர்கள். என்ன நகைதான். கோமதியின் சங்கிலி. 5½ பவனுக்குப் பஞ்சமில்லை. இன்றைய விலைக்குக் குறைந்த பக்ஷம் 12000/- போகும். பழைய நாள்களுக்கு. 24 காரட்.''

''பலே!''

''ஸார்; நான் நேரத்தை விரயமாக்கப் போவதில்லை. நகையை எங்கே பத்திரப் படுத்தியிருக்கிறீர்கள் என்று கேட்கப் போவதில்லை. அது பத்திரமாயிருக்கிறது எனக்குத் தெரியும். நான் என் பங்கைத்தான் கேட்கிறேன் அவ்வளவுதான்.''

புன்னகை புரிந்தார். "இதை நான் எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான். ஆனால் சற்று நேரத்துக்கு முன்னால் கோமதி மேல் தாங்க முடியாத காதல் என்றாய், அதே மூச்சில் அவள் நகையில் பங்கு கேட்கிறாய்!"

விரல்களில் ஒட்டிக் கொண்டிருந்த மசாலாவை அவசரமாக நக்கினான். "இந்த விஷயத்தில்தான் ஒரு popular confusion புழக்கத்திலிருக்கிறது. காதல் தெய்விக மானது. அதெல்லாம் ஃப்பிட். காதல் என்பது ஒரு உணர்ச்சி— you can't help it ஸ்தாயிகள் வித்யாசப் படலாம். அதனால் உடலின் ரஸாயனம் மாறலாம். ஆனால் அறிவின் ரஸாயனம்—No, நான் நம்பவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

:'நான் கிழவன்"

"அதனாலேயே அனுபவஸ்தன் இல்லேயா?"

"Shut up"

"ஸாரி ஸார். விஷயத்தோடு நிற்கிறேன். ஆமாம், என் பங்கைக் கேட்கிறேன்."

"பங்கு என்றால் என்ன அர்த்தம்?"

"பின்னே என்ன, அப்படியே முழுசா முழுங்கிடப் போறேளா? பாவம், கோமதி நினைத்துக் கொண்டிருக் கிறாள், அவளுக்கு நீங்கள் உதவி செய்யப் போய், சிறை யிலிருந்துவிட்டு வந்திருக்கிறீர்கள் என்று. ஆனால் நான் சொலகிறேன், நீங்கள் நகையை எடுத்தது உங்களுக் காகவேதான். கோமதி அசடு, நீங்க பெரிய ஆள். முழுப் பூசனிக்காயையே மறைச்சுட்டீங்க."

"ஓ இப்படியும் ஒரு வாதம் இருக்கிறதா? எனக்கு இது வரை தோன்றவில்லையே! மிஸ்டர்... ஆச்சரியம் உங்கள் பேர் தெரியாமலே இதுவரை முக்கியமான விஷயங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்."

''நாராயணன் என்பது சர்மன்...'' முனகினான். ''அழைப்பது நரேன்.''

''சரி, நான் நகையை எடுக்கவில்லை என்றால் நீ நம்பப் போவதில்லை. எடுத்தேன் என்றால் ஒப்புக் கொண்டதாகி விடும். என்ன செய்யலாம்? பணமா ஏதேனும் கொடுத்து...'' கோபிச்சந்த் கொடுத்த செக் ஞாபகம் வந்தது.

''எவ்வளவு கொடுப்பீங்க?''

பெருமூச்செறிந்தார். ''ஊஹூம். பிரயோசனமில்லை. சரிப்பட்டு வராது. Blackmail பண்ணுகிறவனுக்கு உள் எலும்பு கண்ணில் படுகிறமாதிரி சதையை உரித்தாலும் திருப்திப்பட மாட்டான். ஓ, நரேன், நான் உரக்கச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். எதையும் ஒப்புக்கொள்ள வில்லை.

''ட்ராமா பண்றீங்க, பண்ணுங்க. கேட்டுக்க வேண்டியது என் வேலை.''

''ஆமாம் நரேன், என்னிடம் நகையிருக்கிறது என்று எப்படி அவ்வளவு நிச்சயமா யிருக்கிறாய்?''

''பின்னே எங்கே போக முடியும்? திருட்டு நகை கை மாறினாலும், உருக்கினாலும் தெரியாமல் போவாது. அதுக்கு ஆளுங்க இருக்காங்க. அதனால் எங்கே நகை போக முடியும்? எங்கே...'' யோசனையில் குரல் இழுத்தது. சட்டென அவன் கண்கள் அகல விரிந்தன. 'you...you'—ஆவேசத்தில் எழுந்து நின்றுவிட்டான். அறையில் ஒரு சிலர் அவனைக் கவனிப்பது கண்டு உட்கார்ந்து கொண்டான். உதட்டோரத்தில் எச்சில் கொப்புளித்தது. அவருக்குப் புரியவில்லை. என்ன ஆச்சு?

நெற்றியில் அடித்துக்கொண்டான்.

''ஆமாம் இந்தப் பதினஞ்சு நாளில் நீங்கள் கோமதியிடமே ஏன் நகையைக் கொடுத்திருக்கக் கூடாது?''

அவர் பதில் பேசவில்லை. அதுவும் இதுவரை தோன்றாததுதான்.

—''அவளிடம் போய்விட்டால் சிரமந்தான். அவள் பழைய மாதிரி இல்லை. வேறு வழி தேடணும்?''

அவருக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. வேறு என்ன வழி?

''ஆனால் அப்படியெல்லாம் போக வேண்டாம்னு பாக்கறேன். ஆனால் அது முழுக்க என் இச்சையில் இருக்குமா? ஸார், உங்களுக்கு என் கஷ்டம் தெரியாது. இந்த நகையை ஆசை காட்டி பணம் வாங்கியிருக்கேன். நான் சும்மாயிருந்தாலும் அவங்க விடமாட்டாங்க. தலையை விட்டாச்சு—எடுக்க முடியாது. என் பங்குன்னு கேட்கிறேன். ஆனால் அசலாய்க் கண்ணால் பார்த்துக் கையால் நிமிண்டி, ஜேபியில் போட்டுக்கறபோது, போட்டுக்கறது ஜேபி ஓட்டை வழியா விழுந்துடும். உங்களுக்கு என்ன தெரியும்?''

பரிதாபமாயிருந்தான்.

''சினிமாவிலும் புத்தகத்திலும்தான் இப்படியெல்லாம் பார்க்கிறோம்.

''Sir நீங்களே இப்படிச் சொன்னால் என்ன செய்வது? வாழ்க்கையில் இல்லாதது சினிமாவிலும் ட்ராமாவிலும் புத்தகத்திலும் வந்துவிட முடியாது. உண்மை, கற்பனையைக் காட்டிலும் விசித்திரமானது. ஸார், சகவாசத்தைத் தேடி ஒருத்தன் போறதில்லே. ஒருத்தன் சளைச்சட்டான்னு தெரிஞ்சு போச்சுன்னா—எப்படியோ தெரிஞ்சும் போவுது—சகவாசம் தானே வந்து அடையும். மாட்டிக் கொண்டபின் தப்பவே முடியாது. சாகப்போற உயிரைத்

தெரிஞ்சுதான் பருந்து வந்து வட்டமிடுது. சாகப்போற உசிர் பருந்தைத் தேடிப் போகல்லே. ஸார், பத்தாணிக் காரன் முன்னால் எப்படி வந்து உங்களிடம் கெஞ்சறான் கொஞ்சறான் தெரியுமா? 'தம்பீ பணம் வோணுமா? எத்தினி வோணும்? எத்தினி வோணுமானாலும் வாங் கிக்கோ. நீ அஷலே கொடுக்கவோணாம். வட்டிமாத்தரம் ஒளுங்காக கொடுத்திட்டிரு போதும். எவன் அஷல் கேக்குறான்?' அப்பிடித்தான் சகவாசம் ஆரம்பிக்கிறது. அப்புறம், அப்புறம்...'' வேசாகச் சிரித்தபடி, தன் தோளை, முதுகைக் கழுத்துப்புறம், உடம்பைத் தடவிக் கொண்டான். ஏதோ நினைப்பின் பயத்தில், அவன் சிரிப்பு விசனமாயிருந்தது.

''ஸார், பத்தாணிக்காரன் நாட்டை விட்டுப் போயிடல்லே. போயிட்டான்னு சட்டம் பேசுது. நம்மவ ளிடமே வாரிசுகளை விட்டுப் போயிருக்கிறான். அவனைக் காட்டிலும் கொடுமையான வாரிசுகள். ஸார், சிறையில் இணைத்துக்கொண்டிருக்கும் கைதிகளைக் காட்டிலும் வெளியிலே மார் தட்டிக்கொண்டு தன்னிச்சையாகத் திரியும் குற்றவாளிகள் எத்தனைபேர் தெரியுமா? கணக் கிட முடியாது, என்னையும் சேர்த்துத்தான். எல்லாம் தெரியும். ஆனால் ஒண்ணும் பண்ண முடியாது...''

அவனுக்கு மூச்சு இரைத்தது. அவர் ஸெர்வரை விளித்தார்.

''ஒரு கப் காப்பி ஸ்ட்ராங்...''

''நாராயணா, நீ ரொம்ப ஆழத்துள் போய்விட்டாய். உன்னை மீட்க முடியாது.''

காப்பியை ஒரு முழுங்கு குடித்துவிட்டு அவரை ஒரு தினுசாகப் பார்த்தான்.

''நினைச்சேன், அப்பவே நினைச்சன்''— கண்களில் வெறி. ''எப்படி கோமதிக்கு இவ்வளவு துணிச்சல் வந்த துன்னு. ஐயா வந்து குந்திட்டிருக்கீங்க. அவளிடம் நகை யும் சேர்ந்துபோச்சு அவளுக்கு உரமும் ஏறிப்போச்சு. என்னெல்லாம் பேசறா! இப்படியெல்லாம் பேசமாட் டாள். எரிஞ்சு விழுவாள். இருக்கக் கூடியதுதான். அப்பறம் படிமானத்துக்கு வந்துடுவா. விவாகரத்தாமே! அம்மாடி, ஏன் ஸார் என்னை ரத்து செய்துட்டு, உங்களைக் கலியாணம் செய்துக்கப் போறாளா? தகப்பனா ருக்குத் தகப்பனார், பர்த்தாவுக்குப் பர்த்தா...ஐயோ!''

வலிகூடத் தெரியவில்லை. ஏதோ மின்சாரக் கம்பி யைத் தொட்டுவிட்டாற் போலிருந்தது. இல்லை என்ன நேர்ந்ததென்றே தெரியவில்லை. அறையில் மற்றவர்களும் பார்த்திருக்க முடியாது. அவர் கைவிளிம்பு வெட்டு அவ் வளவு வேகமாக விழுந்து மீண்டது. அவன் புஜத்தின் உள் பக்கத்தில். அவ்வளவுதான். கை தொங்கிவிட்டது. அவன் தன் கையைப் பயத்துடன் பார்த்தான்.

''இன்னும் ஒன்றரை மணி நேரத்துக்கு உன் கை உனக்கு இல்லே.'' அவர் குரல் அமைதியாக இருந்தது. ''சிறையிலிருந்தபோது கற்றுக்கொண்டது தற்காப்புக்கு. நான் சும்மாயிருந்தாலும் அவர்கள் சும்மா விடுகிறார் களா? நீ சுவாசம் இழுக்கிற முறையைக் கவனித்து அதன் போக்கில் நரம்பைத் தட்டறது, இது கராத்தே இல்லை யோகாப்யாசத்தைச் சேர்ந்தது. நாராயணா, வாய்க்கு வந்ததையெல்லாம் பேசாதே! இன்னொன்று, நகை என் னிடம்தான் இருக்கிறது. கோமதியிடம் போகவில்லை. அவளுக்குத் தெரியக்கூடத் தெரியாது. நீ அவளைத் துன் புறுத்த வேண்டாம். எது இருந்தாலும் என்னோடு வைத் துக்கொள்.''

''கை குடையறது ஸார்!''

"தெரியும். கற்றுக்கொடுத்தவன், கற்றுக் கொடுத்த பின் முதலடி எனக்குத்தான். ஐயா, அடியை முறையாப் படுத்தணும்னா அதை நல்லாப் புரிஞ்சுக்கணும். நரம்புகள் உள்ளே சுருண்டுகொள்ள ஆரம்பித்திருக்கின்றன. அப்புறம் படிப்படியாகத்தான் விடுபடும். அதுவரை அனுபவித்துத்தான் ஆகணும். இதற்கு நீ ஏதேனும் சிகிச்சை செய்ய முற்பட்டாலும் பலன் இல்லை. சிகிச்சை செய்ய வேண்டாம். பேசாமல் உன் அறைக்குப் போய் ரெஸ்ட் எடு. தானா, படிப்படியா விட்டுவிடும்."

"ஸார் தாங்க முடியல்லே!"

"ஆமாம் நாம் இனி இங்கு இருப்பது உசிதமில்லே. ஸெர்வர், பில்!"

பில்லை அவர்தான் கொடுத்தார். ஹோட்டல் வாசலுக்கு வந்து படியிறங்கினதும் ஓட்டமும் நடையுமாக மாறி மாறி அவன் தன் கையை மறு கையால் பற்றிக் கொண்டு ஓடினான். அவர் அவனைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

"என்ன ஸார் ஆயிடுச்சி அவருக்கு?"

"தேள் கொட்டி விட்டதாம்."

"தேளா? இங்கே தெருவிலா? என்ன ஸார் கேலி பண்றீங்க?"

கையை விரித்து உதட்டைப் பிதுக்கினார்.

"வீட்டிலிருந்து வரும்போதே ஜேபியுள் இருந்திருக்கிறது" என்றார்.

7

வீடு வந்து சேர்ந்ததும் தர்மராஜன் படுக்கையில் பொத்தென விழுந்தார். கொல்லும் போலும் ஒரு அசதி.

ஒரு பெரும் பருந்து மார்மீது இறங்கி தன் கொக்கிப் பாதங்களில், உடலைப் பற்றித் தூக்கிக்கொண்டு பாறை மேல் தன் கூட்டுக்குப் பறந்து செல்வதுபோல் தற்செய லிழந்த ஒரு அந்தர நிலை. மார்பில் கனம் அழுத்திற்று. கண்கள் மூடிவிட்டன.

இன்று வெளியே புறப்பட்ட நிமித்தம், ஆ...நினைவு வருகிறது. வங்கிக்குப் போய் ஸேட்டின் மருமான் கொடுத்த காசோலையில் புதுக் கணக்குத் திறக்கணும். பழைய வங்கிக்கும் போய், Fixed Deposit ஐப் பெறுவதற்கு விசாரிக்கணும். ஆனால் கோமதியின் கணவனைச் சந்தித்ததில் நாளே வீணாகிப் போனது. போகட்டும். எத்தனையோ நாட்களுடன் இந்நாளும் ஒருநாள். ஆமாம் என் வாழ்நாளில் மீட்கத் தொலையாத நாட்கள்!

இவனுடைய அத்தியாயம் இத்துடன் முடியும் என்று தோன்றவில்லை. போலீஸ் கணிப்புக்கு ஈடாக இவன் ஏற்பாடுகள் இருக்கும் போலத் தோன்றுகிறது. ஓடிக் கொண்டேயிருப்பதுதான் என் ஜீவிதமா? தப்பு நேர்ந்து விட்டால் பிராயசித்தமே கிடையாதா? மூச்சு விட்டுக்

கொள்ள நேரமே கிடையாதா? ஓடிக் கொண்டும் வளையில் எலிபோல் எப்பவும் உடல் வெடவெட என உதறலிலும்—இதற்குத்தான், இதுதான் உயிரா? ஏன் இப்படி எனக்கே அவமானச் சின்னமாகி விட்டேன்?

தன் மேலேயே ஒரு கோபாவேசம் மூண்டது. போதும் பட்டதெல்லாம் போதும், இதுவே முடிவு.

உடலில் ஒரு திடம் கண்டது. எழுந்து படுக்கையைச் சுருட்டி, சுவரோரமாக வைத்தார். வாசற் கதவைப் பூட்டிச் சாவியை விட்டத்தில் சொருகினார். கோமதி யிடம் மறு சாவியிருக்கிறது. இருந்தாலும் இனி எனக்கேன் இது? பையன் வந்தால் வாசலில் விளையாடிக்கொண் டிருக்கட்டும். என் பிரயாணம் பெரிது.

நடந்தார்.

உடனேயே உணர்ந்தார். இதுவரை அறிந்திராத ஒரு அகோரப் பசி. ஆச்சர்யப் பசி.

நடந்தார்.

ஒரு குஜராத்தித் தீனிக்கடை எதிர்ப்பட்டது. வாசலில் கணப்புச் சட்டியில் ('கண கண') பால் 'ஸெட்' பண்ணிக் கொண்டிருந்தான். அவ்வளவு பெரிய வாணலியில், விளிம்பு முட்டிய பால். அதன்மேல் சடைத்துக்கொண்டே வரும் ஏடைக் காண அதிசயமாக, புதுமையாக, மகிழ்ச்சி யாக, ஒரு குழந்தைத்தனமாகச் சிரிப்பாய்க்கூட இருந்தது. சில அபூர்வ சமயங்களில் பார்வைக்கு ஒரு சதையுரித்த 'பளிச்'. கண்கள், சுனையில் குளித்த துல்லியம் சித்திரம் கண் திறந்த தனி உயிர்ப்பு,—முதல் விழிப்பு அதெப்படி?

உள்ளே போய் உட்கார்ந்து பூரி வரவழைத்தார். சாப்பிட்டுக்கொண்டே— தாலும் புதினாச் சட்னியும் படு ஏர்வை—தெருவில் நடமாட்டத்தைச் சிந்தித்தார். ஆமாம் இத்தனைபேருக்கும் ஏதோ ஒரு காரியமும் நோக்கமும்

இருக்கின்றன. எனக்கு மட்டும் ஏன் இல்லை? உலகமே ஒரு அடைப்பாகத் தோன்றுகிறது. காரணம் சிறையி லிருந்த பழக்கமா? குறிக்கோளிழந்த வாழ்வு.

திடீரென சம்பந்தமேயில்லாமல், மதுரையைப்பற்றி நினைப்பு வந்தது.

பாதி ராத்ரியில், அந்த காலேஜ்ரோடும், மங்கம்மாள் சத்திரம் பக்கத்திலும் இரவைப் பகலாக்கிய வெளிச்சமும், திறந்த கடைகளும்—அந்த இரண்டு இடங்களுமே நித்ய கல்யாண கூடம்தான். வருவோரும் போவோரும்—ரயில் நிலையம், பக்கத்திலே பேருந்து நிலையம். பாதிராத்ரியில் சுடச்சுட இட்லி—நினைத்துப் பார்க்க முடியுமா? அந்த மலைவாழைப்பழக் கடைகளும், "மதுரை மல்லி! மதுரை மல்லி!" அந்தப் பழைய நினைப்பின் வேகத்திலேயே மல்லி மணம் 'கம்'மென்று இங்கே எழுகிறது.

மதுரையின் ஸாரத்தையே வடித்துப் பார்ப்பதுபோல் கற்பனையில் ஒரு உருவமே தோன்றியது. அஜந்தா கொண்டை கடைந்தெடுத்த உடல். செந்தாழை மேனி. மார்க்கச்சை. ரவிவர்மா படத்தில் சகுந்தலை போன்று காலின் கண்டசதை தெரிய கச்சமிட்டக் கட்டு. ரவிக்கை யில்லை. மொழு மொழுவென்று தோள்களின் உருட்டு. இடுப்பில் குடத்துடன் மதுரை நகரின் தேவதை நடந்து வருகிறாள். கன்னி அல்லள். கழுத்தில், கொண்டையில் தோள்களில், கை மணிக்கட்டுகளில், கணுக்கால்களில் அணிகளுக்குப் பதில் மல்லிச் சரங்கள், இடையில் ஒட்டி யாணத்துக்குப் பதில் ஒரு மல்லித் திண்டுமாலை. தோற்றம் அதன் மணத்தையும் அதற்காக ஏக்கத்தையும் நெஞ்சில் நிறுத்திவிட்டு நெஞ்சில் தோன்றியபடியே நெஞ்சில் மறைந்தது. முகம் ஏனோ மரகதத்தை நினை வூட்டியது.

அந்த நாள் மதுரை.

மதுரை—மதுரா—மாதுரி—மதூரி—மரகதம்—மதுமதி—மது—மது...

என் அந்த நாள் வாழ்க்கை போல்.

பெருமூச்செறிந்தார். என்றுதான் என் வாழ்க்கை வாழ்ந்தது? ஒன்று பூகம்பம். இல்லை, தலைக்குமேல் மயிரிழையில் தொங்கும் கத்தி.

''தூத் வோனா ஸாப்? ஸ்பெஷல் மலாய்? பஹுத் அச்சா—படாகுஷிஹை...''

உட்கார்ந்த இடத்திலிருந்தே தெரிந்தது. பாலில் ஏடு முழுக்கப் புடைத்துக்கொண்டு பாலே மதத்திருந்தது, ஆசையாய்த் தானிருந்தது. ஆனால்... ஆனால்... வேறு எவனேனும் வந்து பால் கேட்கத்தான் போகிறான். பாலின் ஆடை கலையத்தான் போகிறது. வியாபாரத்துக்குத்தானே வாணலி பாலும்! ஆனால்—ஆனால்...

''டீ கொண்டுவாப்பா!''

''பம்பாய் ஸ்பெஷல் மஸாலா சாய். நாற்பத்தி எட்டு சரக்குகள் சேர்ந்தது. கலவை. எங்கள் ரஹஸ்யம்; சாப்பிட்டு 'அச்சா' சொல்லுங்கள், அதுதான் எங்கள் சந்தோஷம்!'' சந்தேகம் கேட்காமலே கல்லாவிலிருந்து முதலாளி விளக்குகிறான். சிரிக்கிறான். 'பான்' காவியேறிய பற்கள் கிருதா மீசையடியில் பளப்பள—

டீ ருசியாய்த்தானிருந்தது. தெம்பாய்த் தானிருந்தது.

நடந்தார்.

தினத்தின் இரண்டாவது பாகம் இரவு—அது ஒரு தனி உலகம்—என்று அதன் விலாசம் தனியாய்த்தான் தெரிகிறது

சினிமா தியேட்டர்களில், பெரிய பானர்களில் நக்ஷத்ரங்கள், ஆடை அலங்காரங்களில் வெட்கமற்ற ஆலிங்கனங்களில் சிரிக்கிறார்கள். 'இது சும்மா மாதிரிக்கு. மிச்சத்தை

வெள்ளித்திரையில் காண்கையில் அசந்து போவீர்கள். உள்ளே வாருங்கள்!' அழைக்கிறார்கள் டிக்கட்கெளண்டர்களில். ஜனங்கள் நெரிகின்றனர்.

கோமதி இன்னேரம் வந்திருப்பாள். பையனும் அவளும் வீட்டுள் போயிருப்பார்கள். ஆனால் என்னைப் பற்றிக் கவலைப்படக் கோமதிக்கு இன்னும் நேரம் ஆகவில்லை.

பாவம் கோமதி!

இத்தனை வயது நான் வாழ்ந்து கண்ட பலன், எனக்காகக் கண்ணீர் உகுப்பதற்கு நான் திரட்டக்கூடிய, முடிந்த ஒரே ஆசாமி, கோமதிதான். அவளாவது இருக்கிறாள் என்று ஆறுதல் அடைய வேண்டியதுதான். அவளுடைய கண்ணீருமில்லை யென்றால் எனக்காகக் கண்ணீரே இல்லை. கமலாம்பிகே உன் கிருபை அப்படியென்றால் நான் என்ன செய்யமுடியும்? அம்மா, என்னை மன்னித்துக்கொள். எனக்கு இனிமேல் ஓடச் சக்தியில்லை. கோமதி, அழு. உன் கண்ணீரில்தான் கரையேற வேண்டும். கண்ணீர் தேவைதானம்மா! உன் கண்ணீரை எனக்கு அருள்.

ஆனால் நாளடைவில் கோமதி மறந்து போவாள். மறக்கவேண்டியதுதானே. பாவம், குழந்தை. மறதியெனும் மருந்தே, உன்னிலும் ஔஷதம் ஏது? அடுத்த ஜன்மத்தில் நானே எனக்கு மறந்துபோவேன். மறதிதான் நிம்மதி.

நடந்தார்.

'ஒவ்வொரு பிறவிக்கும் இப்போ பட்டதே போதும் இனி ஜன்மமே வேண்டாம்! என்கிறோம்.' ஏதோ ஜன்மம் நம் கையில் இருக்கிறமாதிரி. அதே சமயத்தில் இது மறு ஜன்மத்தில் நம்பிக்கையைக் குறிக்கிறதா?

உயிரின் வெட்கமற்ற தன்மைக்கு வருந்துவதா? அல்ல தெளிவு காண, உயிரின் பிரயத்தனத் தீவிரத்துக்கு அதிசயிப்பதா?

''விரட்டு! விரட்டு!!'' ஓடிக் கொண்டேயிருக்கிறேன். இப்பவும், இதுவும் ஓட்டம்தான்.

''கல்லால் அடி!''

'காரணம்?' காரணமே வேண்டாம். ஓடுகிற காரணம் ஒன்றே போதும், துரத்துவதற்கு. வாழ்க்கையின் தத்துவமே இதுதான் என்று புரிந்துகொள்ள நான் வக்கற்றுப் போனால் தப்பு யார்மேல்? யாரை நான் குற்றம் சொல்வது? பூமிக்கு வரும்போதே உயிருக்கும் உடலுக்கும் ஏதோ ஒப்பந்தத்தில்தான் வருகிறோம். ஒப்பந்தம் முறையாக நிறைவேறினால் முழுவாழ்வு வாழ்ந்து உயிர் பிரிகிறது. ஒப்பந்தத்தில தோற்றால் உடல், அதன் நியாயமான முடிவுக்குமுன் முற்றுப்புள்ளி யாகி உயிர் இருக்கைக்குத் தவிக்கிறது.

ஒப்பந்தம்? விபரங்கள்தான் தெரியவில்லை, தெரிவ தில்லை.

மணலில் இறங்கி வெளிச்சமான இடங்களை விலகி கடலை நோக்கி நடந்தார். தூரத்திலிருந்து, மெரீனா ஒரு ரங்கராட்டினமாகத்தான் தெரிகிறது. விளக்குகள், வண்ணங்கள், வாஸனைகள், சதா சலனம், சத்தம். ப்ளாஸ்டிக் சாமான்கள், சங்கு, மணி, சோழி, பழையப் புத்தகங்கள், பாத்திரங்கள்—இப்போது மரீனாவில் விற் காத சாமான்களே இல்லை. குப்பையையே பணமாக்கி விடும் இடம் மரீனாதான்.

''சூடு பஜ்ஜி!'' சூடான பஜ்ஜி இல்லே. சூடு பஜ்ஜி. பஜ்ஜி கேட்டவுடன் ஏற்கெனவே போட்டு வைத்திருக்கும் பஜ்ஜியைக் காய்ந்து கொண்டிருக்கும் எண்ணெயில் ஒரு

தரம் புரட்டியெடுத்து ''யார் கேட்டது?'' ''இதோ நான், நான்—'' எத்தனை பேர் அதற்குக் க்யூ! எண்ணெயின் காய்ச்சல் நெடி நாசியைப் பொசுக்குகிறது.

நடந்தார். காலடியில் மணல் சரக், சரக்.

ஒரு வண்டிக் கடையைச் சுற்றி புடவை, ஜீன்ஸ், ஷெர்வாணி கம்மீஸ், அக்குள் தெரிய, தோளில்லாத கவுன், கறுப்பு மூக்குக் கண்ணாடி, ஒரு அங்குல கனத்துக்கு முகங்களில் பூச்சு, க்ராப் (ஆணா பெண்ணா?) பாப் அவிழ்த்து விட்ட கூந்தல், குதிரைவால் கொண்டைகள், கனைப்பு, எக்காளம், கொம்மாளம்...

''யா யா, நோ மான், யெஸ், guy. ga ga, ஹோ! ஹோ! கெக்கே!''

நடந்தார்

சென்ற திக்கில், கடலை நெருங்க நெருங்க, ஜன நடமாட்டமும் அதன் இரைச்சலும் பின்தங்கி விழுந்தன. பொடி மணல் அகண்ட மெத்தையாக விரிந்தது. நீல வானடிவாரததை ஜலத்தின் கருநீல விளிம்புக் கோடு சுட்டிற்று. இருளுக்கு ஓரம் தைத்த ஜரிகையும் போல அலைகள் நுரை கக்கிக்கொண்டு, கைகளாக வரவேற்றன. இரவில்லை பகலில்லை அலைகள் வரவேற்காத நேரமேயில்லை.

கரையோரம் ஒரு ஓடத்தின்மீது சாய்ந்து நின்றபடி அலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றார். so! ஆகவே? இன்னும் கொஞ்ச நேரம்தான். ஆட்டிவிட்ட தொட்டில் போல், இதவான விரக்தியில் மனம் மிதந்தது.

சாவுக்குப்பின் நேர்வது என்ன? ஆயிரம் வாதங்களுடனும், எதிர்வாதங்களுடனும், முடிந்த நிரூபணைகளுடனும் இன்னும் யூகம்தான். பிறந்த குற்றத்துக்குச் சாவு குற்றமாகையில் அதற்குத் தீர்ப்பே கிடையாது.

வேடிக்கையாகயில்லை? மெழுகுவர்த்தியின் திரியை நிமிண்டி சுடரை அணைத்தால் போல், உயிர் பொட்டெனப் போனதோடு சரியா? இல்லை பிரிந்தவுடன் அதை வாங்கிக்கொள்ள ஒரு பாத்திரம் காத்துக் கொண்டிருக்கிறதா? சுடரை அணைத்த பின்னர்தான் எழும் ஊதுபத்தியின் மணம்போல், உயிரின் நிஜவாழ்வே சாவுக்குப் பின்தானா?

பாத்திரம் என்று ஒன்று காத்திருந்தால் அதில் புகுந்து கொள்வதோ, ஒதுக்குவதோ பாத்திரத்தைத் தேர்ந்து எடுப்பதோ உயிரின் செயலில் இருக்கிறதா?

இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலாக ஒரே பதில் சரியான பதில்தான்—ஒரே பதில் கிடைத்துவிடும். ஆனால் அது என் ப்ரஞையோடு எனக்குக் கிடைக்குமா?

சிரிப்புச் சத்தம் கேட்ட மாதிரியிருந்தது. திடுக்கிட்டுத் திரும்பினார். யாரும் காணோம்.

அலைகள் தாம் சிரிக்கின்றன.

யாரும் பாரீர் யாவரும் கேளீர்...

மனம் மௌனமாயிற்று. மௌனம் கடினமாயிற்று.

வானத்துக்கும் கடலுக்கும் ஒலிக்கும் ஒரு சேதி; 'தர்மராஜன் உயிரை மாய்த்துக்கொள்ளப் போகிறான்!'

''ஏ மடையா!'' தர்மராஜன் திடுக்கிட்டார் அந்த அதட்டலில். அதட்டலைக் காட்டிலும் அதிகாரம், மீற முடியாத அதிகாரம்.

'தர்மராஜன் என்கிற பெயரில் உன்னைத்தான். உன்னை எனும் நீ பேரும் உங்களுடையதுதான். பாதையும் உங்களுடையதுதான். இரண்டுக்கும் முன், பின் தொகுப்

பாய் எண்ணங்களும் உங்கள் வர்க்கத்தினுடையதுதான். தெரியாவிட்டால் இப்போது தெரிந்துகொள். உனக்குத் தெரியத்தான் இல்லை.'

''என்ன தெரியவில்லை?'' குழந்தையாகி விட்டான் தர்மராஜன்.

''அப்படிவா வழிக்கு. தெரிந்துகொள்ள ஆசைப் பட்டால், அதுவே வழிதான். இதோ பார் நீ வந்திருக்கும் உத்தேசப்படி, நீ கடலில் விழுந்து மூழ்கிப் போனால், கடலும் வானும் ஒலியும் உன் சாவால் அஸ்தமனமாகி விடுமா? உன் சாவு ஒரு கணக்கு என்று நினைக்கிறாயா? உங்கள் வர்க்கம் குறிப்பிடும் பிறப்பும் சாவும் கணக் கில்லை. அலைகள் நாங்களே கணக்கில்லை. கரையோரம் காற்றில் அலைகிறோம் திரள்கிறோம் வருகிறோம் மோது கிறோம் மீள்கிறோம் நாங்கள். கணக்கில்லை. ப்ரக்ஞை யின் தடம், மொழி எல்லாமே வேறு தம்பி. நீ தம்பியோ, மகனோ, தந்தையோ, அந்த உறவுகளின் மறுபாலோ, நீயோ, நானோ, அதுவும் உங்கள் வர்க்கத்தின் பாஷை தான்—அலைகள் நாங்கள் உங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டேயிருக்கிறோம். எங்கள் சிரிப்பை எங்கள் நுரையின் வெண்மையில் பார்!''

இரு கைகளாலும் தர்மராஜன் தலையைப் பிடித்துக் கொண்டார்.

'ஆ! அதுதான் வழி. ப்ரக்ஞையின் தன்மை கேள். அதற்கு மொழியே இல்லை அதன் வழியில் கடல் என்றால் கடல் இல்லை—ப்ரக்ஞையின் ஆழம். ஒலி என்றால் ஒலி அல்ல—ப்ரக்ஞையின் மோனம். வானம் என்றால் வானம் இல்லை—ப்ரக்ஞையின் வியாபகம். பிரக்ஞை என்பது ஒரு புன்னகை. ஆழம், மோனம் அர்த்தம் காணமுடியாத புன்னகை. சிருஷ்டியே அப்புன்னகை அலைகள்தாம். இதில் நீயும் உன் பிறப்பும், சாவும் எந்த மூலை? இப்போ உனக்கே சிரிப்பு வருமே, எங்கே சிரி, சிரி, சிரி.''

தர்மராஜன் சிரித்தார். பயமாயிருந்தது. ஆனால் சிரிப்பு வந்தது. எனக்குப் பைத்தியம் பிடித்துக்கொண் டிருக்கிறதா? யாருக்குக் கீழ்ப்படிகிறேன் என்றுகூடத் தெரியவில்லையே, பயமாயிருந்தது.

ஏம்பா, சாவப் போகிறையே, உனக்குப் பயம் எதற்கு? பயத்தினால் உனக்கு என்ன பிரயோஜனம்?'

பயம் ஒரு மேகம்போல் கறுத்துக்கொண்டு மேலே கவிய ஆரம்பித்தது. தர்மராஜன் ஓடினார். அவர் பின் னால் அலைகள் சிரித்தன.

'பயம் ஒரு ஆரோக்யமான உணர்ச்சி, தர்மராஜா! உயிரை வாழச் செய்யும் மருந்தே பயம்.'

தர்மராஜன் ஓடு ஓடென ஓடினார்.

அலைகளின் ஏளனக் கொக்கரிப்பு அவரைத் துரத்திற்று.

கூடவே ஆளின் அடிச்சத்தமும் துரத்திற்று.

* * *

ஓடிக்கொண்டே, தர்மராஜன் திரும்பிப் பார்த்தார். ஆள் இல்லை. ஆட்கள், மூன்றுபேர் நிச்சயம் அவர்கள் வேகம் அவரை மீறியது. அவர்கள் நெருங்க நெருங்க, அவர்களுடைய கைலி வேட்டிக் கட்டு மோஸ்தரும், தலை முண்டா பனியன்களும், கிருதா மீசைகளும் எல்லா வற்றிற்கும் பேல் "நில்" என்றுகூட அதட்டாமல், அவர் களுடைய அழுத்தமான நிசப்தமும் அவர்கள் நல்லதற்கு இல்லை என்று தீர்மானமாகி விட்டது. ஆனால் என்னைத் துரத்துவானேன்? அவர்களுக்கு முன் நான் ஜன நடமாட் டத்தை எட்ட முடியாது. இதோ வந்தாச்சு. நான் வாய் விட்டுச் சத்தம் போட்டேனோ. கண்டிப்பாக ஒரே

வெட்டில் தீர்த்துவிடுவார்கள். தர்மராஜன் நின்று விட்டார். பயம் தெரியவில்லை. அதற்குப் பதில் ஒரு விதமான உற்சாகம், ஒரு மட்டற்ற மகிழ்ச்சி. இப்போது நான் உயிர் இழக்க நேர்ந்தாலும் அதற்கு ஒரு ஸ்தூல மான, என் மனதுக்கே திருப்தியான காரணம், சமாதானம் இருக்கும்.

மூன்றுபேரும் சற்று எட்டினாற்போலவே அவரைச் சூழ்ந்து நின்றனர்.

நடுவிலவன், ''ஐயா, வணக்கமுங்க!''

ஆச்சர்யப்பட்டுப் போனார். இதென்ன மரியாதை தாக்குதலா? அப்படி ஒரு பாணி புதிதாக அமுலுக்கு வந்திருக்கா?

''அமீர் பாய் நலமாயிருக்காங்களா?''

ஆச்சர்யத்தின் மேல் ஆச்சர்யம். ''அமீர்க்கானை எனக்குத் தெரியும் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இன்னிக்கு நரேன் ஐயாவைப் பார்க்கப் போனேன். அவர் கை தொங்குதே! அது சொல்லுதே,''

''என்ன சொல்லுது?''

''அது அமீர்பாயின் கையெழுத்துங்க.''

ஏதோ, புரிகிறமாதிரி, கொஞ்சம் கொஞ்சம் வெளிச்சம்...

''இது அமீர்பாயின் நேர் அடியாயிருந்தால் அவர் ஜெயிலிலிருந்து வந்துட்டார். ஆனால் அவர் இன்னும் வல்லீங்க. ஆனால் இந்த அடியை அவர் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தால்... அமீர்பாய் எல்லாருக்கும் சொல்லிக் கொடுக்க மாட்டார். அப்போ நீங்க அமீர் பாய்க்கு ரொம்ப வேண்டப் பட்டவராயிருக்கணும். அமீர் பாய்க்கு வேண்டப்பட்டவர் எங்களுக்கும் வேண்டப்பட் டவர். கை எப்படித் தொங்கிப் போச்சுன்னு நரேனை

விசாரிச்சேன். உங்களைப் பத்தி சொல்லி, உங்கள் விலாசமும் சொல்லி, உங்களைக் கவனிக்கவும் சொன்னார்.''

''கவனிப்பதா?''

''ஆமானுங்க.'' பதில் சற்றுத் தயக்கத்துடன், கூடவே கேலி கலந்து, ''அதாவது ஐயா மேலே கை வைக்கக் கூடாது. ஆனால் உங்களுக்குப் பயம் காணற மாதிரி செய்யணும். நான் விசாரிச்சுப் பாத்துக்கலாம்னு சும்மாத் தலையாட்டிட்டு வந்துட்டேன். ஆனால் அமீர்பாய்க்கு வேண்டப் பட்டவர்னா எங்களுக்கும் வேண்டப்பட்டவர். உங்கள் வீட்டிலிருந்து தொடர்ந்து வரோம்.''

''ஏன், நேரிடையாக என்னோடு பேச வேண்டியது தானே? தொடருவானேன்?

''இதெல்லாம் சொல்லிக்க முடியாதுங்க. நீங்க எப்படிப்பட்டவர்னு முன்னாலே தெரிய வேணாமா? எடுத்த உடனேயே இந்த அடியை வாங்கிக்கிட்டா நான் என்னாத்துக்கு ஆறது? அதனால்தான் துணையோடு வந்தேன்.''

தர்மராஜனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. நால்வரும் சற்றுநேரம் மௌனமாயிருந்தனர்.

அவன் சற்றுத் தயக்கத்துடன் ''ஆனால் ஒண்ணு விளங்கல்லீங்க. இருந்தாப்போல இருந்து ஏன் திடீர்னு ஓட ஆரம்பிச்சீங்க? பேய் பிசாசு ஏதோ துரத்தின மாதிரி! அப்பிடி ஏதேனும் உங்கள் கண்ணுக்குப் பட்டுதா? அதெல்லாம் இருக்குதுங்க. இல்லேன்னு சொல்றவங்க பார்க்காதவங்க, உண்மை தெரியாதவங்க. இல்லே எங்களைப் பார்த்துட்டீங்களா? இல்லே நீங்க அவ்வளவு சுலபமாக எங்களைப் பார்த்திருக்க முடியாதே! நாங்க உஜாராத் தானே இருந்தோம்! எதைப் பார்த்து பயந்துட்டீங்க?''

அவன் அப்படிக் கேட்ட க்ஷணமே, தர்மராஜன், சந்திரன், தூரத்தில், ஒரு சிவந்த கண்போல் கடல் விளிம்பை உதைத்துக்கொண்டு கிளம்புவதைக் கண்டார். அலைகள் வெள்ளித் தகடுகளெனத் தகதகத்தன. பௌர்ணமி கழித்து இரண்டாம் நாள், கூடவே நெஞ்சிலும் நிலா உதயமாயிற்று. சட்டென ஒரு நூலை இழுத்ததால் சிக்கே பிரிந்தாற் போன்ற ஒரு தெளிவு கண்டார்.

''தம்பி ஒரு காரியம் செய்வையா?''

''சொல்லுங்க.''

''நரேனிடம் போய் நான் சொன்னதாகச் சொல்லுங்க. 'நாளை மாலை ஐந்து மணிவாக்கில் கமலாம்பிகை அம்மன் கோயிலுக்கு வந்தால், நீ என்னிடம் தேடும் பொருளுக்கு விளக்கம் கிடைக்கும்.' எங்கே சேதியைத் திருப்பிச் சொல்லுங்க!''

சொன்னான்.

''சரி அவ்வளவுதான்.''

அவர்கள் போய்விட்டார்கள்.

தர்மராஜன் வெகுநேரம் அவர்களைச் சிந்தித்தபடி அங்கேயே நின்று கொண்டிருந்தார். தீர்மானம் எடுத்த பின் வரும் ஒரு அமைதி தன் அகன்ற சிறகுகளை விரித்து அவர்மேல் இறங்கியது.

தர்மராஜன் அலைகளை வணங்கினார்.

தைரியம் என்பது என்ன? நம்பிக்கையிலிருந்து விடுதலை. நம்பிக்கையை இழந்தபின் உரித்த உண்மையை என் சொந்த அழகுக்குப் பங்கமில்லாமல் வரிப்பதுதான்.

அலைகள் பாட்டுக்குச் சிரித்துக் கொண்டிருந்தன. முன்னேயும்தான் சிரித்தன. இப்பவும்தான் சிரிக்கின்றன. அவை எப்பவும் சிரித்துக்கொண்டே தான் இருக்கும்.

8

இந்த நகை விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாரும்—கோமதி, நரேன், இன்ஸ்பெக்டர் ஸார், மனக்சந்த் சர்க்காருக்குப் பதிலாக அவருடைய மருமான்—எல்லாரும் நான் கேட்டுக் கொண்டபடி இங்கு சேர்ந்திருக்கிறீர்கள் நல்லது மணி, உனக்கும் இந்த விஷயத்துக்கும் நேரிடையாக சம்பந்தமில்லையானாலும் நான், நீ அறியாமலே இதில் உன்னை உபயோகப்படுத்தியிருக்கிறேன்.

இன்ஸ்பெக்டர்: கோமதி அம்மாள், நீங்க இங்கே வரச் சொன்னீங்கன்னு சொன்னாங்களேத் தவிர வேறு ஏதும் சொல்லவில்லை.

கோபிச்சந்த்: எனக்கும் அவ்வளவேதான் தெரிவிச்சாங்க.

தர்மராஜன்: பரவாயில்லை. இப்பத்தான் நான் படியைத் தலைகீழாகக் கவிழ்க்கப் போறேனே! ஒரு விஷயம் நான் இப்போது சொல்லப் போவதற்கெல்லாம் நான்தான் சாக்ஷி. நான் சொல்வதைத்தான் நீங்கள் நம்பியாகணும். நம்புவீர்களோ, மாட்டீர்களோ, ஏற்றுக் கொள்வீர்களோ மாட்டீர்களோ, என் வரையில் நான் உண்மையைத்தான் சொல்கிறேன். நடந்ததெல்லாம் நடந்தாச்சு, இந்தக் கூட்டத்தை நான் கூட்ட வேண்டிய அவசியமே இல்லை. உங்கள் எதிரே பஞ்சாயத்துக்கு நான் நிற்கவில்லை. ஆனால் சொல்லவேண்டியதைச் சொல்லி என் பிராயச்சித்தத்துக்கு எனக்குத் தெரிந்த வழி இதுதான்.

நகையை எடுத்தவன் நான்தான். எனக்காக எடுக்கவில்லை என்று என்னப் பூச்சுப் பூசினாலும் திருட்டு,

திருட்டுத்தான். நான் திருடினேன். சட்டத்தின்படி. தண்டனையை அனுபவித்தாயிற்று என்றாலும் மனிதச் சட்டம், நியாயம் இவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட உண்மையொன்று இருக்கிறது. அதன் படிவங்கள் எதிரே இப்போது நிற்கிறேன். அதன்படி நான் திருடின காரணத்தையும் சொல்கிறேன்.

கோமதிக்கு என்னால் முடிந்த உபகாரத்தைச் செய்ய வேண்டும் என்று அவள் நகையை எடுத்தேன். ஆனால் என் திட்டம் அவளுக்குத் தெரியாது. சிறையிலிருந்து வந்த பிறகுதான் ஓரளவுக்கு விவரங்களை அவளிடம் சொன்னேன். என் செயலில், அதன் முன்னும் பின்னும் எந்த விதத்திலும் அவள் உடந்தையே அல்லள். எத்தனை தடவை வேணுமானாலும் அடித்துச் சொல்கிறேன்.

கதையை சாங்கோபாங்கமாகச் செல்ல நேரமில்லை. அவசியமில்லை. ஆனால் தொட வேண்டிய இடங்களில் தொட்டுத்தான் ஆகவேண்டும். அதன்படி நான் சின்ன வயதிலேயே என் பெற்றோர்களை இழந்தேன். மணியின் தகப்பனார்தான் என்னை எடுத்து வளர்த்து எனக்கு உயிர்ப் பிச்சையிட்டவர். அவர் எனக்குப் பெரியப்பா. எங்கள் குடும்பம் பரம்பரையாக இந்தக் கோவிலில் அர்ச்சகர் வேலை பார்த்து வருகிறது. பெரியப்பாவிடம் ஜாதித் தொழில்படி தெய்வ ஆராதனைக்கு வேண்டிய ஸமஸ்காரங்களைக் கற்றுக் கொண்டேன். ஆனால் அந்தத் தொழிலில் நான் இல்லை. உத்யோக ரீதியில் என் பிழைப்பைத் தேடி வெளியூர் சென்றுவிட்டேன். பல வருடங்களுக்கு, என் வயதில் பாதி கழியுமுன் இந்தப் பக்கம் திரும்பவேயில்லை.

குடும்ப சூழ்நிலை காரணமாக திரும்பி செய்யும் வேலையை விட்டு, வேறு வேலைக்கு அமர்ந்த இடத்தில் கோமதியும் வேலை செய்து கொண்டிருந்தாள். கொஞ்ச காலத்துக்குப்பின். குடும்ப சூழ்நிலையில் அந்த வேலையை விட்டு ஊரே மாறிப் போனேன்.

பத்து வருடங்கள் ஓடியாடி அலைந்து வேலை செய்து, வயதுக்கு ஓய்வு பெற்று, ஒண்டியாகச் சென்னைக்கு திரும்பிய சீக்கிரத்தில் தற்செயலாகக் கோமதியை அவள் இப்போது உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்த இடத்தில் சந்தித்தேன். கோமதிக்கு இப்போது கலியாணம் ஆகிவிட்டது. ஆனால் அவளுக்குக் குடும்ப வாழ்க்கையில் அதிர்ஷ்டமில்லை. ஒரு ஸேட்டிடம் தன் நகையை அடகு வைத்து அதன்மேல். ரூ. 5000/ கடன் வாங்கியிருந்தாள்.

கோமதியை சந்தித்த முதல் நாளிரவு எனக்குத் தம்பி முறையாகும் மணியைக் கோவிலில் சந்தித்தேன். கோவிலுக்குக் காரணமாகத்தான் போயிருந்தேன். இவள் எங்கள் குல தெய்வமாச்சே! எங்கள் குடும்பம் பரம்பரை யாக பூசை செய்பவளாச்சே!

அன்றே தற்செயலாக, ஒரு தினசரித் தமிழ்ப் பத்திரி கையில் விளம்பரம் ஒன்று பார்த்திருந்தேன். மனக்சந்த் ஸர்க்கார் தனக்கு சமையல் செய்ய ஆள் தேவையென்று விளம்பரம் கொடுத்திருந்தார். அதே மனக்சந்த் சர்க்கா ரிடம்தான் கோமதி நகையை வைத்திருந்தாள்.

கோமதி விவரங்களைத் தெரிந்துகொண்டு இரவு என் அறைக்குத் திரும்பினதும், என் மூளை வேலை செய்யத் தொடங்கிற்று. அதனுடைய வேதனையே அதுதான். தூங்குகிற சமயத்தில்கூட மூளையினால் வேலை செய்யா மல் முடியாது. என் விஷயம் இந்த நிலைமைக்கு வந்ததே அதுதான் காரணம்.

இதே அடிப்படையில்தான், நான் விளம்பரத்தைக் காட்டி மனக்சந்த் சர்க்காரிடம் சமையலுக்கு அமர்ந்தேன். பொதுவாக நோட்டம் பார்க்கலாம் என்கிற எண்ணத்தைத் தவிர அப்போது திட்டமாக ஒரு வடிவமும் மனதில் ஏற்பட வில்லை. மனச்சந்த் சர்க்கார் வளர்த்துக் கொண்டிருந்த ஜூலி எனும் நாய் நான் எதிர்பாராத

அம்சம். ஆனாலும் அதை ஒரு அம்சமாக நினைக்க அப்போது தோன்றவில்லை. மேலும் சிக்கல் நான் பழகிய இரண்டு மூன்று நாட்களுக்குள் ஸேட்ஜி பக்கா பெரிய மனிதன் என்று கண்டுகொண்டேன். அவருக்கு சமயத்துக்கு நான் சகாயமாக இருந்த ஒரு சின்ன சம்பவத்தில் அவர் என்னைத் தன் சகோதரனாகவே வரித்துவிட்டார். ஆனால் கோமதிக்கு நான் உதவி செய்ய வேண்டும்.

என் புத்தி போன வழி இப்படித்தான்.

ஸேட்டின் ஸேஃபிலிருந்து நகையை ப்படியேனும் தூக்கிவிட வேண்டும்.

நானும் சமயம் பார்த்து என் வேலையிலிருந்து கழன்று கொள்ள வேண்டும்.

தாராளமான இடைக்காலம் விட்டு, என் சேமிப்புகளிலிருந்து ரூ. 5000-திரட்டி கோமதியிடம் கொடுத்து ஸேட்டிடம் தன் கடனை அடைக்கச் செய்ய வேண்டும்.

பணம் திரும்பியதும் நகையையும் திருப்பவேண்டியது தானே. ஸேட் ஸேஃபில் தேடுவார் காணோம். திகைப்பார். தேடுவார். திணறுவார். இப்படிக் கொஞ்ச காலம் கழித்தாலும் கோமதிக்கு ஜவாப் சொல்லியாகணுமே! ஒன்று நகையைத் திருப்ப வேண்டும். அல்லது அதற்குரிய விலையைக் கொடுத்தாகணும். இடையில் சிக்கல்கள் இருக்கின்றன. என்ன இருந்தாலும் கடைசியில் நடக்க வேண்டியது இதுதான். அப்படி ஸேட் கொடுத்தபின், கோமதியிடம் முன் பணமாக நான் கொடுத்ததை அவளிடமிருந்து வசூல் பண்ணிக் கொள்வேன்.

இன்னமும் நாள் கழித்து, ரொம்ப நாள் கழித்து, கோமதியின் நகையை அவளிடம் சேர்க்க வேண்டும். நிறைய சிக்கல்கள் இருக்கின்றன. நகை எப்படி என் கைக்கு வந்தது? கோமதிக்குத் தெரியக்கூடாது. கோமதி

நகையை வாங்கிக்கொள்ள சம்மதிப்பாளா? இதற்குள் ஸேட்ஜி சும்மாயிருப்பாரா? யார் யாரைச் சந்தேகப் படுவார். சந்தேகப்பட மாட்டார்? ஆனால் அவர் என்னைத் தேட ஆரம்பிக்கும்போது நான் எங்கே இருப் பேனோ? இந்த ப்ரச்னைகள் அவ்வப்போது நேரும்போது, நேர்ந்தால் சமாளிக்க வேண்டிய விஷயங்கள்.

இங்கே இரண்டு கேள்விகள் எழுகின்றன. எனக்கே தெரியும், இப்பவே பதிலும் சொல்லி விடுகிறேன்.

இந்த வம்பு எல்லாம் எதற்கு? கோமதியின் பேரில் உனக்கு உண்மையான அனுதாபமிருந்தால் உன் பணத்தை வெகுமதியாகக் கொடுத்து அவளை நகையை மீட்கச் சொல்ல வேண்டியதுதானே?

ஐயாமார்களே, எனக்கு அந்த அளவு வசதியில்லை. எனக்குக் கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசையாக இருந் திருக்க வேண்டும். அதைவிட இந்த ஆங்கிலப் பழமொழி இங்கு இன்னும் சாலப் பொருந்தும். எனக்குக் கையிலும் தோசை குறையக்கூடாது. தின்னவும் வேணும். இது எவ்வளவு பெரிய துராசை என்று பின்னால்தானே தெரிந்தது? அதன் விளைவைத்தானே இன்னமும் அனு பவித்துக் கொண்டிருக்கிறேன்!

இரண்டாவது கேள்வி இவ்வளவு ரிஸ்க் எடுத்துக் கொண்டாவது கோமதிக்கு உதவி செய்ய வேண்டும் என்று உனக்குக் கோமதிமேல் ஏன் இந்தக் கரிசனம்? அவள் உனக்கு உற்றாரா உறவா?

ஆமாம் மண்டையில் ஆணி அடிக்கும் கேள்வி அதே பளிச்சுடன் இதற்கு என்னால் பதில் சொல்ல முடிய வில்லையே! இதே கேள்வியைத்தான் கோமதியின் கண வனும் என்னைக் கேட்டான். ஆனால் வேறு பாஷையில்.

நான் நினைக்கிறேன். வாழ்க்கையில் சில கேள்வி களுக்குப் பளிச்சென்ற பதில்கள் என்றுமே கிடைக்காது. அதனால் சொல்லும் பதிலில் உண்மையில்லை என்று

வாதாட முடியாது. உண்மையை என் நெஞ்சுக்கு விரோத மில்லாமல் சொல்லலாம். ஆனால் அதன் நாணயத்தையும் என்னால் பிற மனதுக்குள், என் பதிலுடன் செலுத்த எனக்குச் சக்தியை சிருஷ்டி கொடுக்கவில்லை. சில பதில் களை நிரூபிக்கவே முடியாது. 'என்னை நம்பு' என்று கேட்டாலே நான் சந்தேகத்துக்கு உரியவனாகிறேன். ஆகவே சொல்கிறேன். என் சொல்லுக்கு நான்தான் சாக்ஷி.

ஆம், கோமதிமேல் எனக்கேன் இவ்வளவு கரிசனம்? பாசம் நேர்வதற்கு உறவு, காரணங்கள் அவசியமில்லை. நாம் நினைக்கிற மாதிரி பாசங்களில் அப்படி ஒன்றும் அசாதாரணமும் இல்லை. சில பேருக்கு ஒருவரையொருவர் பிடித்துப் போகிறது. அவளுடைய நிலையில் அவளுக்கு என் போன்ற வயதானவனின் பேச்சு, ஒரு தைரியம், துணை, ஆறுதலாக இருக்கலாம். என் வாழ்க்கையிலும், நான் பிரியத்துக்கும் ஆறுதலுக்கும் அரவணைப்புக்கும் ஏங்கினேனோ என்னவோ? இந்த இடத்தில் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. என் குடும்ப வாழ்க்கையில் நான் துர்ப்பாக்கியன். கோமதி வயதில் எனக்கு ஒரு பெண்— அவள் எங்கிருக்கிறாள் என்றுகூட எனக்கு இப்போது தெரியாது. இல்லை இருந்தாள் என்று சொல்ல வேண்டுமா அதுவும் தெரியாது. என் பெண்மேல் பாசமெல்லாம் வடிகால் தேடி, அப்படியே கோமதியிடம் திக்குத் திரும்பி விட்டதோ என்னவோ? ஐயா, நான் ஒரு கல்மிஷமும் இந்த உறவில் அறியேன், அறியோம். இதுபற்றி எனக்குத் தெரிந்த உண்மை இதுதான்.

சரி விஷயம் தண்டவாளம் மாறுமுன் மீள்கிறேன்.

இதற்குள், நகையைத் திருட, என் திட்டம் உருக் காட்டி விட்டது. நானும் செயல்பட்டேன்.

அன்றிரவு ஸேட்ஜியின் டானிக்கில் தூக்க மாத்திரை யைக் கலந்தேன். ஸேட் ஒரு நோயாளி. ஆஸ்துமா.

அவரைச் சுற்றி மாத்திரைகள், திரவ மருந்துகள், சீசாக்களுக்குக் குறைச்சலே இல்லை.

நான் உணவிலும் தூக்க மாத்திரையைக் கலந்தேன்.

ஸேட்டின் சாவிக் கொத்து இருக்குமிடம் எனக்குத் தான் இதற்குள் தெரியுமே! கீழே இறங்கி ஸேஃபைத் திறந்து லாக்கரிலிருந்து கோமதியின் பெயர் சீட்டுக் கட்டித் தொங்கிய பையைத் தேடி எடுத்துக் கொண்டேன். பழையபடிப் பெட்டகத்தைப் பூட்டி, சாவியை எடுத்த இடத்துக்குத் திருப்பிவிட்டு-என்னால் நினைத்துப் பார்க்க முடிந்த அளவுக்கு எல்லா எச்சரிக்கைகளையும் எடுத்துக் கொண்டேன் என்று சொல்ல வேண்டியதில்லை. நகையைப் பத்திரப் படுத்திவிட்டுத் திரும்பி வந்து படுத்து ஆகாயத்தை அண்ணாந்த பின் யோசனை அதன் ஓயாத வேலையை செய்யத் தொடங்கிவிட்டது. நகையை இழந்தபின் சும்மா விடுவானா? நினைக்க நினைக்கப் புதுப்புதுப் பயங்கள் தலை காட்ட ஆரம்பிததுவிட்டன.

இந்தமாதிரி காரியத்துக்கு எல்லாம் நாம் லாயக்கில்லை. இன்றைக்கு இனிமேல் நேரமில்லை. நாளைக்கு நகையை ஸேஃபில் திரும்ப வைத்துவிட்டு 'நமக்கேன் பாடு? கோமதிக்கு என்னால் இயன்ற உதவி செய்து விட்டு ஒதுங்கிவிடுவதுதான் சரி' என்ற முடிவுக்கு வந்தேன்

ஆனால் மறுநாள் காலை நடந்தது என்ன? நான் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? ஸேட் படுக்கையில் கிடந்தார். அப்படியிருந்தால்கூட பரவாயில்லை. ஸேட்டுக்கு இதயம் பலவீனம், தூக்கத்தில் இறந்து விட்டார் என்று (வைத்ய சோதனைப்படி, உண்மையும் அதுதான்) விஷயம் முடிந்திருக்கும். ஆனால் மருத்துவ சோதனையில் நாயின் உணவிலும் மருந்து கலந்திருந்தது வெளிப்பட்டதும் இந்த விவகாரத்தில் என் எண்ணமும் நடத்தையும் அப்படி ஒன்றும் வெள்ளையில்லை—அதுவும்

உண்மைதானே!- என்று மாட்டிக் கொண்டேன். அப்பவும் நகை அகப்படவில்லை. போலீஸில் வன்முறைகளையும் சமாளித்துக் கொண்டு பிடிவாதமாக நகையைப் பற்றிய எந்தத் தகவலையும் நான் வெளியிடவில்லை. அதற்குரிய தெம்பு எனக்கெப்படி வந்ததோ இன்னும் திகைப்பில் தான் இருக்கிறேன். காரணம், எக்காரணத்தைக் கொண்டும் என்னால் கோமதிக்கோ அவள் வேலைக்கோ எவ்விதத் தொந்தரவும் ஏற்படக் கூடாது.

சந்தர்ப்ப சாக்ஷியத்தில் நகைத் திருட்டுக்காக சிக்ஷை யடைந்து அதை அனுபவித்துவிட்டு வெளியேயும் வந்து விட்டேன்.

தண்டனையை அனுபவித்து விட்டாலும் மனதில் நிம்மதியில்லை. நகை என் வசத்திலிருக்கும் வரை எனக்கு நிம்மதி கிட்டாது என்று அறிந்தேன். ஏனெனில், வெளி வந்து பத்துப் பன்னிரண்டு நாட்களுக்குள் நான் தெருவில் சவுக்கத்தை விரித்து, புல்லாங்குழல் வாசித்துப் பிச்சை யெடுத்துக் கொண்டிருக்கையில் தற்செயலாக கோமதியின் கண்ணில் பட்டுவிட்டேன். விட்ட இடத்திலிருந்து விதி யின் சங்கிலி தன் கொக்கிகளைத் தன் இரக்கமற்ற கதியில் மீண்டும் முடையத் தொடங்கிவிட்டது. இன்னொன்றும் தெரிகிறது. 'தற்செயல்' என்பதேயில்லை. செயலின் வழியும் கதியும் நமக்குப் பிடிபடுவதில்லை அவ்வளவு தான்.

தவிர மனிதச் சட்டம், சமுதாயத்தின் பார்வைகள் இவைகளைத் தாண்டியது உண்மையும் அதன் நியதியும். அதுவும் நம்மை விடாது. நாமும் அதைத் தப்ப முடியாது. அது பிடியும்படாது. ஆகையால் இப்போது நான் உங்கள் எதிரில் நிற்கிறேன்.

இன்னும் ஒரு கேள்விதான் பாக்கி. நகை எங்கே?

என் பெரியப்பா, தான் பெரிதாகக் கருதிய பொருள்கள், சில தஸ்தாவேஜுகளை பத்திரப்படுத்தியிருக்கும் இடத்தை எனக்குச் சொல்லியிருந்தார். தன் மகனைவிட என்னை, ஏன் தன் நம்பிக்கைக்குப் பாத்திரமாகக் கருதினார்; அது அவருக்குத்தான் வெளிச்சம். அவருடைய இஷ்டம். அங்கேதான் கோமதியின் நகை இருக்கிறது, இந்தக் கோவிலுள், அம்மன் கர்ப்பக்ருஹத்துள். அந்த இடம் மணிக்குக்கூடத் தெரியாது. அப்படித்தான் பெரியப்பா இஷ்டம். முந்தி கோவில் சாவி, பல சௌகரியங்களுக்கு ஒரு கல்லின் வெடிப்புக்குள் சொருகியிருந்தது. ஆனால் நான் சிறைக்குச் சென்றபின், தர்ம கர்த்தாவின் கட்டாயத்தின்படி, மணியிடம்தான் இருக்கிறது. மணி வா, அம்மன் வாசல் கதவைத் திற.

மணி கதவைத் திறந்துவிட்டு வியப்புடன் தர்மராஜனைத் தொடர்ந்தான். தர்மராஜன் தன் சட்டையைக் கழற்றி எறிந்து வெறும் உடம்புடன், அம்பாளின் பின்புறத்தில் அவள் பீடத்தில் துழாவினார். பீடத்தின் அடிப்பாகம் அகலமாக ஆரம்பித்து, படியாகக் குறுகி, தாமரையில் அவள் நிற்கிறாள். தெரிந்தவனுக்கும் தேடித் தேடினால்தான் கிடைக்கும்.

பெரியப்பா தன் பிள்ளையைக்கூட நம்பவில்லை.

தயாராகக் கொணர்ந்திருந்த பென்சில் 'டார்ச்சி'ல் ரொம்பவும் உஷாராகத் தேடினதில் விளிம்பின் கோடு— வெகு நுட்பமான கோடு— வெகு நுட்பமாக விரல் ரேகைக்கு இடறிற்று.

ஜாக்கிரதையாக அதன்மேல் விளம்பிக்கொண்டே அதன் வழி போனதும், கல்லின் கறுப்போடு கறுப்பாய் இத்தனை காலமாக வடிந்து வறண்டு போன எண்ணெய்ப் பிசுக்கோடு பிசுக்காய், அதுவே ஒரு பிசுக்குருண்டை போல்,—

ஆ, அகப்பட்டுக் கொண்டாரய்யா?

பொத்தானை அழுத்தியதும் ஒரு குறுகிய கல் கதவு விட்டுக் கொண்டாற்போல—விட்டுக் கொள்ள வில்லை—திறந்துகொண்டு தொங்கிற்று. பிரதிஷ்டையோடேயே, சிற்பியின் வேலைத்திறன் கட்டுத்திறன். உள்ளே கை விட்டுத் துழாவியதும், அன்று பெரியப்பா தனக்குக் காண் பித்தபடியே ஓலைச்சுவடி, ஏதேதோ புத்தகங்கள், ஒரு ஸ்தாலி, எழுத்தாணி.

"இந்தாப்பா மணி, பார்த்துக்கோ ஓலைச்சுவடி. கோயில் பூஜையில் என் உரிமையை ஸ்தாபிக்கும் சாஸனம். நான் சும்மா ஜாலல் காண்பிக்கவில்லை என்று உனக்கு நிச்சயமாச்சா? இல்லை உன்னிடம் இப்போதைக்குக் கொடுக்கப் போவதில்லை. உன் ஆத்திரத்தில் கிழித்துப் போட்டுவிடுவாய். நகல் வேணுமானால் எடுத்துத் தருகிறேன். இப்போ நேரமில்லை. இப்பவே ஏதேனும் விஷமம் பண்ணாதே. பண்ணினையோ இத்தனை பேரும், போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்பட—சாக்ஷி ஆ!"

நகைப் பையை எடுத்து வெளியே வந்தார்.

"நான் இதைத் திறந்துகூடப் பார்த்ததில்லை. இது கோமதியின் நகை போலச் சீட்டு தொங்குகிறது பார்த்தீர் களா? ஆனால் இதன் மேல் கடன் பாக்கியிருக்கும் வரை இதற்கு அதிகாரம் கடன் கொடுத்தவருக்குத்தான். மனக் சந்த் பாய் இப்போ இல்லை. அதனால் அவருடைய வாரிசிடம் இதை எல்லோர் முன்னிலையிலும் சேர்த்து விடுகிறேன், இந்தாங்க கோபிச்சந்த்பாய்!"

கோபிசந்த் பையை அவிழ்த்து சங்கிலியை எடுத்தான். ஒற்றை வடம் கன கெட்டியாய், சற்று ஒளிமங்கி, லேசாக உயிர் கொண்டு, இரை தின்ற குட்டிப் பாம்புபோல் அவன் கைகளில் சோம்பித் துவண்டது. யோசனையாக, ஓரிரண்டு நிமிடங்கள் கையில் தூக்கிப் போட்டுப் பிடித்துக்

கொண்டிருந்தான். அஞ்சு பவுனா? வெட்கக் கேடு, என்ன எடையோ, அவனுக்குக்கூடத் தெரியாது. அவனுடைய அந்த மார்வாரிக்கைதான் உணரும்.

''இதன்மேல் கடன்பத்திரம் எப்பவோ காலாவதியாகிப்போச்சு. இந்த நகைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. மிஸ்டர் தர்மராஜன் இன்னிக் காலையில் எனக்குப் பெண் குளந்தை பிறந்திருச்சு. கோமதியம்மா, நகைக்கு சொந்தக் கார் உங்களுக்கு இதோ வாபஸ்...''

கோமதி நகையை வாங்கிக் கொண்டாள். அதைப் பார்க்கக்கூட இல்லை. நேரே அம்பாளிடம் சென்று அவள் கழுத்தில் போட்டு சரிப்படுத்தினாள்.

இன்ஸ்பெக்டர் தர்மராஜனிடம் வந்து கையைக் குலுக்கினார். ''தாங்க்யூ...ஃபைல் க்ளோஸ்...''

எதுவும் சொல்லாமல் அங்கு விட்டு விலகியது யார்?

பாவம், நரேன், நான் உனக்கு ஒன்றும் செய்வதற்கில்லை.

மணி ஓலைச்சுவடியைக் கொண்டு வந்து திருப்பிக் கொடுததான். ''இன்னி பூஜை உன்னுடையதா? என்னுடையதா?'' என்றான்.

அவளைத் தான் கேட்கணும்.

அவள் என்ன சொல்கிறாள்?

சிரிக்கிறாள்.

9

சுற்று முற்றும் பார்த்தால் வந்திருக்கும் இடம்கூடத் தெரியவில்லை. வழக்கம்போல் எங்கோ புத்தியில் வெகு தூரம் வந்துவிட்டதைக் கால்களின் வலி உணர்த்திற்று. கால் என்ன, உடம்பே சலித்துவிட்டது.

நல்ல வேளை அதோ பஸ் ஸ்டாப். சிமிட்டிப் பெஞ்ச், முதுகுக்குச் சாய்வுடன். போய் அமர்ந்து ஒரு முறை கால்களை விறைப்பாக நீட்டி "உஸ்...!" அப்பாடி! என்ன சுகம்!

சந்தடி அடங்கிப் போய்விட்ட தெருவின் கட்டிடங்களின்மீது பால் பிழிந்து கொண்டிருந்தது. பௌர்ணமி தாண்டின நாலாவது நாள். உதயம் தாமதமாயினும், சற்று விள்ளல் தெரிய ஆரம்பித்துவிட்டாலும் ஒளியும் குளுமையும் குன்ற ஆரம்பிக்கவில்லை. ஊரடங்கிவிட்ட முதிர்ந்த இரவு. கிழவர் மறுபடியும் பெருமூச்செறிந்தார்.

உடம்பு ஓய்ந்து போயிருந்ததே தவிர, மண்டையுள் குதிரை ஓடிக் கொண்டிருந்தது, பந்தயக் குதிரை. பனி வெள்ளை. அவ்வப்போது உதறிக்கொண்ட பிடரியிலிருந்து ஒருவிதமான செருக்கும் பொறுமையின்மையும் சிந்தின. விழிகளில் சுபாவமான பெரும் உற்சாகத்துடன் சுபாவமான சிறுவிசனம் சேர்ந்து அதன் ஓட்டத்துக்கு ஒரு வெறி அழகு தந்தது. மூளையுள் வட்டமடித்துக் கொண்டு ஓட்டம் பழகிக் கொண்டிருந்தது.

கோமதியிடம் இன்னும் பேச்சு எடுக்கவில்லை. ஆனால் விடுதலை பெற வேண்டும். இனிமேல் எந்த வாசல் படியின் தூசோ, உறவின் பிசுக்கோ என்மேல் ஒட்ட விட மாட்டேன். உண்மையில் யார் பிரச்சனையை என்னால் தீர்க்க முடிந்தது? தலையிட்டு, தலை தப்பினது தம்பிரான் புண்ணியமாப் போச்சு.

காலையிலிருந்து அஸ்தமனம் வரை நடையாகவே நடந்து, கிடைத்ததைக் கொண்டு வயிறு அலம்பி, அந்தந்த இடத்தை அங்கேயே கையலம்பிவிட்டு மர நிழலோ சத்திரமோ, திண்ணையோ, குளக்கரையோ...

இந்த ஆசையில் ஒரு romanticism, ஒரு முட்டாள் தனம்கூட இருப்பது தெரியாமல் இல்லை. நடைமுறைக்கு ஒத்தும் வரும் என்று தோன்றவில்லை. ஆனால் நான் வாழ்க்கையை என்ன அப்படிப் பெரிதாகக் கேட்டு விட்டேன்? ஆனால் என் தலையெழுத்து, என் அற்ப ஆசைகூட ஒரு வரம் அல்லது கண்டமாகி விடுகிறது.

உண்மையிலேயே என் இயல்பில் எனக்குப் பெரிய தேவைகள் வேண்டாம் கோபிச்சந்து. கொடுத்த காசோலை அப்படியே தூங்குகிறது. வங்கியில் என் பழைய தொகைகளை வாங்க நான் இன்னும் முயற்சி எடுக்க வில்லை. நேற்று கோவிலில் சந்தித்தபோது கோபிச்சந்த் சொல்லிவிட்டான், இந்த வாரம் கட்டாயமாக வேலை விஷயமாக வந்து பார்க்கச் சொல்லியிருக்கிறான். அப்புறம் ஜப்பானுக்குப் போய்விட்டால் திரும்ப நாலு மாஸம் ஆகுமாம்.

ஆனால் உண்மையில் எனக்குத் தேவைதானா? என் புல்லாங்குழல் எனக்குப் பற்றாதா?—

கறுப்பாக ஒரு உருவம் அவரைக் கடந்து சென்றது. முகம் தெரியவில்லை. தலைக்கு முக்காடு. கால்கூடத் தெரியாத படிக் கறுப்பு போர்த்திய உருவம்.

அவரைத் தாண்டிச் சென்றபின் தயங்கி நின்று திரும்பி நேரே அவரிடம் வந்தது. அப்போக்கூட முகத்தை சாமர்த்தியமாக மறைத்துக்கொண்டு,

''மணி என்ன?'' பெண் குரல்.

''தெரியாது.''

''ஏன், ரிஸ்ட்வாட்ச் இல்லே?'' கேட்டுக்கொண்டே கையைப் பிடித்தாள்.

''வரீங்களோ?''

தர்மராஜன் வெலவெலத்துப் போனார்.

''நான்...நான்''—நாக்கு ஏதோ குழற முயன்று இழுத்துவிட்டது.

''வீடு கிட்டத்தான் இருக்கு. சுத்தமாயிருப்பேன். இஷ்டப்பட்டதைக் கொடுங்கள்—நான் ரேட்டுப் பேச மாட்டேன்...''

முகத்தையும் மறைத்த முக்காடு விழுந்தது.

''மதூ! மதூ!!'' தர்மராஜன் அலறினார்.

மிரண்டுபோய் அவள் பின்னடைந்தாள். நிலவொளி அவர் முகத்துக்கு விளக்குப் பிடிப்பதுபோல் நேரிடையாக அவர்மேல் பட்டது.

''அப்பா!'' ஓடிவந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

* * *

ஐயா, அங்கே எங்கே போறீங்க, இங்கே வாங்க. அங்கே இப்போ நாம் லாயக்கில்லே. கண்ணீருக்குக் கண்ணீர் சங்கமம் நடக்கிறது. அதற்கெதிரே த்ரிவேணியும், பிரயாகையும், பாபநாசமும், குற்றாலமும் என்ன செய்ய முடியும்?

இதுவரை நீங்கள் கேட்டது கதையாகவே இருந்து விட்டுப் போகட்டும். இந்த சமயத்துக்கு சாக்ஷி நாம் நிற்க முடியாது. வேண்டாம். வாங்க போவோம்.

* * *

சந்திரன் மண்டை உச்சிக்கு வந்துவிட்டான். வானத்தின் முழு நீலத்தில் நக்ஷத்ரக் கூட்டங்களின் நடுவே தனி சவாரி செய்கிறான். ஊர் உறங்குகிறது.

தன் ஒளியை அதோ கீழே தெரியும் சிறு கோவில் கோபுரத்தின் ஒற்றை ஸ்தூபி மேல் பொழிகையில், ஸ்தூபி வெள்ளியாக மாறுகிறது.

உள்ளே, கர்ப்பக்ருஹத்தின் மையிருளில்—ஆம் அந்தத் தூங்கா விளக்குக்கூட அவிந்துவிட்டது—எண்ணெய் போதவில்லை—அவள் நின்று கொண்டிருக்கிறாள். வருடக் கணக்கில் நின்று கொண்டேயிருக்கிறாள், இருண்ட நெஞ்சங்களில் அவள் முகத்தில் ததும்பும் கருணை வெளிச்சத்தை, தெளிவை, தென்பைத் தந்துகொண்டு. குழந்தைகளா, தூங்குங்கள் நான் காவலிருக்கிறேன்.

சிக்குப் பிடித்த ஆடையில் கமலாம்பிகை பரதைக் குட்டியாகத்தான் நிற்கிறாள். அவளுடைய ஜாஜ்வல்யமான புன்னகைதான் அவளுடைய நகை, நம்முடைய சொத்து.

வேறு என்ன வேண்டும்?